139960

39-2-80
181
2008

# VELAN MARAPIYAL.




Accn. No. 29960
No of Pages: 154

45927 V
M80

139860
சென்னை-600 008.

உ

# வேளாண்மரபியல்.

வேளாளர்களுக்கும், சென்னைமியூனிசிபல் கம்மிஷனர்களு
க்கும், நடந்த இங்கிலீஷ்சரித மொழிபெயர்ப்பும்,
அதன்
உபந்நியாசமும்.

இதனை
இங்கிலீஷ்பயிர்ச்சி யில்லாதவர்களுக்கும் உபயோக
மாகும்படி தமிழில் மொழிபெயர்த்துத்
தரவேண்டுமென்று
பாண்டூர்மிட்டா ஜமீன்தார்
ம-ள-ள-ஸ்ரீ.
குன்றத்தூர் - சோமசுந்திரமுதலியாரவர்கள்
விச்சூர்மிட்டா ஜமீன்தார்
ம-ள-ள-ஸ்ரீ.
திருவூர் - தெய்வநாயகமுதலியாரவர்கள்
இவர்கள் கேட்டுக்கொண்டபடி,
சென்னைத் துரைத்தன சங்கத்தமிழ்ப்புலமை
சமரசவேத சன்மார்க்கசங்கம்
ம-ள-ள-ஸ்ரீ. தொழூவூர் - வேலாயுதமுதலியார்
அவர்களா லியற்றப்பட்டு;
ம-ள-ள-ஸ்ரீ.
கூடலூர் குப்பயப்பிள்ளை
அவர்களால் அச்சிற்பதிப்பிக்கபட்டது.

Madras:
PRINTED AT THE SCOTTISH PRESS BY GRAVES, COOKSON & CO.
1880.
*Copy-Right Registered.*

# விளம்பரம்.

☞ இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் முத்தியாலுபேட்டை இராமசுவாமிதெரு-20 - வதுநெம்பர் வீட்டில் கூடலூர் நமசிவாயப்பிள்ளை யிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகத்தின் கிரயம்............... அணா. அ

தபால் செலவு....................... ,, க.

# விளம்பரம்.

மகாகவியாகிய, கம்பரால் செய்யப்பட்ட ஏரெழுபது மூலம் கச்சித்தலைச் செங்கோட்டத்துறுவனார் மகனார் திருநாகக்தையார்செய்த வுரையுடன் அச்சிற் பதிப்பித்து வருகின்றது. வேண்டியவர்கள் மேற்கண்டவரிடம்பெற்றுக்கொள்ளலாம்.

## விளம்பரம்

இந்த மரபைப்பற்றிய பூர்வகிரந்தங்கள், சாசனங்கள், சரித்திரங்கள் முதலியன, அனேகம் உள்ளன. அவை எங்களுக்குக் கிடைத்தமட்டில் சிலவற்றை உதகரித்து வெளிப்படுத்தி யிருக்குமோமாதலால், அவரவர்களிடத்தில் ஷை விடயங்களிலே தேனுமிருந்து எங்களுக்கு அனுப்பு விப்பார்களானல், அதை வெளிப்படுத்த மிகுந்த ஆவலுள்ளவர்களா யிருக்கிறோம்.

## அட்டவணை.


| | பக்கம் |
|---|---|
| வேளாளர் சென்னைமியூனிசிபல் கம்மிஷனர்களுக்கு யெழுதிக்கொண்ட அர்ஜி... ... ... | ௧ |
| ,, பயிரிடல்.... ... ... ... | ௪ |
| ,, கோசம்ரக்ஷணம்... ... ... ... | ௭ |
| ,, வாணிபம்... ... ... ... | ௮ |
| ,, வட்டிக்குப்பொருளீட்டல் முதலியவைகள் ... | ௯ |
| ,, அனுபந்தம். ... ... ... | ௨௧ |
| வேளாளருக்குப் பண்ணையாள் எழுதிக்கொடுத்த அடிமை சாதனம்... ... ... ... | ௫௬ |
| மியூனிசிபல் கம்மிஷனர் வேளாளர்களுக்கு எழுதிய வுத்தரம். ... ... ... ... | ௬0 |
| உபந்நியாசம்... ... ... ... ... | ௬௧ |
| ,, பீடிகை... ... ... ... ... | ,, |
| ,, வருணாச்சிரமவேற்பாடு. ... ... | ௬௩ |
| ,, உழவு. ... ... ... ... ... | ௭௨ |
| ,, சதுர்வருணத்தார்பொருளீட்டும்வகை ... | ௭௭ |
| ,, வேளாளர்கருமவிஷயங்கள் ... ... ... | ௮௩ |
| ,, உபநயநவிதி. ... ... ... ... | ௮௪ |
| ,, ஆசுசவிதி... ... ... ... ... | ௮௫ |
| ,, ஸ்ரீசூத்திரர்வேதம் ஓதலாகாதெனல். ... | ,, |
| ,, வேளாளர் ஓதல்விசாரம்... ... ... | ௮௬ |
| ,, ,, புராணம்பாசநூலெனல். ... | ௮௭ |
| ,, ,, வேதம்பசுநூலெனல். ... ... | ௮௮ |
| ,, ,, ஆகமம்பதிநூலெனல்... ... | ௮௯ |
| ,, ,, உபநிடதம் அநுபவநூலெனல் ... | ௯0 |
| ,, ,, உபயவேதம்... ... ... | ௯௧ |
| ,, உபவீதம்... ... ... ... ... | ௧0௧ |
| ,, வேள்வி. ... ... ... ... | ௧0௬ |

பக்கம்.

„ வைசியதருமம். ... ... ... ... ௧௧௨
„ „ விற்றற்குரியபண்டங்கள் ... ௧௧௪
„ „ ஆனிரையோம்பல் ... ... ௧௧௫
„ „ வைசியன் அறுவகைத்தொழில் மூவகைச்சீவனம்... ... ... ௧௧௬
„ „ வைசியன்சிறப்புத்தருமம்... ... „
„ „ வைசியதருமத்தின்பயன் ... ௧௨௦
„ „ வைசியன் இவ்விதி தவறியவழிவருங்குற்றம்... ... ... ... „
„ சூத்திரராவாரிவரெனல் ... ... ... ௧௨௧
„ சூத்திரர்க்குரிய இழிதொழிலும் இரத்தலும் வேளாளர்க்கு யாண்டுமின்றெனல். ... ... ௧௨௪
„ வேளாளர் சூத்திரரேல் வைசியத்தொழில்செய்வதற்கு அரசனால் ஒறுக்கப்படுவர் ... ௧௨௭
„ வேளாளர் சூத்திரரேல் அகத்தியர் உழவினை இவர்களுக்கு விதியார். ... ... ௧௨௯
„ கலியில் க்ஷத்திரியவைசியரில்லை யென்பதனை மறுத்தல்... ... ... ... ௧௩௦
„ கோத்திரம். ... ... ... ௧௩௨
„ வேளாளரைச் சூத்திரரென்ற தப்புவழக்கிற்கு காரணம்... ... ... ... ௧௩௩
„ ஜாதிகுலம் பொய்யென்ற நூல்களின் கருத்து. ௧௩௬
„ வருணாச்சிரமங்களின்பயன்.... ... ௧௩௮
„ வருணாச்சிரமங்கள் சில தேசங்களிலில்லாததற்குக்காரணம்... ... ... ... „
„ வருணாச்சிரமங்கள் தேயவொருமைக்குமாறன்றெனல் ... ... ... ... ௧௪௦
„ வருணாச்சிரமங்கள் பரம்பரைப்பற்றி வருவதின் பயன். ... ... ... ... ௧௪௧
„ சிதறியவொழுக்கஞ் சீர்பெறச் செய்யவேண்டுமெனல்... ... ... ... ௧௪௨




# சென்னைப்பட்டணம்.
# மியூனிசிபல் கம்மிஷனர்களுக்கும் சபைத் தலைவருக்கும்.

தனவான்களே,

௧௮௭௧-ம் வருத்திய ஜனத்தொகை ஏற்பாட்டில் பிரம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரரென்னும் நால்வகை வருணக்கிரமப்படி இந்துக்களை வகுக்கத்தொடங்கியதில், நகரவிசாரணை சபையார் வேளாளரைச் சூத்திரரிற் சேர்த்திருப்பது தகுதிக்குறைவும் நியாயவிரோதமுமாக விருத்தலைப்பற்றித் தெரிவிக்கின்றோம்.

சாதியானது சமயத்தோடு சம்பந்தமுடையதாயிருத்தலால், தற்காலத்தில், ஹிந்துக்களுள் வழங்கு மனேக சாதிகளையும், அவைகளின் றலைமை ஒழுக்க முறைமையையும், சரியாய் வகுப்பதற்கு, தக்க சமய நூல்களையும், பண்டைய வழக்கையும் விசாரிக்கவேண்டுமே அல்லாமல், பிறரால் அரிது முயன்றுஞ் சிதைவுபடாத பழைமைச் சிறப்புடையதாய்ப் பெருத்த அதிகாரத்தால் வீழ்த்தப்படாத அச்சாதி விசார விடயத்தில், சாமானியர்களுடைய சிறுதேற்றத்துத் திருத்தமில்லாத ஆராய்ச்சி அமையாது.

இந்துக்கள் இச்சாதி ஏற்பாட்டை தேவ நிருமாணமாகவே குறிப்பிக்கிறார்கள். எவ்வாறெனில், மநு ௰௪-வது பக்கம்-௮௭-வது சுலோகத்திற் கூறியபடி, பிரமாவின் முகத்தினின்று பிராமணனும், புயத்தினின்று க்ஷத்திரியனும், தொடையினின்று வைசியனும், பாதத்தினின்று

சூத்திரனும், உற்பவித்ததாகக்கொண்டிருக்கின்றார்கள். * இந்நால்வகைச் சாதியும் அவ்வாறே யுள்ளபடி தோற்றமுடையவைதானோ, அல்லது, வேறோருட்கருத்தை யுடையதாய்ப் புனைந்துரைக்கப்பட்ட ரூபகவிவகாரமாவென்று, இவ்விடத்தில் நாம் விசாரிப்பதற்கு நமது சுவாதீனத்தியில்லை. ஆனாலும், மநு ௮௮-முதல் ௯௧-வரையில் விதித்தபடி சர்வஜன சம்மதமாவது அனைவருடைய மறுமையதாகிய ஆன்மார்த்தங்களுக்குத் துணைநிற்குங் கடமை பிராமணனுக்கு விதித்தலால் அவன் அவருள் முதலிடத்தானென்றும், அவ்வவர்களுடைய இம்மையதாகிய லௌகிக விவகாரங்களைக் காக்கும்படி சுமத்தலால் க்ஷத்திரியன் இரண்டாமிடத்தானென்றும், உழவு-வாணிபம் - பசுக்காத்தலாகிய வினைகளை வைசியனுக்கு நியமித்தலால் அவன் மூன்றாமிடத்தானென்றும், அம்மூன்று வருணத்தார் தொழிற்கு முதவியாகவும் சௌக்கிய சம்ரட்சணைக்கு உபயோகமாகவும் அவரிட்ட கட்டளைப்படி நடப்பது கடமையாகச் சூத்திரனுக்குப் பணித்தலால் அவன் கனிஷ்ட ஸ்தானத்தான் அல்லது நாலாமிடத்தானென்றும் கொள்ளப்படும்.

அவருள் வேளாளர்கள் பின்னிரு வகுப்பினுள் எவ்வகுப்பாரென்பது இப்போது தீர்மானிக்கவேண்டியது முக்கியாமிசம். ஆதலால், அவ்வேளாளர்கள் வைசிய லக்ஷணத்துள் அடங்குவார்களன்றி சூத்திரராகாரென்பதை விவகரிக்கின்றோம். வைசிய லக்ஷணமாவது இவ்

---

* வேதப்பிரமாணமும் யிதுவேயாம் - வருமாறு.
இருக்குவேதம் - புருஷசூக்தம்.
బ్రాహ్మణోస్య ముఖమాసీత్ బాహూరాజన్యః కృతః।
ఊరూతదస్యయద్వైశ్యః పద్భ్యాంశూద్రో అజాయత॥
பிராமணோஸ்ய - முகமாசீத், பாகூ - ராஜன்யஃகிருதஃ.
ஊருத-தஸ்ய-யத்வைஸ்ய, பத்பியாம்-சூத்ரோ-அஜாயத



விஷயங்களில், முதலாசிரியராகிய மநு வானவர் தமது தரும சாஸ்திரத்தின் ௯௰-வது சுலோகத்தில் "ஓர்வைசியனுக்கு விதித்திருக்கும் அல்லது அவன் செய்யக்கூடும் கருமங்களாவன. ஆநிரை மேய்ப்பது, வெகுமதி கொடுப்பது, பூசிப்பது, வேதமோதுவது வர்த்தகஞ்செய்வது, வட்டிக்குக் கொடுப்பது, நில முழுதுபயிர்செய்வது," என்று கூறியிருக்கின்றது. இவ்விலக்கணமவர்கள் வழங்காமற் போகவில்லையென்பது இங்கிலீஷ் கிரந்தகர்த்தர்கள் முதலிய யாவராலும் சாதாரணமாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதனை அடியிற் கண்ட கிரந்தங்களிற் காண்க.

(Rees' Cyclopœdia under the head caste) ரீஸ் துரையாற் செய்யப்பட்ட சிக்லோ போடியா யென்னுங் கிரந்தத்தில்-ஜாதியென்னுந் தலைப்பிலும், (The modern Orator by Burke, page, 806) நிகழ்கால சபாப்பிரசங்கியாகிய பர்க்கு துரையாற்செய்யப்பட்ட கிரந்தம் ௮௦௬-வது பக்கத்திலும், (The Calcutta Review, Vol. 15, No. 29) கல்கத்தா-ரிவியூ யென்னும் பத்திரிகை ௧௫-வது புத்தகம் ௨௯-வது இலக்கத்திலும், (Ward's Ancient History of the Hindus, page 66, Vol. 3.) வார்டஸ்-துரையாற் செய்யப்பட்ட ஹிந்துக்களின் பூர்வகால சரித்திரம் ௩-ம் புத்தகம் ௬௬-வது பக்கத்திலும், (Revd. Trever's India, &c. page 113) டிரிவர்-யென்னும் பாதிரியாராற் செய்யப்பட்ட ஹிந்துஸ்தான சரித்திரம்-௧௧௩-வது பக்கத்திலும், (Rickard's India, Vol. 1, pages 6-9) ரிக்கர்ட்ஸ் துரையாற்செய்யப்பட்ட ஹிந்துஸ்தான சரித்திரம் முதல்-புத்தகம்-௬-வது முதல் ௯-வது பக்கம் வரையிலும், (Moore's Hindu Pantheon, page, 343) மூர்துரையாற் செய்யப்பட்ட ஹிந்துவேதாந்தசாத்திரம் ௩௪௩-வது பக்கத்திலும், (Wilson's Vishnu Purana, page, 96) உல

சன்துரையாற்செய்யப்பட்ட விஷ்ணுபுராணம் 96 - வது பக்கத்திலும், (Colebrooke's Essays on Religion and Philosophy, page 270) மதத்தைப்பற்றியும் - ஞானத்தைப்பற்றியும் கோல்புருக்கு யென்பவராற் செய்யப்பட்ட பிரசங்கபத்திரிகை-உஎ௦-வது பக்கத்திலும், (Land of the Permals by Day, page, 297) டேதுரையாற்செய்யப்பட்ட பெருமாள் பூமியென்னுங்கிரந்தம்-உகூஎ-வது பக்கத்திலும், (Steele on Hindu Law and Customs, page) ஸ்டீல் துரையாற் செய்யப்பட்ட ஹிந்துலாவையும் வழக்கத்தையும்பற்றிய கிரந்தத்திலும் காணலாம்.

## முதலாவது பயிரிடல்.

"வேளாள" னென்னுஞ்சொல். வேளாண்மை*யென்பதிலிருந்து வந்தது. அதன் சாதாரணப்பொருள் பயிர்

* வேளாண்மை - எ-து. நன்றி, ஈகை, வேளாண்டொழின்மை முதலிய பலபொருள்குறித்த வொருசொல்; அஃதுவேளாண்டொழிலுடைமையானன்றி ஈகைமுதலிய நற்செய்கையுடைமைக்கு முரிய ஓர் குடிப்பண்பாயிற்று.

வேளாண்டொழில் - வேள் - நன்னிலம், ஆண் - உரிமைத்தலைமை, தொழில்-முயன்று முடித்தல். இதனால் - நன்னிலத்திருத்திசென்னெறிப் பொங்கப் பைங்கூழ் விளைக்கு முரிமைத் தலைமைத் தொழில் என்னப்படும். அல்லதூஉம்,

வேள்-விரும்பப் படுகை, ஆண்டொழில் - ஆண்மைத்தொழில். இதனால் அரையரால் விரும்பப்படும் மந்திரித் தலைமை சேனைத் தலைமை யென்னு மாண்மைத் தொழிலுடையோ னென்பதூஉம் மையும்.

இதனையுடைய குடிப்பிறப்பினர் வேளாண் குடிப்பிறப்பினர் வேளாளரென்க.

இவ்வேளாண் குடிப்பிறப்பினர் ஈகை முதலிய நற்செய்கைகளின் மிக்காரென்பதற்கு வேறு கூற வேண்டுவதின்று. இவர் குடிப்பெயரே தக்க சான்றென்க. அன்றியும், அந்தணர் அரையர் சூத்திரர் முதலியோர் தத்தமக்குரிய வொழுக்கங்களை நடத்துதற்கு வேளாண் குடிப்பிறப்பினரது உதவி முற்றும் வேண்டுதலின் இவர் நெறி பெருநெறி யென்பதற்கு மஃதே சான்றென்க.



செய்தல், தமிழகராதியின்படி அச்சொற்பொருள் தானஞ்செய்வோன் என்பது. பயிர்விளைவில் களத்தில் சகலவருணத்தாருக்கும் மேரைமுதலிய கொடுத்தல் யாவருமறிந்தவிஷயம்; அதைப்பற்றி விசேஷம் விவகரிக்கவேண்டியதில்லை. அன்றியும், அரசர்களுக்கு இரண்டாவதாக நமது தேசத்திய வித்துவான்களுக்கும் மற்றைக் கல்விமான்களுக்கும் இம்மரபினரே சன்மானங்களைச் செய்துவந்ததாய்ச் சரித்திரத்தால் வெளிப்படுகின்றது. இதன் உண்மையை விசாரிக்கின் ஊழிய வகுப்பினராகிய சூத்திரர் ஔதாரியஸ்திதியில் யிருத்தல் அசாத்தியமே. இன்னும், அது ஆசிரிய வம்சத்தராகிய பிராமணருக்கு மியலாது. ஏனெனில், அவர்கள் ஜீவனத்துக்கு இதர வருணத்தார்செய்யுந் தானமே போதாததாக விருக்கின்றது. ஆதலால் மநு கொடைக்குரியவர்கள் வைசியரென விதித்த இலக்கணம் வேளாளருக்கே அமைந்திருக்கின்றது. * மே

சம்பந்த சுவாமிகள்.

* வாளார் கண் செந்துவர் வாய் மாமலையான்றன்மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினான் றேல் கோயில்,
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந்
தாளாளராக் கூறிற் றென்றேன்றி மாடமே.

தேவர் குறள்.

தாளாற்றித் தந்தபொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற்பொருட்டு ......... *

தாளாண்மை யென்னுந் தகைமைக் கட்டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு... ...*

இதன்றொடர்-கூ-வது பக்கத்திற்காண்க.

ளுங் தென்னாட்டில் அக்காலத்திலும் இக்காலத்திலும் அவ்வேளாளர்களே உழவுத்தொழிலை நடத்திவந்தவர்களாக யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தன்றியும் (Mirasi Right) மிராசு ரயிட்டு, ௧௭௭-வதுபக்கம் ௫-வது குறிப்பில்கண்டபடி, அன்றுமின்றும், அவர்களே பெரிய பூஸ்திதியும் மிராசும் காணியாட்சியு முள்ளவர்களா யிருக்கின்றார்கள். ஓர் வேளாளனிடத்திற்போய் உன் ஜீவன குலத்தொழில் யாதெனில் யாதோராலோசனையுமில்லாமலே பயிர்த்

---

௫-வது-பக்கத்தின் தொடர்.

திருக்கை வழக்கம்.

ஆதுலர்க்குச் செம்பொ னளிக்குங்கை யாகமங்கள்
வேதபுராணங்கள் விரிக்குங்கை நீதிநெறி
மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தருமந் தழைக்குங் கை யானதமிழ்
கல்லார்க ளென்னுமல் கற்றோர்க ளென்னுமல்
எல்லாரையுங்காத் தீடேற்றுங்கை வல்லமைசேர்
மைம்மாமுகிலுலகை வாழ்விக்கு மேன்மைபோல்
கைம்மாறிலா தளித்த கற்பகக்கை சும்மையா
ஊருணி நீர்போ லுலகத்தவர்க் கெல்லாம்
பேரறிவா லீயும் பிரதாபக்கை பாரில்
உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
கொடுக்க விசைந்த குளிர்க்கை யிடுக்கணினால்
மாமறையோர் மன்னரொடு வந்தடுத்த சூத்திரருந்
தாமலையாமற் கொடுத்துத் தாங்குங்கை தேமருவும்
பொன்முடி மன்னர் புனையத்தரிக்குங்கை,
மன்னர் துலாபாரத்தளக்குங்கை நன்னயத்து.

இஃதன்றியும், குலோத்துங்க மகாராஜன் கம்பரைச் சீறிய போது அவர் கொடுத்திருந்த விருதுகளைக் கம்பர் சபையினிடத்து அவிழ்த்து வைத்துவிட்டுக் கூறியதாவது "உன்னைக்கண்டுதானே தமிழ்ப்பாட்டைப் பாடினேன் - வேளாளனைப்பாடியவாயால் வேந்தனைப்பாடுவதில்லையென்பது என் சங்கேதமென்று உனக்குத்தெரியாதா." என்றார் (இதனை, விநோதரசமஞ்சரியிற்காணலாம்.)



தொழிலென்று சொல்வன். வேளாளர் உழவரென்னும் பழமொழி வழக்கம் அவர்கள் பூர்வத்தில் செய்துவந்த லௌகிகத்தைத்தெரிவிக்கின்றது. சாதாரண அனுபவத்தின்படி சொல்லத்தொடங்கின், துரைத்தனத்திலும், சுதேச சிற்றரசர்களிடத்திலும், வர்த்தகஸ்தானங்களிலும், அல்லது இதரமான சுயேச்சைத்தொழில்களிலும், ஜீவனஞ்செய்பவர் சிறுபான்மையோர்தவிர ஏனையர் அனைவரும் தற்காலத்திலும் பயிர்செய்பவராகவே யிருக்கின்றனர்.

சாதாரண தருமத்தில், உழவு என்பது, காலதேசத்தினியற்கையையும், நிலத்தின் பாகுபாட்டையும்பற்றி யந்தந்தபோகங்களிலும் விளையத்தக்க பொருள்களை விதைத்துப் பாதுகாப்பதோடு விளைவித்தல், அவற்றை அறுத்தல், தொகுத்தல் முதலிய பலவற்றையும் அடக்கிக்கொண்டிருக்கின்றது. விசேஷார்த்தத்திலோ வெனில்- பசு, குதிரை, ஆடு, மறி, யிவைமுதலிய நிரைகளையும், ஆக்கல் காத்தல் மேய்த்தலோடு மற்றும் அவற்றிற்குரிய காரியங்களைச்செய்தலும், பால் வெண்ணெய்முதலிய போன்றன அம்மூலமாய் சேகரிக்கப்படும் வெவ்வேறுபொருள்களைக் கிரகித்தலாதியோடு சம்மந்தப்பட்ட பல்முயற்சிகளைச் செய்தலுமேயன்றி முடிவில் இராஜீக வுபயுக்தமான மார்க்கங்களையும் கால்வாய்களையும் உண்டுபண்ணல், களைகளை யேற்படுத்தல்போல்வனவும், நிறுத்தல்முகத்தலாதி அளவை யியல்களும் ஆகிய யிவைகளோடு சம்பந்தமுடையவாம். இதனை Adam Smith's Wealth of Nations என்னுங் கிரந்தத்தில் காணலாம்.

## ௨-வது - கோசம்ரக்ஷணம்.

பசுக்காத்தல் உழவுக்கு இன்றியமையாததாகவிருக்கின்றது. எருதுகள் ஏருக்கும், பசுக்கள் பாலுக்கும், நிரையாக்கலுக்கும் வேண்டியிருக்கின்றன. சாதாரணமாய்க்

கொம்புள்ள மிருகங்களெல்லாம் விளை நிலத்தின் எருவிற்
காகவேண்டியிருக்கின்றன. ஆதலால் * கிருஷியந்திரங்க
ளைப்போல ஆடு-மாடுகளும்-உழவுக்கு அவசியமென்பது
சொல்லாமலே விசிதமாகும். வேளாளர் பூஸ்திதியாளரும்
பயிரிடுவோருமாகிய ஓர் பெரியவகுப்பினரொன்பதை முன்
னமே விவகரித்திருக்கின்றோம். அவர்கள் இனிப் பசுக்கா
த்தலுக்கு முரியரொன்பதும் இதனு லமைந்துகிடந்தது.

## ௩-வது-வாணிபம்.

குடிமையாளனுக்கு வர்த்தகஞ்செய்வது அதியவசி
யம். வர்த்தகத்திற்கு உபகரணமான பதார்த்தங்கள்
அது தொடங்குமுன்னஞ் சேகரித்தல்வேண்டும்; மானு
டவாழ்க்கைக்கு இன்றியமையாததே வர்த்தகத்திற்கு மு
க்கியபண்டங்களாம். இவற்றிற்கு வருவாய் பயிரிடுவோ
ரன்றிப் பிறரல்லர். தான் பயிரிடு மனைத்தையும் தானே
புசித்துவிடாமையால், மிகுந்தவற்றை அப்பயிரிடாவகு
ப்பினர்க்கு விற்கவேண்டும். உபயோகத்திற்கு வேண்டிய
அளவுக்கு அதிகப்படில், அவற்றையு மவற்றின்மூலமாய்
உண்டாகும் பால் வெண்ணெய் நெய் முதலியவற்றைப்
போலவே விற்றல்வேண்டும். கிரககிருத்தியத்திற்கு வேண்
டும் பண்டங்களைக்கொண்டே வர்த்தகஞ்செய்யத்தக்கதெ
ன்பதும் இதனால் காணப்படும். அப்பண்டங்களாவன.—
தானியம்-சமஸ்தவித்துக்களோடு ஆமணக்கு-எள்-கரும்பு-
பஞ்சு-அவிரி-தேங்காய்-பாக்கு-புளி-முளகாய்-காய்முதலி
யவை, இப்பண்டங்களை மொத்தவிக்கிரயஞ் செய்பவர்கள்
வேளாளர்களேயாம். இவர்களிடத்தில், அன்னியர் வேறு
சிலர்கள் மொத்தமாய் வாங்கிக்கொண்டு மற்றவர்களுக்கு
சில்லறையாய்விற்பவராகின்றார்கள். ஆகவே, இதனால், பி

* ஏர் முதலியவைகள்.



ரதமத்தில், மொத்த வர்த்தகத்தாரத்திற்குள்ள சுதந்தரத்
தை நீக்கமாட்டாது.

## வட்டிக்கு பொருளீட்டல் முதலியவைகள்.

அன்றியும் வியவசாய வகுப்பினராதலால் அவர்கள்
இதர வுபயுக்த பதார்த்தங்களைக்கொண்டு வர்த்தகஞ்செய்
யவில்லையேயென்றும், வட்டி வியாபாரஞ்செய்வதில்லையே
யென்றும், ஆக்ஷேபிக்குமிடத்தில், யிவடத்தில் நமது வே
ளாண்செட்டிகளை குறிப்பிப்பதே போதுமானது. ஏனெ
னில் ஒவ்வொரு பதார்த்தத்தையும் தங்கள் தங்கள் மரபுக்
குரியதென்று சிலாக்கித்துக்கொண்டு பலசாதியாரு மிப்
போது செய்துவரும் வியாபாரத்தொழிலையெல்லா மிவர்
கள் எண்ணரிய நெடுங்காலமாக வின்றையவரையிலும் தா
ங்களே நடத்திவருகின்றார்கள்.

இங்ஙனம் முன் னெடுங்கலந்தொட்டு நாளைக்கும்
வைசியருக்கு விதித்திருக்கும் மூவகை முக்கிய விருத்திக
ளான (1) உழவு, (2) வியாபாரம், (3) ஆனிரை
யோம்பலென்னுந் தொழில்களை இவ்வேளாளரே நடத்திவ
ந்ததாகச் சொற்பரம்பரையாலும் சரித்திரங்களாலும் சித்
தாந்திக்கப்படுகின்றது. இதர ஜாதியார் ஒருவரும் இவ்விரு
த்திகளில் பிரவேசித்ததில்லையென்று நாம் விவகரிக்கவில்
லை. ஏனெனில் ஜீவனத்தின்பொருட்டு வேளாளரேயல்
லாத வேறுசாதியாருள்ளும், சிலர் வியவசாயமும், சிலர் வி
யாபாரமும், சிலர் பசுக்காத்தலும், செய்துவருகின்றனர்.
ஆதலால் இதற்குக் காரணம் யாதெனில், அன்னியதேசத்
தர்க ளிந்நாட்டை ஜெயித்தலால் பிரதிவருணத்தரும், தத்
தம் தொழிலிலேயே பிரவேசித்திருக்கவேண்டுமென்னுமே
ற்பாட்டிற்கு லோபமுண்டாக, ஒவ்வொருவனும், ஜெயித்த
வரசனுக்குட்பட்டுத் தனக்குத்தனக்கு விருப்பமுள்ள ஜீவ

னத்தொழிலை நிராக்ஷேபனையாய்நடத்திவந்தான்: அவருள் பிராமணர்கள் மாத்திரம் தமக்குரிய ஆசாரியவிருத்தியுடன் காலோசிதப்படி எவ்வகைத்தொழிலிலும் பிரவேசித்தனர். ஆதலின் முற்காலத்தில் வேளாளர் வைசியவகுப்பிற் சேர்ந்திருந்தனரென்பதற்கு இவ்விஷயத்தில் நிஷ்பக்ஷபாதராயும் எந்த ஜாதியாருடனும் சம்பந்தப்பட அபிப்பிராயமில்லாதவராயுமிருந்த கூட்டத்தினராகிய சமணரால் செய்யப்பட்ட நிகண்டு, அல்லது அகராதியே, தக்க சான்றாயிருக்கிறது. நிகண்டில் வைசியர்களுக்கு இன்னும் வெவ்வேறாய காரணத்தால் ஆறுபெயர்களுள்ளன.

* (க) இளங்கோக்கள்
† (உ) மன்னர் பின்னர்
‡ (௩) இப்பர்
§ (௪) எட்டியர்
‖ (ரு) காராளர்
¶ (சூ) வேளாளர்

அகராதியிற் காண்க.

---

* முதற் பொருளாகிய நிலம் பொழு திரண்டிற்குந் தலைமை பெற்ற அரசர்போலாது நில முதற்பொருளொன்றற்கே தலைமைபெற்றுளாராதலின் இளங்கோக்கள் எனப்படுவர்.

† வேதியரை முன்னவரென விடவரை யறுத்தாற்போல மன்னர் பின்னரென அடையொடு மிடம்வரை யறுத்தவாறு.

‡ யார்க்கும் இம்மைப்பயனுவார்.

§ அரசனாற் கொடுக்கப்பட்ட தேயவழக்காகிய சிறப்புப்பட்டப் பெயர்.

‖ கார் எ-து,மழைக்கும், பருவத்தோன்றற்கும், நீர்க்கும்பெயராம். அதனையாளுவோர் என்றபடி.

¶ கொடை வல்லோர் என்றபடி வேளாண்மை-கொடை,இக் கொடைக்குக் காரணமாதலின் உழவும் வேளாண்மையெனப்படும். இதன் விரிவை இனி அச்சிடும் அறவியல் விளக்கத்துட் காண்க.



தேச பேதங்களின்படி இவ்வேளாளர்களுக்கு வெவ்வேறுபட்டப்பெயர்களும் உண்டு. தெற்கில், அவர்களுக்கு * பிள்ளைகள் † ரெட்டிகள் ‡ செட்டிகள் § முதலிகளென

---

சேக்கிழார்புராணம்.

* இமயமலையரையன்மகடழுவக்கச்சி யேகம்பர் திருமேனி குழைத்த ஞான்று, சமயமவையாறினுக்குந் தலைவிக் கீசர் தந்தபடி யெட்டிழக் கீராழிநெல்லும், உமை திருச்சூடகக் கையாற் கொடுக்க வாங்கி யுழவுதொழிலாற் பெருக்கி யுலகமெல்லாம், தமது கொழுமி குதிகொடுவளர்க்கும் வேளாண்டலைவரை அவ்வம்மையார் தமது அருமைத் திருவாக்கினாற் பிள்ளைகளேயென வழைக்கப்பட்டமை காரணம் விளங்க அது பட்டப்பெயராயிற்று.

§ அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் பெரியபுராணஞ்செய் தரங்கேற்றியகாலத்து, அன்பாயச் சோழர்முதலிய பெரியோர் எம்முதலிகளோ என்றகாரணத்தால் வந்தவாறு; பிறகாரணமும் முள்ளன விரிந்த நூலுட் காண்க. முதலி முதன்மையாதலை யுடையவன் என்றபடி.

சீரொன்று தேவர்முத லாதலாற்றில்லை வாழ்முதலி
யாரொன்று நாமம் படைத்ததுபோன் மற்றவருமந்தப்
பேரொன்று பெற்றது வேளாண் முதன்மையைப் பெற்றலவோ
வாரொன்று பூண்முலையா யெளிதோ தொண்ட மண்டலமே.

புராணசாரம்.

மனிதரிற்றேவராதலின்முதலாம் வருணர்தாமையரேயாதி [ம்
யினியபோதுவும்வேந்தர்மண்விளக்குமியற்கையானிராஜரேயெனவு
புனிதைசீர்காமபீடத்தெம் மன்னைபுதல்வராய்நென்முதல்பெற்றுத்
தனியநமதலையாதலான் வேளாண்டலைவர்தாம்பிள்ளையேயெனவும்.

சைவமேவாழச்செம்பியன்கேட்பத்தாவிலாத்திருத்தொண்டர்சீர்த்தி
யுய்வகைச்சிற்றம்பலத்தொரு முதலியுவந்தருண்மொழிமுதலாகத்[ம்
தெய்வமாக்கதைமுன்செப்பியதிறத்தாற்றிசழ்தருமுதலியே யென்வு
னைவறுமேவலாற்றலாஞலோர் நற்பத்தரெனவுமன்வழங்கும்.

† தம்மிலுயர்ந்த இருவருணர்க்கும், தாழ்ந்த சூத்திரனுக்கும், ஏனைய அனுலோமாதியர்க்குந் தானம்,இறைகூறு, கூலி, பிச்சை முதலிய கொடுத் துபசரிக்குங் காரணம்பற்றிச் சிரேட்டியென்று அழைத்த அருமையால் வந்த பட்டப்பெயர் ரெட்டியென மருவிற்று. சிலர் வேறு பிறகாரணமுங் கூறுவர்.

‡ செட்டுத் தன்மையுடைமையால் வந்தது. செட்டு-பொருள் சேர்க்குந்திறம்.

வும், வடக்கிலும், வடமேற்கிலும்*வெலமரெனவும் வழங்கும். இவ்வேளாளர்கள், பிரதமாசிரியராயும் தெய்வத்தன்மையுடையவராயும் இந்த தர்மசாஸ்திர விதிதாராகியு மிருக்கிற மநுவானவர் அருளிச்செய்தபடி, வைசியரிலக்கணத்திற்கு உட்பட்டுள்ளார்களென்பதை இதுவரையிலுந் தெரிவித்தோம். இனியவ்வேளாளரைச் சூத்திரரென்றுவிவகரிப்பாரை மறுக்குமிடத்தில், அம்மனுவானவர்சொன்னசூத்திரவருண விலக்கணத்திற்கும், அதன் பழமைப்பட்ட தாற்பரியத்திற்கும் இவர்கள்உட்பட்டவர்களல்லரென்னும் நியாயத்தையுமெடுத்துக்காட்டுவோம். அதாவது, மநு-௯௧-வது சுலோகத்தில் ஏவலராகிய சூத்திரருக்குக் கடவுளால் விதிக்கப்பட்டிருக்கும் முக்கிய கடமையாவது மேன் மூவகை வகுப்பினர்க்குத் தொண்டு செய்வதென்பதாம். இதனை (Colebrook's Digest of Hindu Law, pages 10-12-Mitakshara, page 371) கோல்புருக்கென்பவர் இங்கிலீஷில்செய்த ஹிந்துலா ௧0-௧௨-வது பக்கத்திலும், மிதாக்ஷரி ௩எ௧-வது பக்கத்திலும் காணலாம்.

வியவசாயிகளும் வர்த்தகருமாகிய ஜாதியரான வேளாளரென்போர் மூவகை யுயர்வகுப்பினர்க்கும் ஏவற்றொண்டு செய்வதென்பது அசத்தியம். ஏனெனில் பிறர்தொண்டுசெய்வதென்பது அத்தியாவசியமாய் வேளாளருக்குத் தவறத்தக்கதாயிருக்கின்றது. அவர்களுடைய சாதியியற்கை சீவனோபாயமே அவர்கள் பிறரா லேவப்படாமையை கற்பிக்கின்றது. அன்றி ஒருக்கால் ஏவப்படினும், அது, தம்முடைய சொந்தகாரியங்களைப்பற்றியே; அரசன் ஒருவனாலேயே யேவப்படுவோராகின்றன ராதலின். இதனால் வேளாளர் ஏவலராகிய சூத்திரவருணத்தரராகார். அன்றியும்

* வேளாளரென்பது தற்பவமாய் ஆந்திரமொழியுள் வெலமரென வழங்கும்.



பின்வரும் விஷயத்தால் ஜனசமூகத்துள் வேளாளர்* கௌரவமுள்ளவகுப்பினரென்பது அடியில் விவகரிக்கப்படுவதா

* பிரமாணம். ௧அ௫௨ம்-ௐல் அச்சிட்டிருக்கும் மிராசுரயிட்டு, அ௩-வது பக்கத்தில்.

"பாணியிற்கங்கைநதி மலையினிற்கைலைமலை
பாரழகினிற்றண்டகம்
பழமொழியி லௌவைசொல் லரசரிற்சேரமான்
பத்தியிற் சிறியதொண்டன்
காணியிற் றொண்டையாம் புகழில் வேளாளர் புகழ்
கான்முளையினிற் பகீரதன்."—என்பதனாலும்
"முதலியார்" என்னும் பட்டப்பெயராலும், விளங்கும்.

அன்றியும், அரசர்களைப்போல விவர்களுக்கும் தசாங்கமுதலிய பிருதுகளுண்டாயிருக்கின்றது, வருமாறு.

(௧) பெயர்-வேளாளர். (௨) மலை-மகம்மேரு. (௩) ஆறு-கங்கை. (௪) நாடு-எ௯. (௫) நகர்-௯௯௯. (௬) ஊர்தி-ஐராவதயானையும், உச்சைச் சிரவக்குதிரையும். (எ) மாலை-செங்குவளை (அ) கொடி-மேழி-குயில்-சிங்கம். (௯) படை-கலப்பை. (௰) முரசம்-கொடை-வருமாறு:—

புராணசாரத்திரட்டு.

நெடுநீர்வேலிப்புட்விபோர்த்த
மன்னுயிரொலைக்கு நன்னயத்துதவுங்
கொடைமடங்குறித்த கொள்கையராதலின்
வேளாளரென்ன வியத்தகுபெயரும்,
வருணமாச்சிரமம் வகையுளித்தாங்கி
இருநிலநிலைத்த விற்றிசழ்மேருமலையும்,
நல்குரவொழியப் பல்வளம்பரப்பி
அறங்கடைநிறுத்திய வனத்தையும்புனிதஞ்
செய்தலிற்கங்கைத் திருப்பேர்யாறும்,
கோடாமரபின் வாடாவாகையின்
மன்னவர்க்காக்குநாடெழுபானென்பதும்,
அன்னவர்க்காக்க முன்னியநகர
மொன்றொழியாயிர மென்றது, மிந்திரற்
கின்முகிலூர்தி தந்ததூஉமன்றி
அமுதவன்குடிபெறத் தமரவாரணமுன்
கடைதரவோடதி கவின்பெறவளிப்ப
காரணனிசைத்த வெள்வாரணங்குரகத

இதன்றொடர்-௧௪-வது பக்கத்திற்காண்க.

ல்விளங்கும். அதாவது, ஒருவன் தனதுதேக அளவினவான பொன் வெள்ளிகளைத் தக்க உத்தமர்கட்குத்தானஞ்செய்வதாகிய "துலாபாரம்" என்னும் சுகர்மம் பூர்வ அரசர்களால் தங்கள்காலத்தில் நடத்திவரப்பட்டது. ஆகவே, இக்கருமத்தை தஞ்சைமாநகரத்தரசர்கள் செய்தகாலத்தில், அரசனதுதேகத்தை நிறுக்குஞ்சுதந்திரம் வேளாண்செட்டிகளுக்குக் கொடுக்கப்பட்டது.* இதனால் வேளாளர் நிறுத்தல் முகத்தல்முதலிய அளவைகளைத் தமது சுதந்தரத்திலேயுடைய கௌரவமான வர்த்தகக்கூட்டத்தினரென்று கொள்ளப்பட்டதாய்த் தெரியவருகின்றது. அவ்வாறே, சிறந்த திருமதுரை ஆலஸ்யபுராணத்தில், ஒப்பருங்கடவுளான சிவபெருமானுருடைய திருக்கோலமென்று சொல்லப்பட்ட சோமசுந்திர பாண்டியனென்னும் அரசருக்குப் பட்டாபிஷேகஞ்செய்தகாலத்தி லவர்க்கு யார் முடிசூட்டத்தக்கவர்களென்னும் விசாரம்வந்தபோது, பலவகை யாராய்ச்சியாலும்மக்களுயிர்க்கு உறுதித்துணையாகவிருக்கும் வேளாளருள் ஒருவர் அம்மகோச்சவத்தை நிறைவேற்றத்தக்கவ

---

கங-வது பக்கத்தின்றொடர்.

ழூர்தியுந், தொழிற்றிற முறுகளங்கருவித்
தாவறக்காட்டுந் தனிக்குறிக்கொடியாஞ்
சிங்கங்குயிலொடு திகழ்தருமேழியும்,
பொழுதளவறுக்கும் விழுமியகுறியிற்
றிங்கணேர்மலர் செங்குவளைத்தாருங்,
கலிப்புகைதெறுபடையலப்படையாகவும்,
ஆதுலர்விளிக்கு மருட்கொடைமுரசுமெனச்,
சிரியற்றசாங்கமார் கலியுலகத்து
வானவர்மன்னர் வரிசையின்வழங்கத்
தம்மியல்விளங்கவம் மூன்றும்வருணர்
செம்மைசீரொன்றே திகழ்ந்தவெங்கணுமென.

துலாபாரம். புராணசாரத்திரட்டு.

* அண்டவடுக்குப் பலநிறுக்குமந்தணனை ஒலடிச்சி
கண்டன்மறைக்கோவணநிறுத்து முன்னம் பின்னுங் காசினியில்
மண்புகழான்புரூரவனுமன்னன் வானோர்மகட்புணர்தோம்
விண்போகத்துலைபுகுத்திநிறுத்தார்வேளாண்மைந்தர் தம்பேர்,



றென்று யாவராலுஞ் சம்மதிக்கப்பட்டது. ஏனெனில், மநுவானவர் வைசியுன் பிரமனுடையதொடையினின்றும் வந்தானென்பதின் றாற்பரியத்தை விசாரிக்குமிடத்து அரசாட்சிக் குறுதிசெய்யத்தக்கவனென்பதாக அர்த்தப்படுகின்றது. அன்றியும், ஆயிரத்துச் சில்வான வருஷங்களுக்கு முன் கம்பராற்செய்யப்பட்ட கம்பராமாயணத்தில், மகுடாபிஷேககாலத்தில், வசிஷ்டர், ஸ்ரீராமருக்கு ஓர் * வேளாளனால் மகுடஞ் சூட்டுவித்ததாகச் சொல்லியிருக்கிறது:

இவ்வுதாரணங்களால், முற்காலத்திலேயே வேளாளர்கள் சுவதந்திரமுள்ள கௌரவமரபினராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாய் விளங்குகின்றதல்லவா? ஆகவே, அவர்களை ஏவலராகிய சூத்திர வகுப்பினரென்று பாவிப்பதெவ்வண்ணம்? அன்றியும், மநு பத்தாவது அத்தியாயம்-அஉ-வது சுலோகத்திற், றன் சுதருமத்தினால் சீவிக்கக்கூடாத காலையில், விப்வசாயமும், வர்த்தகமும் பிராமணருக்குப் பிரவேசிக்கத்தக்கதெனக் கூறப்பட்டது. இதனால், வியவசாயமும் வர்த்தகமும்-சுவயமுயற்சியான ஜீவனங்களுள் † கௌரவமானவை எனக் காணப்படுகின்றதல்லவா? நம

---

*-கம்பராமாயணம்.

அரியணை யனுமன்றாங்க வங்கத னுடைவாளேந்தப்
பரதன் வெண்குடை கவிக்க விருவருங் கவரிவீச
விரைசெறி குழலியோங்க வெண்ணெயூர்ச் சடையன்றங்கள்
மரபுளோர் கொடுக்கவாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

ஔவையார்

† சீரைத்தேடி னேரைத்தேடு.
மேழிச்செல்வங் கோழைபடாது.

நல்வழி.

ஆற்றங்கரையின் மரமும்அரசறிய
வீற்றிருந்தவாழ்வும் விழுமன்றே - ஏற்றம்
உழுதுண்டுவாழ்வதற் கொப்பில்லைகண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

இதன்றொடர்-கசு-வது பக்கத்திற்காண்க.

மால் விசாரித்தறியக்கூடுமான நெடுங்காலந்தொட்டு அவ் வியவசாயத்தையும் வர்த்தகத்தையும் தங்கள் பரம்பரைக்கே சுவயசீவனமாய் நடத்திவந்தார்கள். வேளாளரான விவர்களை * ஏவலராகிய சூத்திரவருணத்திற் சேர்க்க நியாயமுண்டோ ?

மநு-கூ-ம்-உ-வது சுலோகவிதிப்படி சூத்திரருக்கு எக்கியோபவீதங் கூடாது. ஆயின்வேளாளர் உபநயனகருமத்

கரு-வது பக்கத்தின்றொடர்.

தேவர்திருக்குறள்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர் *

சுழன்றுமேர்ப்பின்ன துலகமத ௯
னுழந்துமுழவே தலை. *

உழுவாருலகத்தார்க் காணியஃதாற்
றெழுவாரை யெல்லாம் பொறுத்து. ௬

பலகுடைநீழலும் தங்குடைக்கீழ்க்காண் ப
ரலகுடை நீழலவர். *

உழவினார்கைம்மடங்கி னில்லைவிழைவதூஉம்
விட்டேமென் பார்க்குநிலை. *

* ஏவலரென்பவர் குடிமக்களின் பொதுப்பெயராம். வருமாறு.

தொண்ட மண்டலவரிசை மூவாறுகுடிமக்கள்
சுருதிநாள் முதலாகவே
துங்கமிகு நாவிதன் குயவன் வண்ணானிவே
சொன்னபடி யெழுது மோச்சன்
கண்டகம்மாளர்வகை யைவர்வாணியர்மூவர்
கந்தமலர் மாலைகாரர்
கலைமீது சரடோட்டு பாணன்றலைக்கடைக்
காவல்புரிபள்ளிவலையன்
பண்மேுதலூரான் மறிக்குமிடையன் விருது
பலகூறு வீரமுடையான்
பதினெண்மர் குடிமக்க ளனைவரும் காராளர்
பணிசெய்து பலமுறைமையுங்
கொண்டேரி வட்டமுங்கட்டியெவருமதிக்
குவலய மதிக்கவேதான்
கூறரியகச்சிவா ழேகம்பராலயக்
குமுதத்திலிட்ட விதியே.



தை நடத்திவந்ததில்லையென்று யாராற் சொல்லக்கூடும்? பிராமணனுக்கு உபநயனம் நடத்தவேண்டிய வயது-எ-முதல் -கூ- வரைக்கும். இதை (Strange Hindu law) ஸ்திரேன்சுதுரையாற்செய்யப்பட்ட ஹிந்துலாவிற்காண்க. இதரவருணத்தார்கள், அக்கருமத்தை, அனுகூலப்படி-உச-வயதுக்குள்ளாகவாவது அல்லது கல்யாணத்துக்கு முன்னாவது நடத்தவேண்டும்; இதை மநு-உ-வது அத்தியாயம்-உ௬அ-வது-சுலோகத்திற்காண்க.

வேளாளர் தக்க விதிப்படி இக்கருமத்தை கல்யாணத்துக்கு முன்பு ஒருக்காலும் செய்யாதொழிவதில்லை. பிராமணரைப்போலத் தாங்கள் எக்கியோபவீதத்தை யிடைவிடாமல் தரிப்பதில்லையேயென்றபக்ஷத்தில், இதற்குத்தக்க சம்மதமான சமாதானம் * அதிக சுலபத்திலிருக்கின்றது; பிராமணரைப்போ லல்லாமல் வியவசாய முதலிய தமது லௌகீக கருமங்களால் கீழ்வகுப்பினரோடு பழகுதல் அடிக்கடி வாய்ப்பதாலும், அப்பழக்கத்தால் தாந்தரிக்கும் எக்கியோபவீதத்திற்குஅபரிசுத்தம்சம்பவிப்பதாய், தற்காலத்திலோ அல்லது பூர்வத்திலோ பாவித்து, சதாதரிப்பதைவிட்டு, எக்கியோபவீதத்தைத்தரிக்குங் கௌரவ விதிவமுவாது விவாகம், சீமந்தம், தருப்பணம், அந்தியேஷ்டி, ஆப்திகமுதலிய விரதானுஷ்டான வைதிககருமங்களில் உபயோகப்படுத்துகிறார்கள். சாதாரணமான லௌகீகானுகூலத்திநிமித்தம் ஓர் சுதந்தரப்பொருளைச் சிறிதுபொ

* இதற்கு ஸ்மிருதிசம்மதி இருடி சிருங்கர்.
"అపివాహస్యాయజ్ఞోపవీతధారణంకుర్యాత్తదభావేత్రివృతాసూత్రేణ"
"அபிவாவா ஸஸாயக்ஞோபவீததாரணங் குர்யாத்ததபாவேத்திரிவிரதாஸூத்ரேண"
எ-து.—ஆடையாற்றுனே பூணநூலைத்தரிக்கலாம். ஆடையில்லாவழி மூன்றிழை நூலாலாயினும் தரிக்கலாம். எ-று. பராசரம் முதல் ஆசாரகாண்டம், உ-ம்-அதி. ௬௬-வது பக்கத்தில் உதகரித்தவாறு ஒழுக்கத்துள்ளது. இதன்விரிவு அறவியல் விளக்கத்திற் காண்க.

ழுதும் விட்டதாக நினைப்பது சாதாரண சம்மதமன்று. ஆதலின், வேளாளருக்கு எக்கியோபவீதம்எப்போதுமுண்டென்பதே நிலைமையும் உண்மையுமான நியாயமென்பது ஸ்பஷ்டம்.

இவ்வாறு, உபநயன கருமயோக்கியதை உண்டாயிருப்பதினாலும், அந்தயோக்கியதை சூத்திரருக்கில்லாமையாலும், வேளாளர் சூத்திரால்லர் எனக்கொள்ளத்தக்கவிட்டிருக்கின்றது.

சூத்திரன் வைதீகக்கருமங்களை செய்யக்கூடாது என்பதை மநு-௩௯௩-வது சுலோகத்திற்காண்க.

பிராமணரைப்போலவே யெண்ணிறந்தகாலமாகச் சகல சுபாசுபகர்மங்களையும் வைதிக விதிப்படியெல்லாம் வேளாளர் தங்கள் சக்தியானுசாரம் நடத்திவருவது நிராக்ஷேபமான அம்சமாயிருக்கின்றது. ஆதலாலும், வேளாளர் சூத்திரால்லர்.

சூத்திரருக்குக் கோத்திர மில்லையென்றும், நாலுவருணத்தருக்கும் ஓரே மூலபுருஷராகிய கஸ்யபரது கோத்திரமொன்றே உள்ளதென்றும், ஸ்டோக்ஸ்துரை தமது ஹிந்து நியாயநூலில் சொல்லுகிறார். (௫௯௪-வது பக்கத்திற்காண்க)

இவ்வூரில், வேளாளருக்கு-௧௨௯*கோத்திரமுண்டென்று பழயநூல்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. வ

மிராசுரைட்டு.

* சீர்கொண்டதொண்டமண்டல மிருபதுடனாறு
செப்பிடுங்கோட்டமவையிற்
சேருமெழுபத்தொன்பதாகு நாடவையினூர்
தெசநூறுநவநூறதாம்
பார்கொண்டகோத்திரம் பன்னிராயிரமுன்
பகர்ந்தபட்டயமுள்ளதிப்
பட்டயந்தனிலில்லை யுள்ளபடிமுன்னோர்
பகர்ந்திடூர்களவையில்

இதன்றொடர் ௧௯-வது பக்கத்திற்காண்க.



தை(Mirasi Right)மிராசுரைட்டு-௨௪௮-வது பக்கத்திற் காண்க. மற்றை இரண்டு உயர் வருணத்தாரைப்போலவே, வேளாளர்களுக்குள்ளும் ஓரே கோத்திரத்தில் விவாகஞ்செய்துக்கொள்ளக்கூடாது.

இதுகாறும் வேளாளர் வைசியதருமத்துள்ளாவரன்றி சூத்திரால்லரென்பதையே விவகரித்து வந்தமையால், வைசியராகிய வெங்களுக்கிருக்குஞ் சுதந்தரம் ஆட்சேபிக்கத்தக்கதல்லவென்று சாதிக்கின்றோம்.

அனேக நூல்களை இவ்விஷயத்தைப்பற்றி யுதகரிப்பதற்கு முயலப் போதுமான காலம் யெங்களுக்கில்லாமையால், எங்கள் கருத்தின்படி. அவற்றுளனேக நூலுதாரணங்களை மினுயூசபில் கம்மிஷனரவர்களுக்குத் தெரிவிக்

௧௮-வது பக்கத்தின்றொடர்.

வேர்கொண்டகாடுசில வாயவோதினாவிசு
வேலைசிலதைக்கொண்டதோ
வேற்றரசர்நாட்டினிற் சேர்ந்திட்டவோவலது
மேடாய்வளர்ந்திட்டவோ
கார்கொண்ட நீர்கொண்டுபள்ளவழியாயவோ
கழறுமிவ்வூர்களெல்லாங்
கச்சியிற்கல்வெட்டு செப்பேட்டிலுளவென்று
கற்றாளவலர்சொன்னதே.
கோட்டமோரிருபானென்குகூறு நாடெழுபத்தொன்பான்
ஊருட்டெழிலாயிரத்துத் தொளாயிரநத்தமாகுந்
நாட்டெழுகோத்திரங்கள் சகத்திரம்பன்னிரண்டாம்
நாட்டில்வேளாளர்தம்மை நவின்றிட்டவடங்காலக்கம்.

சேக்கிழார் புராணம்.

நாடெங்குஞ்சோழன் முனந்தெரிந்தேயேற்று
நற்குடிநாற்பத்தெண்ணாயிரத்துவந்த
கூடல்கிழான் புரிசைகிழான்குலவுசீர்வெண்
குளப்பாக்கிழான் வரிசைக்குளத்துழான்முன்
தேடுபுகழாரிவருஞ் சிறந்துவாழச்
சேக்கிழார்குடியிலிந்தத்தேசமுய்யப்
பாடல்புரியருண் மொழித்தேவரும்பினந்தப்
பாலறுவாயரும் வந்துதித்துவாழ்ந்தார்.

கக்கூட்வில்லை. ஆயினும், அனுபந்த பத்திரத்தில், இந்துக்களின் பழய நூல்களிலிருந்து இங்கிலீஷ்காரர்கள் தொகுத்திருப்பனவற்றை இங்கே குறிப்பித்திருக்கின்றனம். ஆதலால், கூட்டத்துளியற்கைக்கு மேற்பட்ட தரத்தை வேண்டி நாங்கள் முயன்றதல்ல; ஆயின், யாதொரு தக்கநியாயமுமின்றிச் சூத்திரமரபிற்சேர்ந்த குறைவினை தீர்த்துக் கொள்ளுமவ்வளவே, நியாயமுறைப்படி, வணக்கத்தோடு விவகாரஞ் சொல்லிவந்தோம். மினுயூசபில் கம்மிஷனரவர்களுக்கு, இதன்மேலின்னுமேதேனும் விசாரிக்கவேண்டுவதாகவிருந்தால், அதை யெங்களாலியன்றவளவிற் சர்வசகாயத்தையுஞ் செய்ய மிகவுங் களிப்புடனிருக்கின்றனம்.

சென்னப்பட்டணம்.
கஅஎகவரு
ஆகஸ்டுமீ௴ யசுவ.

இங்ஙனம்,
தங்கள் விதேயர்கள்,
காசி-விஸ்வநாதமுதலியார்.

*  *  *  *
*  *  *  *



# அநுபந்தம்.

## வேளாளர்களே வைசிய ரென்பதற்குப் பிரமாணங்கள்.

மநு முதல் அத்தியாயம், அஎ-வது சுலோகம்.

సర్వస్యాస్యతుసర్గస్య గుప్త్యర్థంసమహాద్యుతిః।
ముఖబాహూరుపజ్జానాం పృథక్కర్మాణ్యకల్పయత్ ॥౮౭॥

ஸர்வஸ்யாஸ்யது ஸர்க்கஸ்ய-குப்தியர்த்தம் ஸமஹாத்தியுதி:
முகபாஹூருபஜ்ஜாநாம்-பிரதக்கர்மாண்யகல்பயது. அஎ.

எ-து. அப்பிரமனுனவர் இவ்வுலகத்தைக் காக்கும்படிக்குத் தன் முகம், தோள், தொடை, பாதம், இவைகளினின்று முண்டான, பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, வருணத்தாருக்கு இம்மைக்கு மறுமைக்கு முபயோகமான கருமங்களைத் தனித்தனியாக விதித்தார். எ-று.

அஅ-வது சுலோகம்.

అధ్యాపనంచాధ్యయనం యజనంయాజనంతథా।
దానంప్రతిగ్రహంచైవ బ్రాహ్మణానామకల్పయత్ ॥౮౮॥

அத்யா பனஞ் சாத்ய யநம்-யஜநம் யாஜநந் ததா
தாநம்பிரதிக்கிரஹஞ்சைவ - பிராஹ்மணாநாமகல்பயேது.
அஅ.

எ-து. பிராமணனுக்கு, வேதம் ஓதல்-ஓதுவித்தல்-யாகஞ்செய்தல்-செய்வித்தல் - தானங்கொடுத்தல்-வாங்குதல்-ஆகிய ஆறுதொழிலையும், விதித்தார். எ-று.

அகூ-வது சுலோகம்.

ప్రజానాంరక్షణందాన మిజ్యాధ్యయనమేవచ।
విషయేష్వప్రసక్తిశ్చ క్షత్రియస్యసమాసతః ॥౮౯॥

பிரஜாநாம் ரக்ஷணந்தாந - மிஜ்யாத்யயநமேவச
விஷயேஷ்வ பிரஸக்திஸ்ச - க்ஷத்திரியஸ்ய ஸமாஸத:

எ-து. க்ஷத்திரியனுக்கு, பிரஜைகளைக்காத்தல், தான ங்கொடுத்தல், வேதம் ஓதல், பாட்டு-கூத்து-ஸ்திரி முதலி ய விஷயங்களில் மனஞ்செல்லா தடக்கல், இந்நான்கையு ம் விதித்தார். யாகாதிகருமங்களும் அவனுக்குண்டு-எ-று.

கூ0-வது சுலோகம்.

* పశూనాంరక్షణందాన మిజ్యాధ్యయనమేవచ।
వణిక్పథంకుసీదంచ వైశ్యస్యకృషిమేవచ॥ ౯౦॥

பசூநாம் ரக்ஷணந்தாந - மிஜ்யாத்ய யநமேவச
வணிக்பதங் குஸீதஞ்ச - வைஸ்யஸ்ய கிருஷிமேவச - கூ0.

எ-து. வைசியனுக்குப், பசுக்காத்தல் - தானங்கொடு த்தல் - வேதமோதல் - சலத்திலும் பூமியிலும் உண்டான இரத்தினம் நெல் முதலிய வியாபாரஞ்செய்தல்-வட்டி வா ங்குதல்-பயிரிடுதல், இவ்வாறையும் விதித்தார். எ-று.

---

*பராசரஸ்மிருதி ஆச்சாரகாண்டம். கூகஉ-வது சுலோகம்.
లాభకర్మతథారత్నం - గవాంచపరిపాలనం।
కృషికర్మచవాణిజ్యం - వైశ్యవృత్తిరుదాహృతా॥ ౬౨॥
லாபகர்மததாரத்நங் - கவாஞ்சபரிபாலநம்,
கிருஷிகர்மசவாணிஜ்யம் - வைஸ்யவிருத்திருதா ஹிருதா.

எ-து. வட்டி வாங்குதல், இரத்தினமுதலிய மணிச் சோதனை, பசு நிரைகளைக் காத்தல், உழுதல், கொள்ளல் விற்றலாகிய பண்டமாற்று, இவைகள் வைசியன் தருமமா கக் கூறப்பட்டது.

பிரகற்பதி - ஸ்மிருதி.

స్వాధ్యాయోయజనందానం. పశూనాంపాలనంతథా।
కుసీదకృషివాణిజ్యం. వైశ్యకర్మాణిసప్తవై॥
ஸ்வா த்யாயோயஜநந்தானம்-பஸூநாம்பாலநந்ததா,
குஸீதக்கிருஷிவாணிஜ்யம்-வைஸ்யகர்மாணிஸப்தவை.

எ-து. வேதமோதல், வேள்விபுரிதல், ஈதல், பசுக்கா த்தல், வட்டி யீட்டல், உழவுத்தொழில் செய்தல், பண்ட மாற்றுதலாகிய வியாபாரம். இவ்வேழுகருமமும் வைசிய னுக்குச் சிறப்புத்தருமமாம்.

இதன்றொடர்-உக-வது பக்கத்திற்காண்க.



கூக-வது சுலோகம்.

ఏకమేవతుశూద్రస్య ప్రభుఃకర్మసమాదిశత్।
ఏతేషామేవవర్ణానాం శుశ్రూషామనసూయయా॥ ౯౧॥
ஏகமேவது ஸூத்ரஸ்ய - பிரபுகர்மஸமாதிஸத்
ஏதேஷா மேவவர்ணாநாம் - ஸுஸ்ருஷா மநஸூயயா கூக.

எ-து. சூத்திரனுக்கு, இந்த மூன்று வருணத்தாருக் கும் பொறுமையின்றிப் பணிசெய்வதொன்றையே முக்கி யமான தருமமாக விதித்தார் எ-று.

---

உஉ-வது பக்கத்தின்றொடர்.

யாஞ்ஞவற்கியஸ்மிருதி.

కుసీదకృషివాణిజ్య పాశుపాల్యంవిశః స్మృతం।
குஸீதகிருஷிவாணிஜ்ய-பாஸுபால்யம்விஸஃஸ்மிருதம்.

எ-து. வட்டிக்கு வாங்குதல், உழவு, கொள்ளல் வி ற்றல், பசுக்காத்தல், வைசியனது, என்பதாம்.

வராக புராணம்.

స్వాధ్యాయం యజనందానం కుసీదంపశుపాలనం।
గోరక్షాంకృషివాణిజ్యం కుర్యాద్వైశ్యోయథావిధి॥
ஸ்வாத்யாயம் யஜநந்தாநம் - குஸீதம்பசுபாலநம்,
கோரக்ஷாங்கிருஷிவாணிஜ்யம்-குர்யாத்வைஸ்யோயதாவிதி.

எ-து. வேதமோதல், வேள்விசெய்தல், தானமீதல், வட்டிவாங்குதல், பசு நிரையோம்பல், ஆனிரைகாத்தல், உழவு, வாணிபம், இவைகளை விதிப்படி வைசியன் செய்ய வேண்டும். எ-று.

மார்க்கண்டேய புராணம்.

దానమధ్యయనంయజ్ఞో వైశ్యస్యాపిత్రిధైవసా
వాణిజ్యంపాశుపాల్యంచ కృషిశ్చైవాస్యజీవికా॥
தாநமத்யயநம் யக்ஞோ - வைஸ்யஸ்யாபித்ரிதைவஸா
வாணிஜ்யம் பாஸுபால்யஞ்ச-கிருஷிஸ்சைவாஸ்யஜீவிகா.

எ-து. தானமீதல், வேதமோதல், வேள்விசெய்தல், இம்மூன்றும் வைசியன் வைதிககருமமாம்; வாணிபம், பசு நிரைகாத்தல், உழவுத்தொழில் இம்மூன்றும் சீவனத்தொ ழிலாம். எ-று.

௮-வது அத்தியாயம் ௮௮-வது சுலோகம்.

బ్రూహీతిబ్రాహ్మణంపృచ్ఛే త్సత్యంబ్రూహీతిపార్థివమ్।
గోబీజకాంచనైర్వైశ్యం శూద్రంసర్వైస్తుపాతకైః॥ ౮౮।

புரூஹீதி ப்ராஹ்மணம் பிரச்சேத்-ஸத்யம்புருஹீதிபார்த்திவம், கோபீஜகாஞ்சனைர்வைஸ்யம் - ஸூத்ரம்ஸர்வைஸ்து பாதகை:. ... ... ... ... ௮௮.

எ-து. பிரமாணத்தில், பிராமணனைச்-சொல்லென்றும், க்ஷத்திரியனை-யுண்மையைச் சொல்லென்றும், வைசியனை - நீ பொய்சொன்னால் உன்னுடைய-பசு-விதை-பொன்பலியாதழியுமென்றும், சூத்திரனை-நீ பொய் சொன்னால் சர்வபாதகங்களையு மடைவாயென்றும், சத்தியங்கேட்க வேண்டுவது எ-று.

௯-வது அத்தியாயம்-௩௨௭-வது சுலோகம்.

ప్రజాపతిర్హి వైశ్యాయ సృష్ట్వాపరిదదేపశూన్।
బ్రాహ్మణాయచరాజ్ఞేచ సర్వాఃపరిదదేప్రజాః॥ ౩౨౭॥

பிரஜாபதிர்ஹிவைஸ்யாய - ஸ்ருஷ்ட்வா பரிததேபஸூன் பிராஹ்மணாயசாராஜ்ஞேச ஸர்வா:-பரிததேபிரஜா: ௩௨௭.

எ-து. பிரமன், பசுக்களை யுண்டுபண்ணியதைக் காக்கும்படி வைசியனிடத்திலும், பிரஜைகளைச் சிருட்டித்த அவர்களை மறுமையாலு மிம்மையாலுங் காக்கும்படி பிராமண க்ஷத்திரியனிடத்திலும், ஒப்புவித்தார் எ-று.

௩௨௮-வது சுலோகம்.

నచవైశ్యస్యకామస్స్యాన్నరక్షేయంపశూనితి।
వైశ్యేచేచ్ఛతినాన్యేన రక్షితవ్యాఃకథంచన॥ ౩౨౮।

நசவைஸ்யஸ்ய காமஸ்யாந்-நரக்ஷேயம்பஸூநிதி வைஸ்யேசேச்ச திநாந்யேந-ரக்ஷிதவ்யா:கதஞ்சந ௩௨௮.

எ-து. பசுக்களைத்தான் காக்கவேண்டுவதில்லையென்று வைசியன் எண்ணக்கூடாது. அவன் காக்கும்பொழுது மற்றொரு சாதியானும் பசுக்களைக் காக்கக்கூடாது எ-று.



௩௩௰-வது சுலோகம்.

బీజానాముప్తిమావిద్యా-త్క్షేత్రబీజగుణస్యచ।
మానయోగాంశ్చజానీయా-త్తులాయోగాంశ్చసర్వశః॥ 330॥

பீஜாநாமுப்திமாவித்யாத்-க்ஷேத்ரபீஜகுணஸ்யச, மாநயோகாஞ்சஜாநீயாத்-துலாயோகாஞ்ச சர்வஸ:

எ-து. எல்லாவிதையையும், விதைக்கிற முறைமையையும், அதையதை விதைக்கத்தக்க காலத்தையும், நிலத்தின் குணதோஷத்தையும், படி தராசு இவைகளிலிருக்கிற தந்திரவுபாயத்தையும், அறியவேண்டும். எ-று.

௰-வது அத்தியாயம் ௭௯-வது சுலோகம்.

శస్త్రాస్త్రభృత్త్వంక్షత్రస్య వణిక్పశుకృషిర్విశః।
ఆజీవనార్థంధర్మస్తు దానమధ్యయనంయజిః॥ ౭౯।

ஸஸ்த்ராஸ்த்ரப்ருத்வம் க்ஷத்ரஸ்ய-வணிக் பஸுகிருஷிர் விஸ:, ஆஜீவநார்த்தந் தர்மஸ்து-தாநமத்யயநம்யஜி:.

எ-து. க்ஷத்திரியனுக்கு வாள்-பாணமுதலிய ஆயுதத்தைத்தரித்துலகாள்வதும், வைசியனுக்கு வர்த்தகஞ்செய்வது-பசுவைக்காப்பது-பயிரிடுவது-இவைகளும், ஜீவனோபாயமாம். மேற்சொல்லிய-யாகம்-தானம் - ஓதல்-வேள்வி தருமோபாயமாம். எ-று.

௮௨-வது சுலோகம்.

ఉభాభ్యామప్యజీవంస్తు కథంస్యాదితిచేద్భవేత్।
కృషిగోరక్షమాస్థాయ జీవేద్వైశ్యస్యజీవికామ్॥ ౮౨॥

உபாப்யாமப்யஜீவம்ஸ்து-கதஸ்யாதிதிசேத்பவேத் கிருஷிகோரக்ஷமாஸ்தாய-ஜீவேத்வைஸ்யஸ்யஜீவிகாம்.

எ-து. பிராமணன் தன் சாதித்தொழில் க்ஷத்திரியசாதித்தொழி லிரண்டினாலும் ஜீவிக்கக்கூடாவிடில், வைசியன் தொழிலான பயிர் பசுக்காத்தல் வியாபாரமிவைகளால் ஜீவிக்கலாம். எ-று.

ககரு - வது சுலோகம்.

సపవిత్తాగమాధర్మ్యా దయోలాభః క్రయోజయః।
ప్రయోగః కర్మయోగశ్చ సత్ప్రతిగ్రహఏవచ॥౧౧౫॥

ஸப்வித்தாகமா தர்ம்யா-தயோலாப: க்ரயோஜய:
ப்ரயோக: கர்மயோகஸ்ச-ஸத்ப்ரதி கிரஹஏவச.

எ-து. மேற்சொல்லப்படும் ஏழுவகையாலும் சம்பாதித்தபொருள் தோஷமில்லாதது. அதில், பிதிர்தனம்-புதையல்-கிரயப்பொருள் இம்மூன்றும் எல்லாவருணத்தாருக்கும் பொது. ஜயப்பொருள் க்ஷத்திரியனுக்கும், வட்டிவாங்குதல் வர்த்தகம் அல்லது பயிர் இவ்விரண்டும் வர்த்தகனுக்கும், நல்லவனிடத்தில் தானம் வாங்குதல் பிராமணனுக்கு முயர்ந்தது. எ-று.

கஉഠ - வது சுலோகம்.

ధాన్యేష్టమంవిశాంశుల్కం వింశంకార్షాపణావరం।౧౨౦॥

தாந்யேஷ்டமாம்விஸாம்ஸுல்கம்-விஸங்கார்ஷாபணவரம்
மற்றப்பாதி சுலோகம் சூத்திரவிதி.

எ-து. தானியவிபாபாரஞ்செய்கிற வைசியனிடத்தில் அந்தலாபத்தில் இருபதில் எட்டுப்பங்கையும், ஐம்பதில் ஒன்று வாங்கவேண்டியதொக்கலாபத்தில் இருபதில் ஒன்றையும் வாங்கிக்கொள்ளலாம். எ-று.

கக-வது அத்தியாயம், உநரு-வது சுலோகம்.

బ్రాహ్మణస్యతపోజ్ఞానం తపఃక్షత్రస్యరక్షణం।
వైశ్యస్యతుతపోవార్తా తపశ్శూద్రస్యసేవనం॥౨౩౫॥

ப்ராஹ்மணஸ்யதபோக்ஞாநம்-தப:க்ஷத்ரஸ்யரக்ஷணம்
வைஸ்யஸ்யதுதபோவார்த்தா-தபஸ்ஸூத்ரஸ்யஸேவநம்.

எ-து. பிராமணனுக்கு-ஞானமும், க்ஷத்திரியனுக்கு பிரசைகளைக் காத்தலும், வைசியனுக்குப் பயிர்வர்த்தகங்களும், சூத்திரனுக்குப் பணிவிடையுந் தவமாம். எ-று. பணிவிடை யென்றதைக் குல்லூகபட்டர் பிராமணப்பணிவிடையென்றார்.*



* இக்கருத்தே திராவிடத்திலுள்ள சில புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது வருமாறு.

காளத்திபுராணம். கக-வது வருணச்சிரம தரும முரைத்த அத்தியாயம்.

(உ) அந்தணன்செய்திவேள்வியாற்றுதலாற்றுவித்தல்
சந்தமாமறைகளோத லோதுவித்திடுதல்தக்கார்
சிந்தனையுவப்பவீத லேற்றிடலாறுஞ்செப்பில்
புந்தியின்மிக்கோரன்னோர் தொழிலெனப்புகன்றிட்டாரே.

(௩) முடியுடைவேந்தர்செய்தி முத்தழலோம்பலோதல்
கொடைபுரிந்திடுதல்செல்வம் புரந்திடல்குணாகடற்பார்
அடையுமின்னுயிர்களுள்ள முவப்புறவரசுசெய்தல்,
திடமுற மநுநூலாய்தல் செருவினிற்புறங்காட்டாமை.

உக வணிகர்தஞ்செய்திகூறின் மகவினையாற்றலோதல்
உணர்வுடையவர்க்குத்தான முதவல்வேளாண்மையோம்பல்
தணிவில்வாணிகத்தாலீட்டலானினந்தழைப்பக்காத்தல்
துணிவுறுமில்வமற்றன்னோர் செய்வனதோகையென்றாய்.

ருக பின்னவர்செய்திபேசின் பீடுசொல் மறையோராதி
முன்னவர்மூவர்தம்மை முறையினுதரித்தல்மூவர்
சொன்னவைமுடித்தலென்றுந் தூசிதிவிதியினீட்டி
அன்னதையறத்தினீதல வர்க்குமுத்தொழிலுமாமே.

உகூ-வது-வருணச்சிரமங்கூறிய அத்தியாயம்.

௭ வணிகனுக்கிம்மையில் வாணிபத்தொடு
தணிவில் வேளாண்மை செய்திடல் சதுர்த்தனுக்
கிணையிலிம்மூவருமின்புறும்படி
தணிவிலாதவர்பணி தானிழைத்தலாம்.

## MACNAUGHTEN'S HINDU LAW.

### Vol. I, Page 248.

"The meaning is, he (the Judge) shall abjure a Brahmin by saying, if you speak falsely, your truth will be destroyed; a Kshatria by saying, your horse elephant and weapons will become useless: a Vaisya your cattle, seeds, and gold will be unproductive: a Sudra, he shall abjure by saying, if you speak falsely, all sins will be on your head."

எ-து. மெக்நாட்டன் துரையாற் செய்யப்பட்ட ஹிந்து நியாய நூல் முதலாவது புத்தகம். ௨௪௮-வது பக்கம்.

நியாயாதிபதி, பிரமாணிக்கம் வாங்கும்போது பிராமணனிடத்தில்-நீ அசத்தியங் கூறுவையானால் உன்னுடைய உண்மை யழிந்துவிடுமென்றும், க்ஷத்திரியனிடத்தில்-உன்னுடைய குதிரையும்யானையும் ஆயுதங்களும் உனக்குப் பயன்படாதென்றும், வைசியனிடத்தில்-உன்னுடைய ஆனிரையும் தானியங்களும் பொன்னும் உனக்குப்பலனாகாதென்றும், சூத்திரனிடத்தில்-சகல பாபங்களையும் நீ சுமக்கக்கடவாயென்றும், சொல்ல வேண்டுமென்று குறிப்பித்திருக்கின்றது.

## COLEBROOK'S DIGEST OF HINDU LAW.

### Page 10.

"The king should order each man of the mercantile class to practise trade, money-lending, or agriculture, and attendance on cattle; and each man of the servile class to act in the service of the twice-born. If they refuse to do so, they should be amerced by the king."



கோல்புருக்குதுரையாற் செய்யப்பட்ட ஹிந்துலா.
௰-வது பக்கம்.

அரசன், வைசிய வகுப்பினர்களில் ஒவ்வொருவரையும் வர்த்தகம்-கடன்கொடுத்தல் -பயிர் - பசுக்காத்தல்-இவைகளிற் பயின்றவராவும், சூத்திரவகுப்பினர்களில் ஒவ்வொருவரையும் (மேன் மூவர்களாகிய) இருபிறப்பினர்களுக்கு ஊழியஞ்செய்வதிற் பயின்றுவரவும், கட்டளையிடவேண்டும். அவர்கள் அப்படிசெய்யாவிட்டால் அரசனால் தண்டிக்கப்படுவார்கள்.

### Page 12, Note.

"In the Jatimala or Garland of classes, the origin of the principal castes is given as follows:—

As regards the regular means of subsistence for the above castes—those for a Bramana are assisting to sacrifice, teaching the Vedas, and receiving gifts; for a Vaisya merchandise, attending on cattle, and agriculture; for a Sudra, servile attendance on the higher classes."

ஜாதிமாலை ௰௨-வது பக்கத்தில் உத்கிருஷ்டசாதிகளின் உற்பத்தியைக்குறித்து சொல்லியிருக்கிறதாவது.

பிராமணனுக்கு-யாகஞ்செய்வித்தல் வேதம் ஓதுவித்தல் - தானம்வாங்குதலுமாம். வைசியனுக்கு, வியாபாரஞ்செய்தல்-பசுக்காத்தல் - பயிர்செய்தலுமாம். சூத்திரனுக்கு மேற்குலத்தாருக்குப் பணிசெய்தலாம்.

## THE MODERN ORATOR EDMUND BURKE.

### Page 806.

"These people (the Hindus) my lords, from the oldest time, have been distributed into various orders, all hereditary, which are called castes, of which four are the most remarkable; the Brahmins, the Kshatrias, the Vaisyas, and the Soodras; the first, the priests, to whom honors almost divine are paid; the second, the military order; the third, husbandmen, and merchants; the last, the menial, or servile class or caste."

நிகழ்கால சபாப்பிரசங்கியாகிய எட்மண்டு பர்க்கு துரையாற்செய்யப்பட்ட கிரந்தத்தில் ௮௦௬-வது பக்கம்.

எனதாண்டவர்களே, ஹிந்துக்கள் தொண்டுதொட்டு பரம்பரையாய் வரப்பட்ட அனேகஜாதியர்களாக வகுக்கப்பட்டிருக்கிறார்கள். அவற்றுள், பிரம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திராகிய-௪-ம் உத்கிருஷ்டர்களாம். அவற்றுள், முதல் வகுப்பினர்கள் ஆசாரியார்களாம்; அவர்களுக்கு சற்றேறக்குறைய தேவர்களுக்குச் சமானமாக மரியாதைசெய்கிறார்கள். இரண்டாவதார், யுத்தரங்கத்தார். மூன்றாவதார் உழவினர்களும் - வர்த்தகர்களும். ஈற்றினர் ஊழியஞ்செய்பவர்களாம்.

## THE MITAKSHARA, CHR. I. S. I.

### Page 369.

"Let a Brahmin acquire wealth by acceptance or the like; a Kshatria by victory and so forth; and Vaisya by agriculture, &c."



### Page 370.

"The acceptance of alms, as well as other prescribed modes for a Brahmin; conquest and similar means for a Kshatria; husbandry and the like for a Vaisya; and service and the rest for a Sûdra.

### Page 371.

"What is gained or earned by agriculture, keeping of cattle, (traffic), and so forth, is for a Vaisya peculiar; and so is, for a Sudra, that which is earned in the form of wages, by obedience to the regenerate and by similar means."

மிதாக்ஷரம் - முதலாவது அத்தியாயம் முதல்பிரிவு

௩௬௯-வது பக்கம்.

பிராமணன் திரவியத்தைக்கொடுக்கப் பெறுதன்முதலியவற்றாலும், க்ஷத்திரியன் ஜெயமுதலியவற்றாலும், வைசியன் பயிர்முதலியவற்றாலும் சம்பாதிக்கக்கடவர்.

௩௭௦-வது பக்கம்.

பிக்ஷையை யங்கீகாரஞ்செய்தலும் குறிக்கப்பட்ட மற்றமார்க்கங்களும் பிராமணனுக்கும், செயித்தலும் இதுபோல்வனவும் க்ஷத்திரியனுக்கும், பயிர்செய்தலும் இதுபோல்வனவும் வைசியனுக்கும், ஊழியமுதலியவை சூத்திரனுக்குமாக விதிக்கப்பட்டது.

௩௭௧-வது பக்கம்.

பயிரிடுதலாலும் பசுக்காத்தலினாலும் வர்த்தகமுதலியவற்றாலும் ஆர்ச்சிக்கப்பட்டது வைசியனுக்கு முக்கியமா

ணதாம். கூலியினாலும் இருபிறப்பினர்க்கு ஊழியமுதலி யவற்றாலும் ஆர்ச்சிக்கப்பட்டது சூத்திரனுக்குரியதாம்.

## BHAGAVAT GEETA BY REVD. GARRETT.

"The natural duty of the Vaisya, is to cultivate the land, tend the cattle, and buy and sell."

பகவத்கீதை.

కృషిగోపశువాణిజ్యం వైశ్యకర్మస్వభావజం।
கிருஷிகோப ஸுவாணிஜ்யம்-வைஸ்யகர்மஸ்வபாவஜம்

ஏ-து. உழவு, ஆன் நிரைகாத்தல், ஏனைப்பசுவினை மேய்த்தல், இம்மூவகையாலும் வாணிபஞ் செய்தல் இவை வைசியனுக்குரிய இயற்கைத்தருமாம்.

## CALCUTTA REVIEW, No. 29, Vol. 15.

"The commentator says, that it was want of a community to develope the resources of the earth, and to create the treasures, of which (by anticipation) the Kshatrias were constituted the guardians, that continued to disturb the Creator's mind. Accordingly he made a third order, the Vaisyas."

"The natural duties of the Brahmins are subjugation of the mind and body austerity, sanctity, &c. Those of the Kshatrias are heroism, &c. Those of the Vaisyas are commerce, agriculture, and tending on cattle. The duty of the Sudra is to serve the other orders."



கல்கத்தா ரிவியூயென்னும் பத்திரிகை ௨௯-வது புத்தகம் ௧௫-வதி லக்கம்.

முன்னரே க்ஷத்திரியர்களைக் காவலராயேற்படுத்தப் பட்ட பூமியிலுள்ளபொருள்களை வெளிப்படுத்தற்கும், திரவியங்களைப் பாதுகாத்தற்கும், மனிதர்களுள் ஒருதொகுதி வேண்டியிருத்தலால் அது கடவுளுடைய மனதைக் கவலைப்படுத்திக்கொண்டிருந்தது. ஆகையால், அவர் மூன்றாம் வகுப்பினராக வைசியர்களைப்படைத்தார் என்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

பிராமணர்களுடைய இயற்கைத்தொழிலாவது - தேசேந்திரியங்களை யடக்கலும், தவம் புரிதலும், ஒழுக்கமுமாம். க்ஷத்திரியனுக்கு - வீரத்தன்மையும்; வைசியனுக்கு - வியாபாரம், பூவிவசாயம், ஆனிரைகாத்தலும்; சூத்திரனுக்கு - மேன் மூவருக்கே வல்புரிதலுமாம்.

## REE'S CYCLOPŒDIA.

### Caste.

"The third order called the Bice, from the belly and thighs (nourishment); to provide the necessaries of life by agriculture and traffic, was composed of husbandmen and merchants."

Sects of Hindoos. "Vaisya, vulgarly called Vais or Bhyse, is the tribe next in rank to the military. This is a very numerous tribe, comprising merchant traders, and cultivators. In this, that is, practising its avocations, are found many individuals of the three others. The natural duty of the Vaisya is to cultivate the land, tend the cattle, buy and sell."

ரீஸ் துரையாற்செய்யப்பட்ட சிக்லோபேடியா
பென்னுங் கிரந்தம்—ஜாதி.

தேகபோஷணைக் காதாரமாகிய வயிறு துடையைப்போல, உழவாலும் வியாபாரத்தாலு முக்கிய சீவனுதாரஞ்செய்யும் வைசியரென்னும் மூன்றாம் வகுப்பினராகக் குடிமையாளரையும் வர்த்தகரையுந் தொகுக்கப்பட்டது.

ஹிந்துக்களின் பிரிவு—வைசியர்கள் என்பது வைஸ்-அல்லது-பைசென்று சாதாரணமாக வழங்கும். இவர்கள் க்ஷத்திரியருக்கு அடுத்தவகுப்பினராக வைக்கப்பட்டது. இவ்வகுப்பு வர்த்தகர் உழவினர் என்பது முதலாகிய அனேக குடும்பங்களாகவிருக்கின்றது. இவர்கள் தொழிலை மற்ற மூவர்களில் அனேகர் பயின்றுவருகிறார்கள். ஆயினும், வைசியர்களி னியற்கைத் தொழிலாவது உழுதலும் ஆனிரைகாத்தலும் கொள்ளல் விற்றலுமாம்.

## WARD'S ACCOUNT OF THE HINDOOS.

### Vol. 3, Page 66.

"The third order of the Hindoos are called the Vaisyas. The business of the Vaisya is said to consist in keeping cattle, carrying on trade, lending at interest, cultivating land, &c.

In the Kalee-yooga, the Vaisyas like the Kshatrias are said to have fallen to a level with the Soodras.

The few Vaisyas in Bengal are farmers, merchants, &c. In the west of Hindoostan they



are more numerous. They marry and eat among themselves only.

ஹிந்துக்களைப்பற்றி வார்ட்ஸ் யென்பவர் எழுதிய சரித்திரம்—௩-ம் புத்தகம்—௬௬-வது பக்கம்.

ஹிந்துக்களின் மூன்றாம் வகுப்பு வைசியரென்று சொல்லப்படும். வைசியர்களின் றொழிலாவன, ஆனிரை காத்தல்-வியாபாரஞ் செய்தல்-வட்டிக்குக்கொடுத்தல்-பயிர்செய்தல் முதலியவைகளாம்.

கலியுகத்தில் வைசியர்கள்-க்ஷத்திரியர்களைப்போலவே சூத்திரர்களை யொத்திருக்கிறார்கள்.

வங்காளத்திலுள்ள சில வைசியர்கள் பயிரிடுங் குடிகளும் வியாபாரிகளுமாக விருக்கிறார்கள். அவர்களிலனேகர் ஹிந்துஸ்தானத்தின் மேற்றிசையிலுள்ளவர்கள்; கொள்வன கொடுப்பனவும் பந்தி போஜனமுந் தங்களுக்குள்ளேயே செய்கிறார்கள்.

## INDIA (BY. REVD. TREVOR.)

### Para. 39.

It might indeed, almost be thought that some such allegory was present to the mind of the Hindu writer, in which the priest whose lips are to keep knowledge, would naturally spring from the head; the class which is to bear the sword, from the arm; the mercantile and agri. cultural body, who are the stretngth of the community, from the loins; and the servile classes from the feet of the Creator.

திரிவர் பாதிரியரால் எழுதிய இந்திய சரித்திரம்,
௩௯-வது பிரிவு.

ஹிந்து நூலாசிரியர்கள் சில அந்தரார்த்தங்களை மனதிற்கொண்டு, வேத ஞானத்தை யுணர்த்தும் அதாரங்களை யுடைய ஆசிரிய வகுப்பினர்களை, சிருட்டி கருத்தாவின் சிரத்திலும்; ஆயுதங்களைத் தரிக்கும் வகுப்பினர்களை, புஜத்திலும்; சமுதாயத்தில் யாவருக்கும் உறுதியைத் தரத்தக்க வர்த்தகர் பயிரிடுவோர்களை, இடுப்பிலும்; ஊழியவகுப்பினர்களைப் பாதத்திலும்; பிறந்ததாகக் கூறியது உண்மையான தென்றே நினைக்கவேண்டியதாயிருக்கின்றது.

## INDIA, ITS NATIVES AND MISSIONS

## (By REVD. TREVOR.)

### PAGE 113.

Corresponding with this origin, to the first was assigned the office of teaching and guiding men; to the second of ruling and bearing arms; to the third the pursuits of commerce and agriculture; and to the last, the service of the other three.

The word Brahmin is derived from Brahma, signifying prayer, or sacred learning; in like manner the other castes have been referred to an etymology, importing respectively, protection, agriculture, and service.

இந்தியாவின் சுதேசிகளையும் தூதர்களையும் பற்றி, திரிவரென்னும் பாதிரியாற் செய்யப்பட்ட ஹிந்துஸ்தான் சரித்திரம்-௧௧௩-வது பக்கம்.



இந்தப் பூர்வோற்பத்திக்கு வொற்றுமையாகவே, மனிதர்களுக்குப் போதித்தலும் வழிகாட்டலுமாகிய தொழில்களை முதல் வகுப்பினர்களுக்கும்—ஆளுதலையும் ஆயுதந்தாங்கு தலையும் இரண்டாம் வகுப்பினர்களுக்கும்—வர்த்தகமும் வியவசாயமும் மூன்றும் வகுப்பினர்களுக்கும்—மேன்மூவருக்குப் பணிசெய்தலை ஈற்று வகுப்பினர்களுக்கும் நியமிக்கப்பட்டது.

பிராமணமென்பது பிரமசப்தத்திலுண்டாயது. அதற்கு ஸ்தோத்திரம் அல்லது தேவஸ்மரணையென்றருத்தமாம். இம்முறையே ஏனைய சாதிப் பெயர்களுக்குஞ், சொல்லின், விவகாரப்படி, சம்ரக்ஷணம், வியவசாயம், ஊழியமென்னும் பொருளைத் தருகின்றது.

## RICKARD'S INDIA.

## VOL. I.

There are four great classes, Brahmins, Kshatrias, Vaisyas, and Soodras.

### PAGE 6.

The first is the sacerdotal class; the second, military, or appointed to defend the people; the business of the third, commerce, lending at interest, agriculture, and keeping herds of cattle; and of the fourth, to serve the higher classes.

### PAGE 9.

Miller in his historical view of the English Government, observes that this distribution of the people into clergy, military, husbandmen, and artificers, is to be found everywhere; and the

establishment of the four great castes in the country of Hindoostan is precisely of the same nature. The classes of clergy, military, husbandmen, and craftsmen, are all that is required for the beginnings of civilized life.

ரிக்கர்ட்ஸ் துரையாற் செய்யப்பட்ட இந்திய சரித்திரம்.

முதற் புத்தகம்.

பிரம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரரென-௪-பெரும் வகுப்புகளிருக்கின்றன.

௬-வது பக்கம்.

முதல் வகுப்பினர்-ஆசிரியர்கள்—இரண்டாம் வகுப்பினர் - வீரர்கள் அல்லது மனிதர்களைப் பாது காத்தற்காக ஏற்படுத்தப்பட்டவர்கள்—மூன்றுவதார் தொழில்-வர்த்தகம், வட்டிக்குக் கொடுத்தல், விவசாயம், ஆனிரை காத்தல் — நான்காவதார் - உயர்வகுப்பினர்க் கூழியஞ் செய்தல்.

௯-வது பக்கம்.

மில்லர் துரை தனது சரித்திரத்தில், இங்கிலீஷ் துரைத்தனத்தைப்பற்றி கூற வந்த விடத்தில், ஆசிரியர்கள், வீரர்கள், பயிரிடுங் குடிகள், கம்மாளர் முதலிய தொழிலாளிகள் என-௪-வகையான மனிதர்களின் பாகுபாடானது எல்லாவிடங்களிலுங் காணலாம். ஹிந்துஸ்த்தானத்திலு மிந்தப் பெரிய-௪-வகையான சாதிபேற்பாடானது அதேப் பிரகாரமாக விருக்கின்றது. நாகரீகமாக வாழத்தொடங்கிய முதற்காலத்திற்கே, ஆசிரியர்கள், வீரர்கள், பயிரிடுங்குடிகள், கம்மியர்கள் முதலியவர்களுமாகிய, இந்த-௪-வகுப்புகளும் வேண்டுமானவைகளா யிருக்கின்றன.



## WEBSTER'S DICTIONARY;

### Caste.

In Hindoostan, a name given by the Portuguese to the several classes into which society is divided, with fixed occupations, which have come down from the earliest ages. The original castes are four:—the Brahmins or sacred order; the Kshatrias or soldiers and rulers; the Vaisyas or husbandmen and merchants; and the Soodras or labourers and mechanics.

வெப்ஸ்டர் அகராதி—ஜாதி.

ஹிந்துஸ்தானத்தில் பூர்வந் தொடங்கி பரம்பரைப்பற்றி வந்ததொழிற்களிற் பிரிந்தகூட்டமாகிய ஜாதியென்னும்பாகுபாட்டிற்கு போர்ட்சு கீஸ் தேசத்தாரால் "கியாஸ்ட்டு" என்று பெயர் கொடுக்கப்பட்டது. பூர்வீகமான ஜாதிகள் நான்காம்; அவற்றுள், பிராமணர்கள் அல்லது பரமார்த்தமானவர்கள்—க்ஷத்திரியர்கள்-வீரர்கள்-அல்லது ஆள்பவர்கள்—வைசியர்கள்-பயிரிடுங் குடிகள்-வர்த்தகர்கள்—சூத்திரர்கள் - வேலைக்காரர்கள்-கம்மாளர்கள் என்பவர்களாம்.

## TYTLER,S GENERAL HISTORY:

### Page 273.

The whole body of the people of Inda was divided into four orders or castes. The highest that of the Brahmins, was devoted to religion and the cultivation of the sciences; to the second belonged the preservation of the state—they were its sovereigns and its magistrates in peace, and its

soldiers in war ; the third were the husbandmen and merchants ; and the fourth, the artisans, labourers, and servants. These are inseparable distinctions and descend from generation to generation. Moreover the individuals of each class follow invariably the professions of their forefathers.

A system of feudalism prevailed in India ; the rights to lands flow from the sovereign, to whom a certain duty is payable by the class of husbandmen, who transmit their possessions to their children under the same tenure.

டைட்லர் துரை பொதுச் சரித்திரம்.

பக்கம்-௨௭௩.

இந்தியா தேசத்தின் ஜனசங்க முழுமையும்-௪-வகுப்பு அல்லது சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. எல்லாவற்றிலும் உயர்ந்தவர்கள் பிராம்மணர்கள். இவர்கள் சமயாசாரங்களுக்குஞ் சாஸ்திர பயிர்ச்சிகளுக்கும் உரியவர்களாக இருக்கிறார்கள்—த்விதியர்கள்-இராஜாங்க சம்ரக்ஷகராக யிருக்கிறார்கள்-இவர்கள் அரசர்களாகவும்-நியாயாதிபதிகளாகவும் - யுத்தத்தில் வீரர்களாகவு மிருக்கிறார்கள்—திரிதியர்கள் பயிரிடுங் குடிகளும்-வர்த்தகர்களுமாம்—சதுர்த்தர்கள் கம்மாளர்கள்-பண்ணையாள்கள் தொழிலாளிகளுமாம். இவை நீக்கப்படாத குறிகளாகவும்-வம்சபரம்பரை யாகவும் வருகின்றது. அன்றியும், ஒவ்வொரு வகுப்பினர்களும், தங்கள் முன்னோர்கள் செய்தொழிலையே மாறுபாடின்றித் தொடர்ந்து வருகிறார்கள்.

பரம்பரை பாத்தியதை இந்தியா தேசத்தில் எப்போதும் பரவி யிருக்கின்றது. நிலபாத்தியதை அரசனி



டத் திருந்து வருகின்றது. பயிரிடுங் குடிகள் அவ்வரசனுக்கு நிலவரி கட்டி,காணிகாட்சியின் பாத்தியதையை தங்கள் வழிவரும் பிள்ளைகளுக்குச் செலுத்திவருகிறார்கள்.

## WALKER'S UNIVERSAL GAZETTEER.

## NOTES OF CASTES AT MADRAS.

VOL. II, PAGE 306.

Regenerate includes the other three classes of Brahmins, Kshatrias, and Vaisyas. It means born a second time, and has reference to the ceremony of "Oopanayanam," when these higher classes take the distinguishing thread ; the Brahmin before the age of nine ; and the other two classes at any time before the capital ceremony.

வாக்கர் துரை யூனிவர்சல் கெஜெட்டியர்-யென்னும் பத்திரிகை - மதிராஸிலுள்ள ஜாதியைப் பற்றிய குறிப்புகள்.

௨-ம் புத்தகம். ௩0௬-வது-பக்கம்.

இருபிறப்பாளரென்பது பிரம க்ஷத்திரிய வைசியரென்னும்-௩ - சாதிகளை அடக்கிக் கொண்டிருக்கின்றது. அதனருத்தம் இரண்டாந்தரம் பிறந்தவர்கள் என்பதாம். இது உயர் வகுப்பினர்கள் பூணூல் தரிக்கும் உபநயன கருமத்தைக் குறிப்பிக்கின்றது. பிராமணர்கள்-௯-வயதுக்குள்ளாகவும், ஏனைய இரண்டு வகுப்பினர்கள் முக்கியமாகிய கல்யாணத்திற்கு முன் எந்தகாலத்திலாவது செய்யலாம்.

## THE VISHNU POORANA, BY H. H. WILSON.

### PAGE 96.

The Vayu Purana states that the castes were now first divided according to their occupations having, indeed, previously stated that there was no such distinction in the Kreta age: Brahma now appointed those who where robust and violent to be Kshatrias, to protect the rest; those who were poor and pious, he made Brahmins; those *who were of less power but industrious, and addicted to cultivate the ground*, he made Vaisyas; whilst the feeble and poor of spirit were constituted Sudras; and he assigned them their several occupations, to prevent that interference with one another which had occurred as long as they recognised no duties peculiar to castes.

ஹெச்சு. ஹெச்சு. உல்ஸன் துரையாற் செய்த
விஷ்ணு புராணம் - ௯௬-வது - பக்கம்.

ஜாதிகளானது முதலில் தொழின் முறைமைப்படி பிரிக்கப்பட்டதென்று வாயுபுராணத்திற் கூறப்பட்டிருக்கின்றது. கிரேதாயுகத்தில் உண்மையாகவே இப்போக்கொத்த வித்தியாசங்களில்லையென்று முன்னர்க்கூறி, யிப்போது பிரமாவானவர் அடிபாயும் பலாஷ்டிகமாயுமுள்ளவர்களை மைத்தவர்களைக் காப்பாற்றும் பொருட்டு க்ஷத்திரியர்களாக நியமித்தார்.—ஏழைகளாயும் தேவதாபத்தியுள்ளவர்களாயு மிருக்கப்பட்டவர்களை பிராமணர்களாகவும்—கொஞ்ச வலிவுடையவர்களையும், உழைப்புடையவர்களையும், பூமியை உழுது பயிர் செய்கிறவர்களையும், வைசியர்களாகவும்—பலஹீனமுந் தைரியக் குறைவுமுடையவர்களைச் சூத்திரர்களாகவும் ஏற்படுத்தினர். சாதியுரிமைத் தொழிலில்லாமையால் நெடுங்காலமா யொருவருக்கொருவர் கலப்பிலிருந்ததைத் தடுக்கும்படிப் பலதொழில்களை யவரவர்களுக்குப் பிரித்து நியமித்தார்.



## THE HINDU PANTHEON, BY MOORE.

### PAGE 343.

The Vaisya; commonly called Vais or Bhyse, merchants, traders, and cultivators. The natural duty of the Vaisya is to cultivate the land, tend the cattle, buy and sell.

மூர்துரையாற் செய்யப்பட்ட ஹிந்துக்கள்
சர்வதேவாலயம் - ௩௪௩-வது-பக்கம்.

"வைஸ்ய" என்பது சாதாரணமாக "வைஸ்" அல்லது "பைஸ்"யென்று சொல்லப்படும். அதற்கு வர்த்தகர் வியாபாரி - பயிரிடுவோர் என்றருத்தமாம். வைசியனுடைய சாதாரணத் தொழிலானது பூமியை யுழுதலும் - ஆனிரைகாத்தலும் - கொள்ளல் விற்றலுமாம்.

## ESSAYS ON THE RELIGION, &c. PHILOSOPHY OF THE HINDOOS BY COLEBROOKE.

### PAGE 270.

The permanent separation of classes with hereditary professions assigned to each is among the most remarkable institutions of India; and though now less rigidly maintained than here-

tofore, must still engage-attention. One of the authorities I shall use is the "Jatimala" or garland of Classes, an extract from the "Rudra Yamala Tantra," which in some instances corresponds better with usage, and received opinions, than the ordinances of Menu and the great Dharma Purana.

## PARA. 271.

In the first creation, by Brahma, Brahmins proceeded with the Veda, from the mouth of Brahma From his arms Kshatrias sprung; so from his thighs Vaisyas; from his foot Sudras were produced: all with their females. The Lord of Creation viewing them, said, what shall be your occupations? They replied, we are not our own masters, Oh! God, command us what to undertake. Viewing and comparing their labours he made the first tribe superior over the rest. As the first had great inclination for the divine sciences, therefore he was a Brahmana. The protector from ill was Kshatria. Him whose profession consists in commerce, which promote the success of wars, for the protection of himself and attendance on cattle, he called Vaisya. The other should voluntarily assist the three tribes, and therefore he became a Sudra: he should humble himself at their feet.



## PARA. 276.

The regular means of subsistence for a Brahmana are assisting to sacrifice, teaching the Vedas and receiving gifts; for a Vaisya merchandize, attending on cattle and agriculture; for a Sudra, servile attendance on the higher classes.

மதத்தையும் - தத்வஞானத்தையும் பற்றி கோல்
புறூக் துரையாற் செய்த காவியம்.
பக்கம்-௨௭௦.

தொன்று தொட்டு வருகிற தொழில்களோடு நிலை பெற்றுள்ள சாதி பேதங்களானது இந்தியா தேசத்தின் முக்கியலக்ஷியமான ஏற்பாடுகளிலிருக்கின்றது. இது முன்னிருந்ததைவிட இப்போது அவ்வளவு பிடிமானமாயில்லாதிருந்தபோதிலுங் கவனிக்கத்தக்கதாகவே யிருக்கின்றது. இதற்குரிய சாஸ்திரப்பிரமாணங்களுக்குள், மநுவையும் தரும புராணங்களையும்போல, வழக்கத்திற்கு மிக வொற்றுமையுள்ளதும் அங்கீகரிக்கப்பட்டதுமாகிய உருத்திரயாமள தந்திரத்தின்சாரமாகிய ஜாதிமாலை யொன்றே இங்குதகரிக்கிறேன்.

௨௭௧ - வது பிரிவு.

பிரமசிருட்டியினாரம்பத்தில், பிராமணர்கள் வேதங்களோடு பிரமாவின் முகத்தினின்றுந் தோன்றினார்கள். இவ்விதமாகவே, புஜத்தில் க்ஷத்திரியர்களும் - தொடையில் வைசியர்களும் - பாதத்தில் சூத்திரர்களும், ஸ்திரீகளுடனேதோன்றினார்கள். சிருட்டி கருத்தா, இவர்களை நோக்கி, நீங்கள் என்னதொழில் செய்வீர்களென்றார். அதற்கு அவர்கள் கூறியதாவது, ஓகர்த்தனே! நாங்கள் சுவாதீன கர்த்தர்களல்ல. ஆகையால் நாங்கள் செய்யவேண்டுவதை கட்டளையி

டுகவென்றார்கள். அவரவர்களின் உழைப்பைச் சீர்தூக்கிப் பார்த்து முதல் ஜாதியாரை மைற்றவர்களுக்கெல்லாந் தலைவராக்கினார். முதலவர்கள், தேவதாசாஸ்திரங்களில் பிரியமுடையவர்களாயிருந்ததால், பிராமணர்களானார்கள். துன்பத்தினின்றுங் காப்பாற்றுபவர்கள் க்ஷத்திரியர்களானார்கள். தன்னையுந் தனது நிரை (மந்தை)யையும் பாதுகாத்தலின் நிமித்தம் சண்டைகளில் ஜயத்தைத்தரும் வியாபாரத் தொழிலினர்களைவைசியர்களாகக் கூறினர். மைற்றவர்கள் மூன்று வருணத்தாருக்கும் வலிய உதவி செய்யவேண்டுமென்றதனால் சூத்திரரானார்கள். இவர்கள் அவர்களைப் பணியவேண்டும்.

உளகூ-வது பிரிவு.

பிராமணனுக்குக் கிரமமான ஜீவன விருத்தியானது யாகஞ் செய்வித்தலும், வேதம் ஓதுவித்தலும், தானம்வாங்குதலுமாம்—வைசியனுக்கு வியாபாரஞ் செய்தலும், ஆனிரைகாத்தலும், பயிர்செய்தலுமாம்—சூத்திரனுக்கு - மேலவர்களுக்குப் பணிசெய்தலாம்.

## THE LAND OF THE PERMAULS,

## BY F. DAY.

### Para. 297.

The remarkable institution of Castes amongst the Hindus, is perhaps a result of their early founders for symbolical representations. What more rational than symbolically it should have been represented that the priests who expounded the law, and were considered the wisest of the people, should have derived their existence



from Brahma's mouth, whence the Vedas sprung? That the man of war, living by the strength of his arm, and ruling his fellows by the law of force, should be typified as created from the God's shoulder? That the agriculturalist, who by tilling the soil provides sustenance for himself and others, and gives strength enabling man to stand fatigue, should be shown as coming from the divine thighs? Lastly, that those who subsist by manual labour, as artificers, servants and slaves to the higher classes, should be shown as coming from the feet of Brahma, they being the servile races.

### Para. 313.

The Vaisyas are a mercantile and agricultural caste, said to have been derived from Brahma's thighs, for the purpose of providing for the Brahmins. They are divided into the Boo Vaisyas, the Gho Vaisyas, and the Dana Vaisyas, each of which is again sub-divided.

டே - என்னுந் துரையாற்செய்த - பெருமாள்பூமி

உகூஎ-வது-பிரிவு.

ஹிந்துக்களுக்குள் இலட்சியமானஜாதியேற்பாடானது பூர்வத்து ஸ்தாபனாச்சாரியர்களால் அறிகுறியின் காரணமாக ஏற்படுத்தியதாக விருக்கின்றது. மனிதர்களுக்குள் மிகுந்த விவேகிகளென்று மதிக்கத்தக்கவர்களும் தர்மசாஸ்திரங்களுக்கு வியாக்கியானங்கள் செய்தவர்களுமாகிய குருக்கள்மார் வேதங்களுண்டான பிரமாவின் வாயிலும்பத்தி

யானார்களென்பதும் — புஜபலத்தினால் ஜீவிக்கிறவர்களும் சாஸ்திரங்களின் வலிமையினால், தம்மவர்களையாளுகிறவர்களுமாகிய வீரர்கள் புஜத்திலுண்டானார்களென்பதும் — தமக்கும் மற்றவர்களுக்கும் நிலங்களையுழுது உணவுண்டாக்கி இளையாதிருக்கும்படி வலிவைக் கொடுக்கிற உழவினர்கள் தொடையிலுண்டானவர்களென்பதும் — முடிவில் மேலவர்களுக்கு ஊழியஞ்செய்பவர்கள் முறிகள், கம்மியர்கள் முதலானகைப்பாடு செய்யுந் தொழிலாளிகள் பிரமாவின் பாதத்திலுண்டானவர்களென்பதும் — அறிகுறியளவேயன்றி, பகுத்தறியும்படியானது மற்றையென்னையிருக்கின்றது.

௩௧௩-வது-பிரிவு.

வியாபாரிகளும் - உழவினர்களுமாகிய வைசியர்கள் பிராமணர்களுக்கு உணவைக்கொடுத்தற்பொருட்டுபிரமாவின் றொடையிலுண்டானார்களென்று சொல்லப்படுகின்றது. அவர்கள்*பூவைசியர், கோவைசியர், தனவைசியர்களெனப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றுளொவ்வொன்றும் அனேக உட்பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது.

---

மண்டலபுருடன்செய்த சூடாமணிநிகண்டு-உ-வது-மக்கட்பெயர்த் தொகுதி.

* இளங்கோக்கள் மன்னர் பின்னரிப்பரொட்டியர் காராளர்
வளம்பெறுவாழ்வேளாளர் வைசியர்தம் பொதுப்பேராரும்
கிளந்தகோக்காத்தன்மற்றுங் கிளர்பொரு வீட்டலேனை
விளங்கவேயுழலான் மூன்று குலம்பெறும் வேறுசொல்வாம்.
வந்த கோவலருடன்கோ வர்த்தநரிப்பர் முப்பேர்
முந்துகோ வைசியரென்று மொழிந்திடு வணிகர் நாய்கர்
தந்தநாற் பதர்முப்பேர் தனவைசியர்க்கே சாற்று
முந்துபூ வைசியர் முப்பே ருழவர் மேழியர் வேளாளர்.



# MATTERS ON MIRASI RIGHT SELECTED FROM THE RECORDS OF GOVERNMENT.

Page 40.

59. The inhabitants first settled in the Danda-caranium, were not sufficiently thrifty and industrious to make any great progress in clearing the land, and gaining a scanty subsistence, they frequently removed to other parts of the country; which occasioned the Chola Rajah at that time, known by the name of Audonda Chakravarti, to adopt a new scheme of turning this tract to advantage. He collected the whole of that tribe of the Moodaly Caste, called Vellalers, who were the most intelligent and the wealthiest husbandmen of his dominions, and sent his son to settle them in it.

63. The Vellalers, being thus completely removed from their ancestral soil, it is received among them, as a certain proof of a man belonging to the Caste, that he either possesses or has possessed Mirasee, or Cauniatchy, as it is more properly called in the Carnatic; if neither one nor the other they renounce him. These people being the first settlers in the country, accounts for the superior privileges as cawny or semah, which I mentioned in my report of the 6th October, being allotted to them. They are, I understand, but



139960

thinly scattered in the southern countries, to which however, they still occasionally return.

126. The village (Mozawar) system is at least as old as the age of Menu. That venerable legislator alludes to the disputes about village boundaries, just as they occur at present, and directs a space of 400 cubits wide round small villages.

177. Note 3. The Parayar and Pallar are mostly the slaves of the Vellala, and the Palli the vassals of Brahmin Mirasidars.

176. Note 2. Generally speaking, Mirasi-right in land prevails wherever the Tamil Language is spoken, and all terms expressive of this right and its incidents belong to this language.

223. When Mirasi lands are rented to a stranger, the Grama Manyam, Cuppatam, and other Merais, and the Tunduvaram, are the right of the Mirasidar.

227. The holding Mirasi is always considered as more honorable by the people. The Mirasidar looks on himself as entitled to direct the officers of the village, to stand forward on all occasions, when the affairs of the Circar are in discussions and to receive any Tarifs (presents) given by it, and the pre-eminence thus claimed is allowed him by others.



துரைத்தனத்தார் ரிக்கார்டிலிருந்து எடுத்த காணி, யாட்சியைப்பற்றிய விஷயம்.

௪0-வது பக்கம்.

௫௧. தெண்டகாரணியத்தில், பிரதமத்தில் குடியேறினவர்கள், பூமியைத் திருத்துவதில், போதுமான உழைப்பாளிகளில்லாததினாலும், சொற்ப வரும்படியுள்ள ஜீவனஸ்த்தர்களாயிருந்தபடியாலும், அடிக்கடி அந்நிய தேசங்களுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில், ஆதொண்டச் சக்கரவர்த்தியென்னுஞ் சோழராஜன், இப்பூமியில் பலனுண்டாக்க வேறொருபாயஞ்செய்யும்படி நேர்ட்டு, தன்னுடைய விராஜியத்தில் மிகவும் விவேகிகளாகவும் ஐயிஸ்வரிய வந்தர்களாயுமுள்ள வேளாளர்களாகிய முதலிமார்களை ஒன்றாகக் கூட்டி அதில் குடியேறும்படி தன் குமாரனையனுப்பினார்.

௯௫. வேளாளர்கள் தங்கள் முன்னோர்களிருந்த பூமியிலிருந்து இவ்விதமாக முழுமையும் நீக்கப்பட்டவுடனே, ஜாதிமான்களாயுள்ளவர்கள் கர்னாடகத்தில் சொல்லப்பட்ட மிராசு அல்லது *காணிகாட்சியை உடையவனாகவாவது அல்லது உடைத்தாயிருந்தவனாகவாவது இருக்கவேண்டியதென்று அவர்களுக்குள்ளே ஏற்பட்டிருந்த இவ்விரண்டிலொன்றில்லாவிட்டால், அவனை நீக்கிவிடுகிறார்கள். இந்த மனிதர்கள் பிரதமத்திற் குடியேறினவர்களாதலால் அக்டோபர்மீ ௬உல் நான் தெரிவித்தது போலவே அவர்களுக்கு வகுக்கப்பட்ட காணி அல்லது சீமையின்பேரில் மேலான பாத்தியதையை உடையதாக

---

வேளாளர் காணியாளரென்பதற்குப் பிரமாணம் ஏரெழுபது.

* நிறைக்குரிய வந்தணர்க ளெறிபால் மறவிளங்கத்
தறைக்குரிய காராளர் தமது வாம்பினி தோங்க
மறைக்குரியு பூமனையும் வண்டுளபத் தாமனையும்
பிறைக்குரிய நெடுஞ்சடிலப்பெம்மானையும் பணிவாம்.

வாதிக்கிறார்கள். எனக்குத் தெரிந்தளவில் தென்னாட்டில் கொஞ்சம் பரவியிருக்கிறார்கள், அவர்கள் ஏகதேசமாக இன்னமும் திரும்பி வருகிறார்கள்.

கஉசு. கிராமம் அல்லது மோஜர்வா-யேற்பாடானது மநுகாலந்தொடங்கி யவ்வளவு பழமையானதாயிருக்கின்றது. அந்தமேலான சட்ட நிர்மாணிகர் இக்காலத்துண்டாவது போலவே கிராமயெல்லை வழக்கைக்குறித்து கிராமத்தைச் சுற்றிலும்-சா-முழக்கோல் விஸ்தீரண மிருக்கவேணுமென்று குறிப்பித்திருக்கிறார்.

களஎ. குறிப்பு. ௩. பறையரும்-பள்ளருமே வேளாளர்களுக்குப் பெரும்பான்மையும்† முறிகளாம். பள்ளிகள் பிராமண மிராசுதாரர்களுக்கு ஊழியர்களா யிருக்கிறார்கள்.

[பெரும்பான்மையு மென்றதனால், சிறுபான்மை பள்ளிகளும் வேளாளருக்குப் பண்ணையாளா யிருக்கிறார்களெனப் பொருள்படுகின்றது. இது இன்றுவரையிலுந் தென்னாட்டில் அவர்கள் பண்ணையாளாயிருக்கிற வழக்கம் நடந்துவருகின்றது.]*

களசு: குறிப்பு. ௨. சாதாரணமாய் பேசுமிடத்து, நிலத்தின் மிராசு பாத்தியதையும், இதை விளக்கிவைக்குஞ் சகல வித பிரயோகச் சொற்களும், பாஷைக்குரியவிடையில் வந்த வழக்கச் சொற்களும், தமிழ் வழங்குமிடத்தில் பரவியிருக்கின்றது.

† முறிகள்-என்பது அடிமைகளாம்.

* Mirasi Right. Page 103. The agricultural slave castes are the Pallis, the Pallar and the Parayar.
மிராசு ரயிட்டு. ௧௦௩-வது பக்கம். உழவிற்கு அடிமைச்சாதிகள் பள்ளி-பள்ளர்-பறையர்களாம்.
இதைப்பத்திப் பூர்வத்தில் அனேகசாதனங்கள் பிறந்திருக்கின்றன. அவைகளிலொன்று இவ்வனுபர்தமுடிவில் வெளியிட்டிருக்கின்றது.



உஉங. மிராசு நிலத்தை அன்னியருக்கு வாரத்திற்கு விட்டால், கிராமமானியம், குப்பத்தம்; மைத்தமேரை, துண்டுவாரம், இவைகளெல்லாம், மிராசுதாரனுடைய பாத்தியதையாயிருக்கின்றது..

உஉஎ ஜனங்கள் மிராசு வைத்திருக்கிறவர்களை கனவான்களாக மதிக்கிறார்கள். மிராசுதாரர்கள் கிராமக் காரியக்காரர்களை அதிகாரஞ்செய்யவும் சர்க்கார் காரியங்களைப்பற்றிய விசாரணையில் சகல காரியங்களிலும் முன்னிற்கவும், அதில் வரும்படியான வெகுமானங்களைப் பெற்றுக்கொள்ளவும், பாத்தியதை யுடையவர்களாக யிருக்கிறார்கள். இப்படி முன்னவனாக யிருக்கும் இந்த பாத்தியதை ஏனையவர்களால் அவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றது.

## Rottler's Tamil and English Dictionary.

ராட்லர் என்பவராற் செய்யப்பட்ட தமிழிற்கு இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு அகராதி.

வைசியர் three divisions of that class இது * மூன்று வகுப்பினவாம்.

1. தனவைசியர் traders.
2. பூவைசியர் agriculturists.
3. கோவைசியர் Owners of herds or flocks.

*வைசியரை-தனவைசியர்-பூவைசியர்-கோவைசியரெனப்பிரித்தது ஸ்மிருதிப் பிரமாணமன்று. ஏனெனில், மநு. ௯ய-வது சுலோகத்தில்-எந்தக் குலத்தார் தொண்டு தொட்டு-பசுக்காத்தல்-ஈதல்-வேதமோதல்-வாணிபஞ்செய்தல் - பயிர்செய்தல்-வட்டிவாங்குதல் ஆகிய அறு தொழிலைச் செய்கிறார்களோ அவர்களே வைசியரெனக்கூறியிருக்க, மேற்கூறியவற்றுள் யாவரோனும், ஏகதேசத்தில்-ஒவ்வொரு தொழிலை நடத்துவதால் எங்ஙனம் வைசியரெனக் கொள்ளக் கூடும். இதனைக் கிரமமாக விசாரிக்கவேண்டும்.

These are also called.

1. வணிகர். merchants.
2. உழவர் farmers.
3. இடையர் graziers.

வைசியர் தொழில் ௩; the employments considered to belong to each sub-division, are—

1. பொருளீட்டல் gathering riches.
2. பயிர்செய்தல் cultivating the ground.
3. ஆன்காத்தல் keeping cows.

பூவைசியர், the same as உழவர், ploughmen; 2, the same as வேளாளர், or காராளர் farmers, வேளாண்மை; 1, the same as ஈகை, a giving habitually; 2, the same as உபகாரம் benefit, favour; 3, the same as மெய், the truth.

வேளாண்மை மாந்தரியல்பு. ௰. The ten virtues or good manners predicated of the வேளாளர்

(௧) ஆணை வழிநிற்றல்.
(௨) அழிந்தோரை நிறுத்தல்.
(௩) கைக்கடனாற்றல்.
(௪) கசிவகத்துண்மை.
(௫) ஒக்கல் போற்றல்.
(௬) ஓவாமுயற்சி.
(௭) மன்னிறை தருதல்.
(௮) ஒற்றுமை கோடல்.
(௯) விருந்தோம்பல்.
(௰) திருந்தியவொழுக்கம்



வைசியக்கிரியை-வேளாண்மை, வியாபாரம்.
வைசியர்-இடையர், ஏருழவர், செட்டிகள்.
வேளாண்மை-பூவைசியம்,
வேளாண் மாந்தர்-வேளாளர்.
வேளாளர்-ஈகையாளர், பூவைசியர்.
மண்மகள் புதல்வன்,
பூபாலர்.
பூபாலன்.
பூவைசியர்.
மேழியர்.
மருதநிலமாக்கள்
வளமையர்

# வேளாளருக்குப் பண்ணையாள் எழுதிக்கொடுத்த அடிமைசாதனம்.

---

௲அ௱உ-ம் ௵த்தில் அச்சிட்டிருக்கிற மிராசு ரயிட்டு.
சஅ-வது பக்கம்.

சுவஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலேஸ்வர-ராஜாதி ராஜ ராஜ பரமேஸ்வர-ராஜகுலதிலத ராஜமார்த்தாண்ட - பாஷைக்குத் தப்புவராயகண்ட - கண்டநாடுகொண்டு கொண்டநாடு கொட்டாதோன், எம்மண்டல முந்திறைகொண்டு ஈழமுந்திறைகொண்டு தலைகொண்டகண்டன், துலுக்கதளவிபாடன், துலுக்கமோகந் தவிர்த்தோன், மனுசூரமகாசூர மகாமண்டலாதிபதி, அஸ்வபதி-நரபதி கெஜபதிகெடிமன்னன் சூரத்தானன், ராயசூரத்தானன், ராஜாதிராஜன், ராஜகெம்பீரன் ராஜநாராயணன், சௌவாசிசூரன், தினவர்த்தோழன், சத்துருக்கள்கண்ட நவகோடி நாராயணன், பூலோக புரந்தரன், அசுவகுண நகுலன், விருதுநரபாலன், கோதண்டராமன், கலியுக கர்நன், தெக்ஷணசுலுத்தானன், இந்து ராயர் சுலுத்தானன் அஷ்டாங்கமனோபயங்கரன், மத்தகாசினி மானாபரணன், இரணரங்காவேசியர் புயங்கன், உபயகுலதிலத கடகத்தளவிபாடன், ராயர்க்குத்தக்ககண்டன், நாகலோக நரபாலன், பூலோக புரந்தரன், உத்தர தெக்ஷண பூர்வ பச்சிம சத்தசமுத்திராதிபதி, கெஜவேட்டை கண்டருளிய ஸ்ரீ வீரப்பிரதாபன், சோழமண்டல ஸ்தாபனாச்சாரியன், தொண்டமண்டலஸ்தாபனாச்சாரியன், பாண்டிமண்டல ஸ்தாபனாச்சாரியன், ஈழமண்டலமுங் கொண்டருளிய ராஜாதி ராஜராஜபரமேஸ்வரன், ஸ்ரீ வீரப்பிரதாப ஸ்ரீ வீரவேங்கடபதி ராயர் ஐயர் தேவமகாராயர், பிரிதிவிராச்சியம் பண்ணியருளாநின்ற சகாப்த ௵-௲ருகஉ-க்கு மேற்செல்லாநின்ற விளம்பி ௵ அற்பிசி௴ ருவ- செயங்கொண்டசோழமண்டலத்துக் குலோத்துங்கச்சோழ வளநாட்டுப் புழல் கோட்டத்து எழும்பூர் நாட்டில் தண்டையார்பேட்டையிலிருக்குங் கொட்டி பெரியான் மகன் பெரியதிம்மன் சின்னதிம்மன் உள்ளிட்டாரும், அடிமைவிலைப்பிரமாணம் பண்ணிக் கொடுத்தபடி ; எங்களுடன் பிறந்த பெண் வெள்ளச்சியையும், அவள்மகள் பெரியாளையும், ஷை மகள் சோலைச்சியையும், ஆக இந்த-௩-பேரையும், கொத்தடிமையாகக் கொள்வா ருளரோ வென்று முற்கூற இம்மொழி கேட்டு யிதற்கு எதிர்மொழிகொடுத்தோன், இம்மண்டலத்து இக்கோட்டத்து இந்நாட்டில் வல்லூரிலிருக்கும் வேளாளரில், வாண்டராய உலகநாதமுதலியார் மகனை ஒற்றியப்பமுதலியார் விலை கூறித்தரில், நானே கொள்வேனென்று பிற்கூற, முற்கூறிய பெரிய திம்மன் சின்னதிம்மன் உள்ளிட்டாரும் பிற்கூறிய ஒற்றியப்பமுதலியாரும் எம்மிலிசைந்து, தம்மில்பொருந்தி, திருமயிலாப்பூர் மண்ணூளர் மனைகொள்வர் முன்பாக இந்தபறைச்சி வெள்ளச்சியையும், அவள் மகள் பெரியாளையும், மேற்படி மகள் சோலைச்சியையும், இந்த-௩-பேரையுங் கொத்தடிமையாக விலையாக நிச்சயித்த கெட்டிவராகன்-உ - இந்தவராகனிர
வெள்ளச்சியையும், இவள் மகள் பெரி
ண்டிற்கும், இந்த
ள் சோலைச்சியையும், இந்த மூன்று
யாளையும், இவள் ம
விலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்
பேரையும், விற்று
ு, முக்காலாவது, இதுவே விலை
தோம். இருக்காலர்வ
று, விலைப்பிரமாணமதாகவும்,
ப்பிரமாணம தாகவும் விற
ப்பொருள் மாவறுதிப்பொருள்
இதுவல்லது, வேறு விலை
சொல்லப் பெறுவதல்லாதாகவும்
சில ஓலைக்காட்டென்று
இவள் மகள் பெரியாளுக்கும்,
இந்த வெள்ளைச்சிக்கும்,
க்கும், யாதொரு கலனுமில்லை.
இவள் மகள் சோலைச்சி

கலனுளதாய்த் தோற்றப்படில், நாங்களே முன்னின்று கலன் தீர்த்துக் கொடுக்கக்கடவோமாகவும். இப்படிக்குச் சம்மதித்து, இந்த வெள்ளச்சியையும், இவள் மகள் பெரியாளையும், இவள் மகள் சோலைச்சியையும் இந்த மூன்று பேரையும், ஒற்றியப்பமுதலியாருக்கு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தோம் பெரிய திம்மன் சின்ன திம்மன் உள்ளிட்டாரும். இவை, பெரியதிம்மன் சின்ன திம்மன் உள்ளிட்டார் கைநாட்டு.



S. No. 1377.

MUNICIPAL COMMISSIONER'S OFFICE,

MADRAS, 18*th August* 1871.

From

SANITARY OFFICER,

*Municipal Commission, Madras.*

To

S. CAUSI VISVANATHA MUDALY,

With reference to your Petition presented to the President, on Wednesday, I am directed to inform you, that there will be no classification of Castes, such as you object to, that every man's caste will be entered precisely as he gives it, except that no man will be permitted to return himself as Kshatrya, Vaisya, or Sudra, but only according to his actual caste.

The President is not disposed to deny your claim to be Vaisyas, but directs me to say, that the question will not arise as there will be no classification, all castes being entered alphabetically, the President will feel obliged, if you will impress on the members of the Vellālar caste, the importance of answering all the question of the Census, accurately and willingly.

(Signed) CHARLES E. GOVER,

*Sanitary Officer.*

ஸ். செம்பர்: கூஉஎஎ.

மதிராஸ் முயுனிசபல் கம்மீஷன் சானிட்டேரி ஆபீசரவர்கள்.

ஸ். காசி விஸ்வநாத முதலியார் அவர்களுக்கு.

நீர் புதன்கிழமை பிரசைடெண்டுக்குக் கொடுத்த விண்ணப்பத்தைப் பற்றி உமக்குத் தெரிவிக்கும்படி உத்திரவான தென்னவெனில், நீங்கள் ஆட்சேபித்தபடி சாதிகளைக்குறித்து யாதொருவகுப்பு ஏற்பாடு செய்யப் படுவதில்லையென்றும், ஒவ்வொரு மனிதனும் அவன்சொல்லுகிறபடி அவன்சாதியை எழுதிக்கொள்ளப் படுமென்றும், ஒருவனுங்க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் என்று தன்னை எழுதிக்கொள்ளும்படி சொல்வதை ஒப்புக்கொள்ளப்படுவதில்லையென்றுமேயாம். பிரசைடெண்டானவர் நீங்கள் வைசியர்களென்கிற உங்கள் பாத்தியதையை இல்லையென்றுசொல்ல அபிப்பிராயங் கொண்டிருக்கவில்லை: ஆனால் வகுப்பேற்பாடில்லாத்தினாலும், எல்லா ஜாதிகளும் அகராதிவரிசையில் பதிப்பிக்கப்படுவதாயிருப்பதாலும், இந்தச் சங்கை உண்டாவதற்கு ஏதுவில்லை யென்று தெரிவிக்கும்படி உத்திரவாயிருக்கின்றது. ஸென்ஸெஸ் உத்தியோகஸ்தர் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மனப்பூர்வமாகவுஞ் சரியாகவும் விடைகொடுத்து வரும்படி நீர்வேளாளமரபினருடைய மனதில் பதிக்கச் செய்வீராகில் பிரசைடெண்டானவர் உமக்கு வந்தனமுடையவராயிருப்பார்.

| | |
|---|---|
| சென்னப்பட்டணம்,<br>மியூனிசபல் கம்மிஷனர்<br>ஆப்பீசு, கூஅஎக ௵<br>ஆகஷ்டுமீ கஅஉ. | சார்ல்ஸ், இ. கோவர்,<br>சானிட்டேரி ஆபீசர். |



உ

# உபந்நியாசம்.

## பீடிகை.

எல்லாமுடைய கடவுளாற் படைக்கப்பட்ட விவ்வுலகத்து ளறிவாற் சிறந்த மானிடர்க்கு இம்மை மறுமை யுதவத்தக்க தலைமைத்தொழி லுபகாரம். அது, அவரவர்களறிவு, பொருண்முதலிய வுடைமைத்தரத்திற்கேற்றபடி, யுலகோபகாரந், தேசோபகாரம், பரோபகாரம், சுவஜனோபகாரம் முதலிய பலபடித்தா யிருக்கின்றது இனி அந்த உலகோபகார முதலியவற்றை விசாரிப்பதற்கு முன், ஒருவன் றன்னையுந் தன்னொழுக்கத்தையும், பயனையும் விசாரித்து விருத்திசெய்துக் கொள்ளவேண்டும். அதற்கு முதலிற்றன் முன்னோரொழுக்கத்தை விசாரிக்க வேண்டுவதாக விருக்கின்றது. அம் முன்னோரொழுக்க மென்பது, வருணாச்சிரம வொழுக்கமெனவுங், குடிநிலை யொழுக்கமெனவுஞ், சமயநிலை யொழுக்கமெனவும், மூவகைப்பட்டு, முறையே, யொன்றற்கொன்று சிறப்புடைத்தாய், அறவியற் பாகுபாடு, பொருளியற் பாகுபாடு, இன்பவியற் பாகுபாடென்னு மும்மூவகைப் பாகுபாட்டோடுங்கூடியுள்ளது. அவற்றுள், மூவகைப்பாகுபாட்டோடுங் கூடிய வருணாச்சிரம வொழுக்கத்தினை, மநு, பராசரம், யாஞ்ஞவற்கியம் முதலாகிய மிருதிகளில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன வாயினும், அறவியற் பாகுபாட்டுவருணாச் சிரம வொழுக்கமிது, பொருளியற் பாகுபாட்டு வருணாச் சிரம வொழுக்கமிது, இன்பவியற் பாகுபா

ட்டு வருணச் சிரம வொழுக்கமிது, என்று பகுத்தறிந்து கொள்வதற்குச் சார்பில்லாமை, ஒருமைப்பாடில்லாமை, தேற விசாரியாமை, அந்நியப் பழக்கமுடைமை முதலிய பலகாரணங்களால், கல்வி யூக்கங்குறைந்து இந்தவிசாரிப்பினு லென்னபயனென்று சிரத்தைக் குறைவும் நாத்திகமும் மேன்மேலுண்டாய், சோம்பலதிகரித்து வறுமைக்கிடனாய், வரவர நம்மவர்க்குளந்த முன்னோரொழுக்கங் குறைந்துவரும்படி நேரிடும்போலு மிருக்கின்றது.

அவ்வாறு நேருங்காலமாயிருத்தலினு லன்றோ சென்னை மினியூசபில் கம்மிஷனர்கள் ஏற்படுத்திய சனத்தொகைப் பட்டியில், அறியாதவர் சிலர் தப்புரைகளாற் சூத்திரரொன்று எழுதும்படியாகவும், அதற்கு, நம்மிற் சிலர், கூஅளக௵ ஆகஸ்டுமீ கசூஉ யில் ஒரு விஞ்ஞாபனம் எழுதும்படியாகவும் நேரிட்டன. அங்ஙனம் எழுதிய விஞ்ஞாபனமோ, தற்காலம் இராஜாங்கத்தாருக்குச் சிறிது விவகார வுண்மைகளை யெடுத்துக்காட்டியதாயிருந்தாலும், அது, இன்னும் நம்மவர்கள் பலர்க்குளும் வியாபித்து நம்முன்னோரொழுக்கத்தினை முழுவதுங் கடைப்பிடிக்கச் செய்யும் ஆற்றல்சாலாததாகவே யிருக்கின்றது.

ஏனெனில்? அவ்விஞ்ஞாபனங் காலம்போதாமையால், அதிகவினாவுபற்றி, வெகுசாமானியமாகச், சுவயாபிமானமுள்ள சிலரால், மிதவிசாரிப்போடு அந்நியபாஷையில் எழுதப்பட்டுள்ள தாமாதலின், அனேக விடயங்களதனுள், நூன்மரபினுக்கும், வழக்கமரபினுக்கும் முரணும் அமையாதனவாயும் உள்ளன. ஆதலின், அவைமுழுவதும் நம்மவர் விசாரத்திற்கு வரவெண்ணி அவ்விஞ்ஞாபனத்தை மொழிபெயர்த்து அதனோடு இந்தவுபந்நியாசமும் வெளிப்படுத்த நேரிட்டது. அதுநிற்க,



## வருணச்சிரமவேற்பாடு.

இனி அந்த வருணச்சிரமத்துள், வருணமென்பது படைப்புக்காலத்தில், படைப்புப் பொருளின் குணம், கருமம், பிரயோசனங்களை யுணரு மறிகருவிபாகக் கடவுளாணையால் ஆக்கப்பட்டுள்ளது. ஆயின், அதுபொதுவாயினும், அக்குணங் கருமம் பயன் என்பன எளிதில் வெளிப்படத்தக்க இடம் மானுடரே யாதலின், பெரும்பான்மையும் மக்களுட்டானே அது வழக்கத்தடிப்பாடாகவுள்ளது என்பதனை, இருக்குவேதம் புருஷசூக்தம்.

శ్లో॥ బ్రాహ్మణోऽస్యముఖమాసీత్ బాహూరాజన్యఃకృతః
ఊరూతదస్యయద్వైశ్యః పద్భ్యాంశూద్రోఅజాయత॥

பிராமணோஸ்ய முகமாஸீத்-பாஹூ-ராஜந்ய: கிருத:
ஊரூததஸ்ய யத்வைஸ்ய:-பத்பியாம்ஸூத்ரோ அஜாயத.

என்றதனும், மநு, முதல் அத்தியாயம், அஎ-வது, சுலோகம்.

శ్లో॥ సర్వస్యాస్యతుసర్గస్య గుప్త్యర్థంసమహాద్యుతిః
ముఖబాహూరుపజ్జానాం పృథక్కర్మాణ్యకల్పయత్॥

ஸர்வஸ்யாஸ்ய துஸர்கஸ்ய
குப்த்தியர்த்தம்ஸமஹாத்தியுதி:
முகபாஹூ-ருபஜ்ஜாநாம்.
பிரதக்கர்மாண்யகலபயது.

என்றதனும் அறியலாம்.

அப்படைப்புப் பொருளனைத்திற்கும் வருணம் பொதுவென்பதனை அடியிற்கண்ட செய்யுட்களாற் காணலாம்.

தேவர்களிற் சதுர்வருணம்.

| | |
|---|---|
| பரமசிவம் | பிராமணசாதி. |
| விஷ்ணு | க்ஷத்திரியசாதி. |

பிர்மா — வைசியசாதி.
இந்திரன் — சூத்திரசாதி.

॥ బ్రాహ్మణో భగవాన్రుద్రో క్షత్రియోపరమోహరిః
వైశ్యఃపితామహంచైవా ఇంద్రశ్శూద్రఅజాయతే॥

பிராமணோ பகவான்ருத்ரோ
க்ஷத்திரியோ பரமோஹரீ :
வைஶ்யப் பிதாமகஞ்சைவ,
இந்தரஸு:த்ர அஜாயதே.

கிரகங்களிற் சதுர்வருணம்.

சுக்கிரன், குரு — பிராமணசாதி.
சூரியன், செவ்வாய் — க்ஷத்திரியசாதி.
புதன், சந்திரன் — வைசியசாதி.
சனி, இராகு, கேது — சூத்திரசாதி.

சிநேந்திரமாலை. (பாடபேதம்.)

ஆதித்தன்செவ்வா யரசக்கோளாகுமாஞ்
சோதித்தபுந்திவெள்ளி சூத்திரனும், வேதும்,
மறைக்குலக்கோள் மந்திரியுஞ் சந்திரனு மற்றைப்
பறைக்குலக்கோள் காரியொடு பாம்பு.

இராசிகளிற் சதுர்வருணம்.

சர்க்கடகம், விருச்சிகம், மீனம் — பிராமணசாதி.
சிங்கம், தனுசு, மேஷம் — க்ஷத்திரியசாதி.
துலாம், கும்பம், கடகம் — வைஷ்யசாதி.
கன்னி, இடபம், மகரம் — சூத்திரசாதி.

இதுவும்பாடபேதம்.

வேந்தனரியாடாகும் வெஞ்சிலைமீன் வேதியனும்
வாய்ந்ததேள் கண்டுவணிகனும் - ஆய்ந்த
துலையாழ்குடமூன்றுஞ் சூத்திரனந் திவ்விய
கலையோது பெண்ணரசே காண்.



மிருகங்களிற் சதுர்வருணம்.

யானை, குதிரை — பிராமணசாதி.
சிங்கம் — க்ஷத்திரியசாதி.
பசு — வைசியசாதி.
எருமை — சூத்திரசாதி.

பரிகரியும் வேதியனும் பார்மனரியாம்
பெரியபசுவணிகன் பேதாய், உரியதொரு
மேதியதுசூத்திரனு மேதினியிலெப்போதும்
ஓதியுணர்ந்தோ ருரைத்தாருற்று.

பக்ஷிகளிற் சதுர்வருணம்.

அன்னம், காகம் — பிராமணசாதி.
சரபம், இராஜாளி — க்ஷத்திரியசாதி.
மயில் — வைசியசாதி.
ஆந்தை — சூத்திரசாதி.

அன்னங்கொடிமறையோன் அஞ்சரபம்ராஜ்ளி
மன்னர்மயில்வணிகன் மானிலத்தில், சொன்ன
சூத்திரன்றானந்தை சோர்வில் பக்ஷிசாதிவகை
மாத்திரமாய்க் கொள்வீர்மதித்து

விருக்ஷங்களிற் சதுர்வருணம்.

மா, வில்வம் — பிராமணசாதி.
அரசு, பூவரசு — க்ஷத்திரியசாதி.
பலா — வைசியசாதி.
எட்டி — சூத்திரசாதி.

மாவில்வமாமறையோன் மன்பூவரசரசாம்
பூவசியன்றான் பலவாப்போற்றுமே, நாவிசைந்து
எட்டியதுசூத்திரன் விருக்கசாதிவகை
ஒட்டியதுதானுரைத்தா ரோர்ந்து.

இரத்தினங்களிற் சதுர்வருணம்.

திருவிளையாடல், மாணிக்கம் விற்றபடலம்.

| | |
|---|---|
| வயிரம், முத்து | பிராம்மணசாதி. |
| மாணிக்கம் | க்ஷத்திரியசாதி. |
| புஷ்பராகம், வைடூரியம், கோமேதகம் | வைஶ்யசாதி. |
| நீலம், மரகதம் | சூத்திரசாதி. |

முன்னவரொன்பகற்றோர் வச்சிரமுங்கீர்முத்த
மன்னவரொன்பதுப்பு மாணிக்கம் வணிகரொன்ப
மின்னவிர்புருடராகம் வயிடூயம் வெயிற்கோமேதம்
பின்னவரொன்பநீல மரகதம் பெற்றசாதி.

இனி யிவ்வருணம் என்பது தொழில் பற்றி வந்ததோ பிறப்புப்பற்றி வந்ததோ வென்பார்க்கு,

செந்நெலாலாய செழுமுளை மீட்டுமச்
செந்நெலேயாகி வளர்தலா, லந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவயலூர
மகனறிவு தந்தையறிவு.

என்னு நாலடியும், "பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" என்ற குறளும், பிறவுநோக்கிப் பிறப்புப் பற்றியே யென்று கொள்வாம். ஆயின், விஸ்வாமித்திரனு ரும், கண்ணுவனும், அரசராகப் பிறந்தும் கருமத்தால் வேதியராயின ரென்று பாரதம் விஷ்ணு புராணங் கூறிய வே "జన్మనా జాయతే శూద్రః కర్మణా జాయతే ద్విజః (ஜென்மனா ஜாயதே சூத்ர: கர்மணு ஜாயதேத் துவஜ:) என்பது பிறப்பாற் சூத்திரனும், கருமத்தாலிருபிறப்பாளனுமாவர், என்றது என்னையோவெனில்? நன்று கூறினுய் இங்கு எடுத்துக்காட்டிய விருபெரு முனிவர்க்கும், பொதுவிதியாகிய விருபிறப்பர்க்கும் பிறப்பால் அரசர் எனவும் சூத்திரர் எனவும் அந்த நாற்பெருங் குலமாகிய வருணத்



தினையே கூறிப்பின் கருமத்தால் வேறுவருணம் வந்ததென்றே கூறியவாறன்றி, வருணமென்பதில்லாமலே பிறந்த பின்னர் அடுத்த கருமத்தால் வருணம் வந்ததென்று நின்னுலுங் கூறப்பட்டதில்லை. அல்லதூஉம், பிறவியே கருமசேட்த்தால் வந்ததென்பது வேதாகமங்கள் விதித்தவாறு. ஆதலால், தொழிலாற் சாதியெனவே முன்வினையாற் சாதியெனவும் உடன்படுதல் அமையும். ஆகவே, பிறப்பின் சம்பந்தமே சாதியென்பது தேற்றம்.

அல்லதூஉம், அவ்விஸ்வாமித்திராதியர் ஓரேபிறப்பின் கண்ணே வேதியராயினர் என்பதும் அமையாது. என்னை? அவர் வேள்விப்பிரசாதத்தால் பிறப்பினையடைந்த வியற்கைச் சுத்தர். அந்தப் பிரசாதமோ? அந்தணச் சேயேயாகவென்று சங்கற்பித்த பிண்டமொன்றும், அரசச்சேயே யாகவென்று சங்கற்பித்த பிண்டமொன்றுந், தம்முண்மாறி, அரசமாதும் அந்தணமாது முண்ட காரணத்தாற் பிறந்தவராதலின், அவர் அச்சங்கற்பவித்தின் முளையாக விடவேற்றுமையானமைந்த வினைவளையி னரசப்பிறப்பினராக நின்று, அஃதொழிதலும், கான்ற சோறென அவ்வரச போகமுற்றும் வெறுத்துச் சென்று கானம் புக்கு முற்பிறப்பின்றொடர் புணர்ச்சி மறந்த வுலகியர்போல, அச் செல்வவாதனையையும் அப்பிறப்பிற்றுனே மறந்தொழிந்து, தவத்தால் நிலையற்ற பொய்யுடம்பினையே நிலைபெற்ற மெய்யுடம்பாக்கிக்கொண்டு, இன்றுமுள்ள சித்தராதலின், தவத்தால் மறுபிறப்புற்றவராயினர். வேதியத்தன்மையும் அத்தவம்புரிந்து சித்பெற்றவுடம்பின் கண்ணதேயாகலான், அவரும் பிறப்பினுனே சாதிபெற்றவராயின ரென்பதே தேற்றம். இக்தை யவரவர் உபாக்கியானங்களுட் காண்க.

சந்நியாசஞ் செய்தலானே மறுபிறப்புற்ற தென்னும் சுருதி மிருதி புராணங்களே சான்று. ஆகவே, அதனினு மேம்பட்ட தவமும் சித்தியுமடைந்தவர்க்குக் கூறுவதெ ன்னுளது. பிரமாணங்கள் வருமாறு. சங்கரவிஜயம்- ௩௨-வது பக்கம் "இச்சிறுவனுக்கு எட்டாமாண்டு முடிவுபெறுங்காலம் வந்தது. விரைவில் இவர் சந்நியாசம் பெற்றுப் பிறப்பினை மாற்றிக்கொள்ளில் ஆயுள் கூடிவரும் என்றனர்." என்பது, காண்க.புழு, குளவி முதலிய வண்டாதலு மதுவென்க. இவ்வுண்மை யுணராதார் தமக்கு வேண்டியவாறு அசதியாடுப.

இனி அந்த நால்வகைப்படும் வருணத்திற்குரிய அத்தொழிலைப் பிரித்துக்கூற வந்தவிடத்து. மநு.

(க) அந்தணருக்குத் தருமம்.

| வைதீக விருத்தி. | இலௌகீக விருத்தி. |
|---|---|
| க. வேதமோதல். | க. வேதமோதுவித்தல் |
| உ. வேள்வி செய்தல். | உ. வேள்வி செய்வித்தல் |
| ௩. ஈதல். | ௩. ஏற்றல். |

శ్లో॥ అధ్యాపనంచాధ్యయనం యజనంయాజనంతథా
దానంప్రతిగ్రహంచైవ బ్రాహ్మణానామకల్పయేత్॥

அத்யாபனஞ் சாத்யயநம்-யஜநம்யாஜநந்ததா
தாநம்பிரதிக்கிரஹஞ்சைவ-பிராஹ்மணாநாமகல்பயேது.

(உ) க்ஷத்திரியருக்குத் தருமம்.

| | |
|---|---|
| க. வேதமோதல். | க. பிரஜைகளைக் காத்தல். |
| உ. ஈதல். | உ. மனமடக்கல். |

శ్లో॥ ప్రజానాంరక్షణందాన మిజ్యాధ్యయనమేవచ
విషయేష్వప్రసక్తిశ్చ క్షత్రియస్యసమాసతః॥

பிரஜாநாம் ரக்ஷணந்தாந-மிஜ்யாத்யயநமேவச.
விஷயேஷ்வ பிரஸக்திஸ்ச-க்ஷத்திரியஸ்யஸமாஸத:



(௩.) வைசியருக்குத் தருமம்.

| | |
|---|---|
| க. வேதமோதல். | க. பசுக்காத்தல். |
| உ. ஈதல். | உ. வியாபாரஞ் செய்தல். |
| | ௩. வட்டி யீட்டல். |
| | ச. பயிர்செய்தல். |

॥ పశూనాంరక్షణందాన మిజ్యాధ్యయనమేవచ
వణిక్పథంకుసీదంచ వైశ్యస్యకృషిమేవచ॥

பஸூநாம்ரக்ஷணந்தாந-மிஜ்யாத்ய யநமேவச
வணிக்பதங் குஸீதஞ்ச-வைஸ்யஸ்ய கிருஷிமேவச.

(ச.) சூத்திரருக்குத் தருமம்

சூத்திரனுக்கு, இந்த மூன்று வருணத்தார்க்கும் ாறுமை யின்றிப் பணிசெய்வ தொன்றையே முக்கிய ான தருமமாக விதித்திருக்கின்றது.

॥ ఏకమేవతుశూద్రస్య ప్రభుకర్మసమాదిశత్
ఏతేషామేవవర్ణానాం శుశ్రూషామనసూయయా॥

ஏகமேவது ஸூத்ரஸ்ய-பிரபுகர்மஸமாதிஸத்
ஏதேஷா மேவவர்ணாநாம்-ஸுஸ்ரூஷாமநஸூயயா.

பிரகற்பதிஸ்மிருதியில் அந்தணருக்குக் கூறியது பாலவே, க்ஷத்திரிய வைசியர்களுக்கும் வைதீக விருத்தி ல் வேள்வியையுங் கூடக் கூறப்பட்டிருக்கின்றது, ருமாறு.

॥ ఇజ్యాధ్యయనదానేచ ప్రజానాంపరిపాలనం
శస్త్రాస్త్రధారణంసేవా కర్మాణిక్షత్రియస్యతు॥

இஜ்யாத்யயநந்தானேச-பிரஜாநாம் பரிபாலனம்
ஸஸ்தராஸ்தர தாரணம் ஸேவா-கர்மாணி க்ஷத்ரியஸ்யது

శ్లో॥ స్వాధ్యాయోయజనందానం పశూనాంపాలనంతథా
కుసీదకృషివాణిజ్యం వైశ్యకర్మాణిసప్తవై॥

ஸ்வாத்யாயோ யஜநந்தானம்-பஸூ நாம்பால நந்ததா
குஸீதக்கிருஷிவாணிஜ்யம்-வைஸ்யகர்மாணி ஸப்தவை.

என்றதன் உபலக்ஷண்விதியால் விசாரிக்குமிடத்தில், அந்தணருக்கு முக்கிய தருமம், யாகஞ்செய்தலெனவும்; அரசருக்கு முக்கிய தருமம், உலகோம்பலெனவும்; வைசியருக்கு முக்கியதருமம், கொடுத்தலெனவுங்; கொள்ளப்படும். ஏன் மற்றத் தொழிலைக் கூருது, யாகம், உலகங்காத்தல், கொடையென்பதைக் கொண்டதெனில்? இம்மை மறுமைக்கு இன்றியமையாததிதுவே யாமாதலால், நாயனுரும்.

மறப்பினுமோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்.........*

(எனப்பிராமணனுக்கும்)

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவாக்கால்... ... ...*
முறைசெய்து காப்பாற்று மன்னவன்மக்கட்
கிறையென்று வைக்கப்படும் ... ... ...*

(எனக்ஷத்திரியனுக்கும்)

உழுவாருலகத்தார்க் காணியம்தாற்று
தெழுவாரையெல்லாம் பொறுத்து.

(என வைசியனுக்கும்)

கூறுதலன்றிச் சிராத்தாதிகளில் அக்கினி காரியஞ்
செய்ய அமையாவிடத்து,

மநு. ந-வது அத்தியாயம்-உகஉ-வது சுலோகம்,

శ్లో॥ అగ్న్యభావేతువిప్రస్య పాణావేవోపపాదయేత్
యోహ్యగ్నిస్సద్విజోవిప్రై ర్మంత్రదర్శిభిరుచ్యతే॥



அக்ன்யபா வேதுவிப்ரஸ்யபாணி
வேவோபபாதயேது
யோஹ்யாக்னிஸ் ஸத்விஜோவிப்ரைர்
மந்தரதர் ஸிபிருச்யதே.

என அந்தணர்கையிலேயே செய்கவென்றும்;

அரசதோற்றத்திற்குக் காரணம் உலகபாலனமென்றே யரசன் சிறப்பில்,

மநு-எ-வது அத்தியாயம்-உ-வது சுலோகம்.

శ్లో॥ బ్రాహ్మ్యంప్రాప్తేనసంస్కారం క్షత్రియేణయథావిధి
సర్వస్యాస్యయథాన్యాయం కర్తవ్యంపరిరక్షణం॥

பிராஹ்மியம் பிராபேந ஸம்ஸ்காரம்
க்ஷத்ரியேணயதாவிதி.
ஸர்வஸ்யாஸ்ய-யதாந்யாயங்
கர்த்தவ்யம் பரரக்ஷணம்.

శ్లో॥ అరాజకేహిలోకేస్మిన్ సర్వతోవిద్రుతేభయాత్
రక్షార్థమస్యసర్వస్య రాజానమసృజత్ప్రభుః

அராஜேகெஹிலோ கேஸ்மின்
ஸர்வதோ வித்ருதேபயாது.
ரக்ஷார்தமஸ்யஸர்வஸ்ய
ராஜௌ நமஸ்ருஜேத்பிரபு:

என மநு - கூறுதலாலும், வைசியனுக்குக் கொடையே முக்கியமென்பது அவர்களுக்கு அமரத்திற் கூறிய "அர்யா" யென்னும் பெயராலும் விளங்கும். ஈதல் அல்லது. கொடை யாவராலும் அடையத்தக்கவர்கள்; எனவே, யாவரும் அடைதல் கொடைபற்றியேயாம். இனி "யாவரும்" என்றது-அந்தணன் அரசன் சூத்திரன் சங்காரர்கள் முதலியோரைக் குறித்தது. எங்ஙன,

மெனில், அந்தணனுக்குக் கொடைதானம் எனவும், அரசனுக்குக் கொடைவரி எனவும், சூத்திரனுக்குக் கொடைகூலியெனவும், சங்கரர்க்குக் கொடைபலியெனவும், வழங்கப்படுதலின். இதைவிரிக்கிற் பெருகும். ஆகவே, மநு-௧௦-வது அத்தியாயத்தில்-௭௪-முதல்-௮௦-வது சுலோகங்களவரையில் மூவர் முக்கியத்தொழிலென்று வகுத்தது ஜீவனோபாயத் தொழிலாம். அதை யங்கு காண்க. இனி அவ்வருணத்தார் பிறதொழிலோவெனின், இவ்விடத்தில் நாம் சொல்லிய பரமார்த்தமாகிய தருமத் தொழிலுக்கு இன்றியமையாத உதவித் தொழிலன்றி வேறல்ல. ஆதலால் இக்கொடுத்தலைப்பற்றியே வைசியருக்கு "வேளாளர்" யென்று பெயர்வந்தது; என்னை? யெனில்,

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக்கெடும்...... ...... ... ...*

என்றதுபோல் வனவும், "ஓதுவாரெல்லா முழுவார் தலைக்கடை" யென்றதுபோல் வனவும்,

ஏரெழுபது திருக்கைவழக்க முதலியன போல்வனவும் பலவுள்ளன. இனி வேள் என்பது மண்; அதை ஆள்பவர் வேளாளர் என்றாகாதோ வெனில், அவ்வாறன்று; மண்ணுள்வான் அரசனென்பது பிரசித்தமாதலால் அது சிறப்பன்று. அந்தணர்களுக்குத் தானமும், அரசர்களுக்கு வரியும், சூத்திரர்களுக்குக் கூலியுஞ், சங்கரர்களுக்குப் பலியு மில்லாவிடத்து உலகுநிலை பெறாதாகலின், கொடைக்கே யுரிமைக்கடன் பற்றி யிவர்கட்கு வேளாளரென வந்தது.

## உழவு.

இனி முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவற்றுள், முதற்பொருளோடுரிமையுடைய உயிரு



பிறப்பினராகிய மூவர்க்கும் முதற்பொருளை வகுக்குங்கால், அம்முதற்பொருள், நிலம்பொழுதென விருவகையாக, பொழுதுரிமை வேதியர்க்கும், நிலத்துரிமை வேளாளர்க்கும், நிலம்பொழுதென்னு மிருவகையுரிமை வேந்தர்க்குமாம். இக்கருத்தினை, இனி வெளிப்படுத்துங் "காலமாதவீயம்" என்னு நூலானும், ஏனைய விரிநூலானுமுணர்க. ஆகவே நிலத்துரிமை வைசியராகிய வேளாளர்க்குடைமையின் அவர்க்குக் கிழார் என்னும் பட்டப்பெயர் வந்த தென்றுணர்க. "கிழார்" என்பதன்பொருள் - உரிமையாளர் என்பது. கிழமை=உரிமை, அக்கிழமையென்னும் பண்புப்பெயரிறுதி மை விகுதியும் இடையகரவுயிரும் கெட்டு, ஆர் என்னும் உயர்திணைப்படர்க்கைப் பன்மையீறு வந்து புணர்ந்து, கிழார் என முடிந்தது என்றுணர்க. இப்பட்டப்பெயர் பன்னெடுங்காலமாக வந்த வென்றுணர்க. என்னை? கடைச்சங்க வாணர் நாற்பத் தெண்மருள், கூடலூர்க்கிழார், அரிசிற்கிழார், முதலியோருமவரென்க. சேக்கிழார், பாக்கிழார், என்பாருமவர். இவ்வுண்மை யுணராத போலி மாந்தர்சிலர் அழுக்காறு முதலிய காரணமாக் வேறுபொருள் கூறியும் புலம்புப. "காணியாளர்" என வழங்கும் வழக்கும் இக் கிழார் என் பதன்பொருளடியாகவே வந்த வென்று கொள்க. ஆகவே, வேளாளரென்பதற்குக் கொடையானன்றி நிலவுரிமையால் வந்ததென்பது அத்துணைச்சிறந்த பொருளன்மையு முணர்க. இக்கருத்தானே தொண்டமண்டலமென்னுஞ் சொல் வழக்கிலக்கணங் கூறினோரும் அவ்வுரையைப் பிறர்மதம்படக் கூறினர் என்க. இன்னுமிதனானே மநுமுதலியோரரசாண்டகாலத்துட்டானே, முதற்பொருளிற் சிறந்த நிலத்துரிமை யியையபுடைமைநோக்கிக் கிழார் எனப்பட்டப் பெயர் வேளாளருக்கு வழங்குமாயின், முற்பொருள் கருப்பொருளிவற்றோ டெட்டுணையும் உ

மை பெற்றறியாத சூத்திரர்க்கெவ்வாறு அப்பட்டப்பெயர் உறும்! அறம்பொருளின்பம் வீடுபேற்றிற்குக் காரணமாகிய முதனூலாராய்ச்சி யுடைமையும், அங்ஙனஞ் செய்வார் கழகமுறுதலும் சூத்திரர் எங்ஙனம் பெறுவர்? சங்கத்தவராகத் தெய்வப்பலகை வேதியர்வேந்தர் முதலியோரோடு மொப்ப எங்ஙன மிடங்கொடுக்கும்? ஆதலால், வேளாளரைச் சூத்திரரென்பது அசங்கதமென்றே தெற்றென்றுணரப்படும். அல்லதூஉம், சூத்திரர் ஏவலராக அவர்க்குரிப்பொருளாய தொழிலோடியை புண்டோவெனின்? அற்றன்று. அவ்வுரிப்பொருள் முதற்பொருளும் கருப்பொருளும் நிமித்தமாக விடைதோன்றுவ தொன்றுமாதலின். அஃது அம்மூவர்க்கும் பொதுவாகவே சூத்திரர்க்கியாண்டு மவ்வுரிமையின்று. ஆதலினன்றே அவர்க்கு "மூவரேவலாற்றுவார்" என்றவாறென்க. அன்றியும் அச்சூத்திரர் என்றும் செய்விக்கச்செய்வார் என்றே கொள்க. என்னை? நுண்ணுணர் வில்லாதவராதலிற்றொழிலுரிமையு மின்று; தொழிலுரிமை அறிவிற்சிறந்த சுதந்தரமுடையர்க்கே அஃதாம்; சூத்திரர் அத்தகையரென்பதனை, பராசரம் முதலத்தியாயம் சூத்திரனியல்பு,

శ్లో॥ రాగోద్వేషశ్చమోహశ్చ పారుష్యంచనృశంసతా
శాఠ్యంచదీర్ఘవైరత్వ మతిమానమనార్జవమ్।
అనృతంచాతివాదశ్చ పైశున్యమతిలోభతా
వికృతిశ్చాప్యవిజ్ఞానం జనశూద్రమావిశత్॥

ராகோத் வேஷஸ்ச மோகஸ்ச
பாருஷ்யஞ்சநிருஸம்ஸதா
ஸாட்யஞ்ச தீர்க்கவைரத்வ
மதிமாநமநார் ஜவம்
அநிருதஞ் சாதிவாதஸ்ச
பைஸுந்யமதிலோபதா
விக்ருதிஸ்சாப்ய விஞ்ஞானஞ்
ஜநஸூத்ரமாவிஸது.

இ-ள், இச்சை, வெறுப்பு, வேட்கைப்பெருக்கம், வன்சொல், இரக்கமின்மை, தேறுதுசெய்தல், தீராப்பிடிவாதம், கழிமானம், செவ்வனொழுகாமை, பொய்கூறல், அதிகவாதஞ்செய்தல், கோள், பெருமுலோபம், அறியாமை முதலியதீக் குணங்கள் சூத்திரன் பிறந்தவளவில் வந்தனவாம் என்ற அனுசாசனிகபருவத்துள் விதித்தவாற்றானுணர்க. வேளாளர்க்கியாண்டுமென்றும் இக்குணமிருந்தவாறுக நூல் வழக்க முதலியன வின்று. என்றும் யாரும் அவரை "வாய்மைகுன்றா வேளாண்விழுக்குடி" என்பது முதலியவாகப் புகழ்ந்தனர் பரவலே காணப்படுகின்றது. அதற்குச்சான்று "பிள்ளையார்," வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந்தாளாளர்" என்ற மறைமொழியேயென்க.

ஆதலின் சூத்திரர் முதற்பொருண்முதலிய முப்பொருளுள் ஒன்றற்கும் மாதரேபோல வுரிமையாளரல்லரெனத் தெற்றென்றுணர்க. வேளாளர் வைசியரே யாதன் அம் முப்பொருளோடும் முற்றும் உரிமையுடையாரென்க. அதனானன்றே கருப்பொருள்பதினான்கனுள்ளுந் தலைமைபெற்ற குறிஞ்சித் தெய்வமாகிய முருகப்பிள்ளையார்க்குக் குடிமைத்தொழும்பில்லா வேளாண் குடியாண்டுமின்றுகாறுமில்லையாயினவாறு. ஆகவே, வேளாளரே அவ்வுரிமைப்பட்டப் பேரும், வைசியப்பிறப்பு முடையரென்றுணர்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

ஆயின், கொடைசிறந்தகாரணம் பற்றி வைசியரை வேளாளர்களெனின் உழவுத்தொழில் வேளாளருக்குச் சிறப்புடைத்தென்றது என்னையெனின்?

இரவாரிரப்பார்க் கொன்றீவார்
கரவாதுகைசெய்தூண் மாலையவர்.

எனக் கொடைக்குக் காரணங் கூறியபடியாம். அன்றியுங் கொடைக்குச் செல்வ மிகுதிவேண்டும். அச்செல்வம் வருவாய் உழவே யென்பதை,

சீரைத்தேடின் ஏரைத்தேடு.

இலமென்றசைஇயிருப்பாரைக்காணி
னிலமென்னு நல்லாணகும். *

என்றனபோல்வன பலசான்றோர் உரைகளாலறியப்படும். அல்லதூஉம், ஆளுடைய பிள்ளையார் இரண்டாந்திருமுறை, திருவாக்கூர், பண்சீகாமாம்.

வாளார்கண்செந்துவர்வாய்மாமலையான்றன் மடந்தைத்
தோளாகம் பாகமாப்புல்கினான் றொல்கோயில்
வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான்மிக்கிருக்குந்
தாளாளராக் கூறிற்றான் றோன்றிமாடமே.

என்னு மறையுள்ளும் வேளாண்மைக்குக் காரணந் தாளாண்மையே யென்று விதித்தவாறு காண்க.

ஆசிரியர் தொல்காப்பியனாரும் இக்கருத்து வெளிப்படவன்றே மரபியலுள் "வைசியன் பெறுமே வாணிகவாழ்க்கை" எனவும் "மெய்தெரிவகையி னெண்வகை யுணவின் செய்தியும் வரையாரப்பாலான" எனவுங் கூறியதொழியாது "வேளாண் மாந்தர்க்குழுதூணல்லதில்லென மொழிபபிறவகை நிகழ்ச்சி" எனக்கொடைமடக் காரணங்காட்டி விதந்தனர் என்றுணர்க.

அற்றன்று, நச்சினார்க்கினியா ருரையிற் சதுர்த்தர் தொழிலென வுழவினைக் குறித்தனரான் றோவெனின்? அங்ஙன மன்று. சதுர்த்தர் தொழில் உழவென்பதும், அவர் வேளாளரென்பதும் ஆசிரியர் கருத்தாயின், மூவரோவலை



யும் ஒருங்கு விதிப்பர்; அங்ஙனமன்றி, வேளாண் மாந்தரெனத் தொழிற் கிழமைப்பட ஆண்டாறனுருபு தொக்கு நிற்பதொரு சொல்லாக்கி, "உழுதூணல்லது பிறவகை நிகழ்ச்சியில் லெனமொழிப" வென வரம் பறுத்துக்கூறு றென்க. ஆகவே, அவருரை போலியுரை போலுமென்க: அவர் இதுவேயன்றிப் பலவிடங்களினுஞ் சலம் பற்றிச் சாதிப்பேம் என்று முதனூல்களோடு மாறுபட்டே யுரையெழுதல் அவரியற்கை. என்னை? அத்தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்துள் "அதங்கோட்டாசாற் கரிறபத்தெரிந்து மயங்காமரபினெழுத்து முறைகாட்டி" யென்புழி, மரபுமுரணுக ஆசியர் அகத்தியனாரோடு தாமும் மாறுகொண்டு சபித்தவாறாகவும், "வடவேங் கடந் தென்குமரி" யென்புழி "நாகாசல வேலவ நாலுகவித்தியாகா" என்ற அறிஞருரையுங் கருதாது, நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி யுலகந் தொழுது வீடுபெற்ற மலையாதலின் வேங்கடத்தை யெல்லையாகக் கூறினர், எனவும், "விண்வத்துக்கொட்டும், செல்வுழிச் சென்றான்" என்புழி, மெய்யீற்றின் முன்னுயிர் வருவழி யுடம்படுமெய் பெற்றதெனவும், பிறவும். திருமுருகாற்றுப்படையுள், பிள்ளையார் திருக்கையினுள்ள வேற்படையைப் பிரமன் படைத்தவாறு கூறக் கேட்டவர் வெகுண்டதாகவும், பிறவும் உரையெழுதுவர். இங்ஙனமாவது அவரியற்கையென்பதனைத் தொல்காப்பியச் சூத்திரவிருத்தி யுரைகாரருங் கூறினர், ஆண்டுணர்க. இல்லையேற் பிற்காலத்தார் திருத்தி வரம்பழித்தனர்போலும்; ஈண்டு விரிப்பிற் பெருகும். இடம்பெற்றுழி விரிப்பாம்: அது நிற்க.

## சதுர்வருணத்தார் பொருளீட்டும் வகை.

இனிநால் வருணத் தரும்பொருளீட்டும் வகைமுதலியவற்றைப் பராசரமிருதி மாதவீய வுரைத்தமிழ் மொ

ழிபெயர்ப்பு, ௪0அ-முதல்-௪கங-வது பக்கங்களில் விதித்தவாறு.

மநு.

శ్లో॥ త్రయోధర్మానివర్తేరన్బ్రాహ్మణాత్క్షత్రియంప్రతి
అధ్యాపనంయాజనంచతృతీయశ్చప్రతిగ్రహః
వైశ్యంప్రతితథైవైతేనివర్తేరన్నితిస్థితిః॥

திரயோதர்மாநிவரே ரன்-பிராஹ்மணாத் க்ஷத்திரியம் பிரதி
அத்யாபநம்யாஜ நஞ்ச-திருதீயஸ்சபிரதிக்கிரஹ:
வைஸ்யம்பிரதிததைவைதெ-நிவரேரந்நிதிஸ்திதி:

அறுதொழிலினுள் மூன்றுதொழில் அந்தணனினும் அரசர்க்குத் தவறுகின்றது. அவை ஓதுவித்தல், வேட்பித்தல், தானமேற்றல், என்னப்படும். அவ்வாறே வைசியனுக்கும் அம்முத்தொழிலும் பிறப்டுகின்றது என்றவாறு காண்க. அதனுனே ஓதுவித்தன் முதலியன அந்தணனுக்கேயொழிய ஏனையிருவர்க்கும் பொருளீட்டும் வழியல்லவாம்.

யாஞ்ஞவற்கியர்.

శ్లో॥ ప్రధానంక్షత్రియేకర్మ ప్రజానాంపరిపాలనం
కుసీదంకృషివాణిజ్యం పాశుపాల్యంవిశస్స్మృతం॥

பிரதாநம் க்ஷத்திரியே கர்ம-பிரஜாநாம் பரிபாலநம்
குஸீதங்கிருஷிவாணிஜ்யம்-பாசுபால்யம்விஸஸ்மஸ்ஸிருதம்.

அரசனுக்குக் குடிகளைப் புரப்பதே சிறந்தகருமமாம்; வைசியனுக்கு வட்டிவாங்குதல், உழவு, பண்டமாற்றுதல், ஆனிரையோம்புதல் என்னுமிவை சிறந்தகருமங்களாம்.



உசநசு.

శ్లో॥ శూద్రస్యద్విజశుశ్రూషాసర్వశిల్పానివాపిచ
విక్రయస్సర్వవస్తూనాంశూద్రకర్మహ్యుదాహృతం॥

ஸூத்ரஸ்யத்விஜஸுஸ்ரூஷா-ஸர்வஸில்பாநிவாபிச
விக்ரயஸ்ஸர்வவஸ்தூநாம்-ஸூத்ரகர்மஹ்யுதாஹ்ருதம்.

அந்தணர் அரசர் வைசியர் என்னும் இருபிறப்பாளர் மூவரையும் முறைப்படி உபசரித்துப் பணிபுரிதல், எல்லாவகைப்பட்ட சிற்பத்தொழில்களையுஞ் செய்தல், எல்லாப்பொருளையும் விற்றல், இவைகள் சூத்திரன் சீவனத் தொழிலென்று கூறப்பட்டது.

என்ற வுரைகளானு முணர்க.

ஆயின், ஆண்டுகுறித்த ஆரிதமொழியுள், உழுதல் பசுநிரைகாத்தல், பண்டமாற்றுகிய (அங்காடி) வாணிபமும் விதித்துள்ளவன்றே அவ்வகையால் இவ்வேளாண்மாந்தருக்கும் வந்திருக்கலாமே யெனக்கொள்ளாமோ? எனிற், கொள்ளாம். மேற்குறித்த தொல்காப்பிய மரபியலுள், நச்சினார்க்கினியர் முதலியோரும் வேளாண்மாந்தர் கலப்பையைத் தொடீம் கழுவாய்புரிதல் வேண்டுமெனவுடம்பட்டாலும், கொடைச்சிறப்புக் கூறுதலாலும், சூத்திரர்க்கு அக்கொடையுரிமை சிறவாமையாலும், மிருதிகளுள் ஒரு சாரார், இவ்வுழவை "பிரமிருதம்" (முற்றுஞ் செத்தபிழைப்பு) என்னை? பிறவுயிரின் இமிசைக்குக் காரணமாதலால், எனக் கூறுதலாலும், இன்றும், அவ்வுழவுத்தொழிலினைப் பண்ணையாள் முதலியோரால் வேளாளர் நடத்துவது வழக்கின் கண்ணுள்ளதாம். இது பற்றியே அக்காலத்து பண்ணையாளை அடிமையாக்கி முறிச்சாதனமும் வாங்கியிருந்தார்கள். ஆதலாலும் வேளாண்மாந்தருழுதொழில் அவ்வாரித மொழியால் வந்த சூத்திரவுழவன்று எனமறுக்க.

பிறவெனின்? செய்வித்தல், செய்தல், என்னுந் தொழிற் பாகுபாட்டில், உழவுத்தொழில் செய்வித்தற் கருத்தர் வேளாளர், செய்தற் கருத்தர் சூத்திரர், என்றவாறு. அரசன் கட்டியகோயில் தச்சன் கட்டிய கோயிலென்றும் போல வென்றறிக.

இதனைப் புறப்பொருள் வெண்பாமாலையுள் வெட்சித் திணைக் கண்ணே ஐயனாரிதனார்-தன்னூறு தொழில் மன்னூறு தொழிலெனப் பிரித்ததன் கருத்தினையு மோர்ந்து உபலக்கணத்தாற் கொள்க. இன்னுமிதன் அகல விவகாரங்களை விரிந்தநூலா னுணர்க.

அதுவுமன்றி அறுசமையத்தையும் நிலைபெறச் செய்ய உலகம்மையார் காஞ்சியிற்றவஞ்செய்து ஏகம்பவாணராகிய பெருமானாரிடத்தில் இருநாழி நெல்பெற்ற காலத்தில், அவ்விரு நாழியையும் விதைமுதலாக வேளாளர்க்கேயம்மைதமது அருமைத் திருக்கையால்கொடுத்து உழவுத்தொழிலால் விருத்திசெய்வித்து முப்பத்திரண்டறமும் வளர்த்தருளியது, மெய்ம்மொழிப்பொருளாகிய பெரிய புராணத்தாலும் காஞ்சி புராணத்தாலும் பிறவற்றாலு முணரலாம்.

சேக்கிழார் புராணம்.

இமையமலையரையன் மகடழுவக் கச்சி
யேகம்பர் திருமேனி குழைந்தைஞான்று
சமைபமவை யாறினுக்குந்தலைவிக் கீசர்
தந்தபடி யெட்டுழக் கீராழி நெல்லு
முமைதிருச்சூடகக்கையாற் கொடுக்க வாங்கி
யுழவு தொழிலாற்பெருக்கியுலகமெல்லாந்
தமது கொழுமிகுதி கொடுவளர்க்கும் வேளாண்
டலைவர் பெரும்புகழுலகிற் றழைத்ததன்றே.



ஆகவே, வேளாளர் சூத்திரரானல் வைசியத் தொழிலாகிய உழவுக்கு உரியாரிவர்களென்று உலகமாதா கட்டளையிடாரல்லவா? அன்றியும், சூத்திரன்பொருள் அறம்வளர்க்கத்தக்க வல்லன; அறிவுடையோரவன் செய்யுந் தானத்தை வாங்குதலுஞ் செய்யார். என்னை? பராசரஸ்மிருதி மாதவீயவுரை உதாரணம்

வசிஷ்டர். (பராசரம் உ0கூ-வது பக்கம்.)

శ్లో॥ కించిద్వేదమయంపాత్రం-కించిత్పాత్రంతపోమయం
పాత్రాణామపితత్పాత్రం-శూద్రాన్నంయస్యనోదరే॥

கிஞ்சித் வேதமயம் பாத்ரங்
கிஞ்சித்பாத்ரந்தபோமயம்
பாத்ராணமபிதத்பாத்ரம்
ஸூத்ராந்நம்யஸ்ய நோதரே.

வேதமுணர்ந்தவனைச் சிறிதுதக்கோனெனக் கூறப்படும்; தவமுடையோனும் சிறிதேதக் கோனுவன்; யார் வாயில் சூத்திர சம்பந்தமான அன்னம் வீழுகின்ற தில்லையோ? அவன் பாத்திர மென்னுந் தக்கோருளெல்லாஞ் சிறந்த தக்கோனும்.

மநு. (பராசரம்-உஉகூ-வது பக்கம்.)

శ్లో॥ ప్రతిగ్రహః ప్రత్యవరస్సతువిప్రస్యగర్హితః

பிரதிக்கிரஹ பிரத்ய வரஸ்ஸது விப்ரஸ்யகர்ஹித:

ஏற்றலென்பது எவற்றினுமிழிந்தது. வேதியனுக்கோ வெனில்? அது நிந்திக்கப்பட்டது. அங்ஙனமன்று, தாழ்ந்ததாகிய ஏற்றல் வேதியனுக்குக் கூடாதென்ற அவ்வசநத்தாலுண்டாகிய பழிப்பு நீசரால் ஒன்றும்பெறலாகாதென்று கூறியவாறாகக் கொள்ளத்தக்கது. அது மேற் கூறும் மநுவசனத்தாலேயே விளக்கப்பட்டது. என்னை?

ශ්ලෝ॥ ప్రతిగ్రహేణాగర్హితస్స్యాచ్ఛూద్రాదప్యంత్యజన్మనః

பிரதிக்கிரஹோகர்ஹிதஸ்ஸியாச்
சூத்ராதப்யந்தியஜந்மந :

சூத்திரனுலும் கடையனுலும் தானமேற்றல் பழிக்கப்பட்டதாம். எனவே நீசனிடத்தில் வாங்கப்படாது என்பது கருத்து.

வியாசர். (பராசரம் ௨௨அ-பக்கம்.)

శ్లో॥ ద్విజాతిభ్యోధనంలిప్సేత్ప్రశస్తేభ్యోద్విజోత్తమః
అపివాజాతిమాత్రేభ్యోనతుశూద్రాత్కథంచన॥

திவிஜாதிப்யோதநம் லிப்ஸேத்
பிரஸஸ்தெப்யோதிவிஜோத்தம :
அபிவாஜாதி மாத்ரேப்யோநது
ஸூத்ராத்கதஞ்சன.

இருபிறப்பாளர் மூவருள்ளுஞ் சிறந்த அந்தணன் ஒருவன் தனத்தைத் தானமாக வேற்றலுக்கு அதிகாரியாவான். அவ்வந்தணன் அச்சிறந்த விருபிறப்பாளராலேயே அப்பொருளைப்பெற விரும்பவேண்டும்; இல்லையேல் சாதிமாத்திரையால் இரு பிறப்பாளரா யிருப்பினும் அவரிடத்திலாவது அவ்விருப்பஞ் செலுத்தலாம். எவ்வளவு துன்பம் வந்தபோதிலும் சூத்திரனுல் பொன்னைப் பெற விரும்பலாகாது.

மநு. (பராசரம்-௨௨௯-வது பக்கம்.)

శ్లో॥ నయోగార్థందనంశూద్రాత్ ద్విజోభిక్షేతధర్మవిత్
యజమానోపిభిక్షిత్వాచండాలః ప్రేత్యజాయతే॥

நயோகார்த்தந்தநம்ஸூத்ராத்
திவிஜோபிக்ஷேதர்மவிது
யஜ்மா நோபிபிக்ஷித்வா
சண்டால : பிரேத்யஜாயதே.



தருமத்தை அறிந்த விருபிறப்பாளன் சூத்திரனுலும் பொன்னை வேள்வியின் பொருட்டு இரக்கலாகாது. வேள்வித்தலைவனுயினும் அங்ஙனம் இரத்தலைச்செய்தால் இறந்தபின்பு சண்டாளனுகப்பிறப்பன்.

அதுநிற்க உழவுத்தொழில் சுதந்தரித்துச் செய்யத்தக்க தென்பதை.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்வார் ... ... ... *

என்ற திருக்குறளானும் அம்முயற்சி செய்யுந் தொழிலனுபவத்தாலு மறியப்படும் ஆயின் மநு உழவு பராதீனத் தொழிலென்றதே? எனில், பல ஏவலர் முதலியோரை யாளவேண்டுதலின் அங்ஙனங் கூறியது. அதைவிரிப்பிற் பெருகும்.

அன்றியும், தானம், வரி, கூலி, பலி, கொடுப்பார் யாரென்று வினுவுக. கூலியாளருடைய தானம் பிராமணுள் வாங்கலாகாதென்று மறுத்த மநுவின் கருத்தையும், பராசரமாத வீயக் கருத்தையும் விளக்கிய நாயனுர்,

உழவினுர் கைம்மடங்கினில்லை விழைவதூஉம்
விட்டேமென்பார்க்கு நிலை ... ... ... *

என்றதனுல் வேளாளர் தானம் பெருதாரில்லை
இக்கருத்து தாரணம் முன்னும்வந்தன.

## வேளாளர் கரும விஷயங்கள்.

அதுவுமன்றி வைசியருக்கு மநு விதித்தபடி விவாகம் உபநயன முதலிய ஷோடசகருமங்கள், சமய விசேஷ நிருவாண தீக்ஷைகள், ஆசூசாதிவிதிகள், சௌசாசமன ஆடை, உபவீதம், முதலிய பிறவும், பராசரஸ்மிருதி மாதவீயவுரை வேளாளர்க்கன்றி சூத்திரர்க்கு விதித்தவிதிதொன்று தொட்டின்று வரையும் நடந்துவந்த தில்லையல்ல

வா ? இவைகளை யிவ்விடத்து விரிக்கிற் பெருகும் ஆகவே இவர்கள் வைசியரென்பதேதேற்றம்.

## உபநயநவிதி-மநு.

శ్లో॥ గర్భాష్టమేబ్దేసర్వత్ర బ్రాహ్మణస్యోపనాయనమ్
గర్భాదేకాదశేరాజ్ఞో గర్భాత్తుద్వాదశేవిశః॥

கர்ப்பாஷ்டமெப் தேஸர்வத
பிராஹ்மணஸ் யோபனயனம்.
கர்ப்பா தேகாதஸேராக் ஞோ
கர்பாத்து த்வாதஸேவிஸ:

வேதியன் எட்டாமாண்டிலும், வேந்தன் பதினோராமாண்டிலும், வைசியன் பனிரண்டாமாண்டிலும், உபநயனஞ்செய்தல் விதி.

శ్లో॥ బ్రహ్మవర్చసకామస్య కార్యంవిప్రస్యపంచమే
రాజ్ఞోబలార్థినష్షష్ఠే వైశ్యస్యేహార్థినోష్టమే॥

பிரஹ்ம வர்ச்சஸ காமஸ்ய
கார்யம் விப்ரஸ்யபஞ்சமே
ராக்ஞோப லார்த்திநஷ்ஷஷ்டே
வைஸ்யஸ்யெ ஹார்த்திநோஷ்டமெ.

பிரம்வொளி விரும்பின வேதியன் ஐந்து வயதிலும், பலத்தை விரும்பின அரசன் ஆறுவயதிலும், பொருளை விரும்பின வைசியன் எட்டுவயதிலும் உபநயனஞ் செய்க

శ్లో॥ ఆషోడశాద్బ్రాహ్మణస్యసావిత్రీనాతివర్తతే
ఆద్వావింశాత్ క్షత్రబంధోరాచతుర్వింశతేర్విశః॥

ஆஷோதஸாத் பிராஹ்மணஸ்ய
ஸாவித்ரநாதி வர்த்ததே
ஆத்வாவிம்ஸாத் க்ஷத்ர பந்தோரா
சதுர்விம்ஸ தேர்விஸ:



பதினாறுவயதினளவும் வேதியனும், இருபத்திரண்டு வரையில் அரசச்சுற்றமும், இருபத்துநான்கு வரையில் வைசியனும், உபநயனகாலம் கொள்ளலாம்.

## ஆசௌசவிதி-மநு.

శ్లో॥ శుద్ధ్యేద్విప్రోదశాహేన ద్వాదశాహేనభూమిపః
వైశ్యఃపంచదశాహేన శూద్రోమాసేనశుద్ధ్యతి॥

ஸுத்யேவிப்ரோ தஸாஹேநத்
த்வாதஸா ஹேநபூமிப :
வைஸ்யபஞ்சதஸாஹேந
ஸூத்ரோமாஸெ நஸுத்யதி.

வேதியன் பத்துநாளில், வேந்தன் பன்னிருநாளில், வைசியன் பதினைந்துநாளில், சூத்திரன் ஒரு திங்களினுமாக ஆசௌச நீங்கிச் சுத்தராவர்.

இனி இவர்கள் வைசியரல்லாக்கால், முக்கியமாய் இம்மை மறுமைப் பிரயோசனங்களுக்கு ஏதுவாகிய எல்லா வைதிக லௌகிக கருமங்களுக்குங் கருவியென்று சொல்லப்படும் வேதம் ஆகமம் புராணம் உபநிஷத்து வேதாங்கம் என்பவைகளை முறையே ஓதலாகாது. ஓதாது விடவே, அறிவின்றி ஒழுக்கங் கெடும். ஒழுக்கங் கெடவே, மேற்படி கருமங்கள் நடவாது. அது நடவாதாகவே, இருமைப்பயனும் ஒருங்கு கெடும், பாவம்வளரும். அன்றியுந்தானமுதலியவும் கடனறிந்து செய்யவேண்டுதலின் வேதாதியோதுதல் ஒருதலையாய் வேளாண்மாந்தர் தருமமென்க.

## ஸ்ரீ-சூத்திரர் வேதம் ஓதலாகாதெனல்.

சூத்திரர் ஓதலாகாதென்பானேன் ? எனின், மநு

வில் சூத்திரர்க்குத் தேகவுழைப்பு இருத்தலால் கரணவுழைப்புடைய வேதமோதலாகாதென்றது; பெண்பாலுக்கும் ஓதலாகாததென்றது இல்லற தருமத்துக்குத் துணையாய் கிரககிருத்தியங்களை முற்றும் நிர்வகித்தல், கருத்தாங்கிப் பெறுதலாதி தேகவுழைப்புடைமையா தலானல்லவா? இம்முறையை யிங்கே விரிக்கிற் பெருகும்.

---

## வேளாளர்கள் ஓதல் விசாரம்.

ஆயின் வேளாளர் வேதம் உபநிடதமொழிய ஆகமங்களும் புராணங்களும் வேதாங்கங்களும் ஓதலாமென்று சிலவிடங்களில் விதித்திருக்கின்றது. அவ்வழக்கமின்றும் நடந்துவருகின்றது. அன்றியும், வேளாளர் வைசியரோயானல் வேதம்வாசிப்பது முன்வழக்கத்திலிருந்ததாகத்தோன்ற வில்லையே? எனில், அவ்வாறன்று. உபநிஷத்து ஆகமம் வேதம் புராணம் இந்நான்கையும் பற்றி விசாரிக்கப்புகின், இந்நான்கும், ஈஸ்வரவாக்கியமென்றே அதனதன்றலையிலே, குறிப்பித்திருக்கின்றது. ஆகவே, ஒருபடித்தான ஆன்மாக்களைப் பிழைப்பிக்க வேண்டிக் கருணையால் திருவுளங் கொண்ட கடவுள் ஓரேவிதமான நூல் கூறாது நால்வகையாக ஒன்றுக்கொன்று தம்முள் வேறுபாடுடையதாகக் கூறியதேன்? எனில், அவ்வான்மாக்கள் பக்குவநோக்கிப் பாசஞானம், பசுஞானம், பதிஞானம், அனுபவஞானம், என்னும் நால்வகையுணர்ச்சியையும் விளக்குவிக்கும்பொருட்டு அல்லவா அந்நான்கையும் கட்டளையிட்டனர்? அவற்றுள்:—உபநிஷத்து அனுபவஞானம், ஆகமம் பதிஞானம், வேதம்பசுஞானம், புராணம் பாசஞானம் உணர்த்தும்: அதனாலே, அவற்றிற்கு அனுபவநூல், பதிநூல், பசுநூல், பாசநூல், என்று பெரியோர்களாலுஞ்



சொல்லப்படுகின்றது. ஆதலால், பாசலக்ஷணத்தையும் விளைவையும் புராணத்தால் நன்குணர்ந்து மேல் பசுலக்ஷணத்தை வேதத்தால் ஐயந்திரிபற அறியவேண்டுதலின் அதற்குக் கருவியாக வேத அங்கங்களையுமுடனுணர வேண்டுவது ஒருதலையாக விருக்கின்றது. இக்கருத்து வேதாந்தசூடாமணியாலும் காணலாம். என்னை? தன்னையறிதலருமை யாவதன்றித் தன்னையறிவதே தலைவனையறிதற்குக் கருவியாம். அங்ஙனந் தன்னையறிந்தபின் பதிலக்ஷணத்தையோர்ந்து அதன்மேற் பதியோடுங் கூடியனுபவிக்கும் பரமசுகமாகிய சுவானுபவ லக்ஷணம் அறியவேண்டுவது முறையென்றுணர்க. சீவகோடிகள் புவனபோகங்களை அனுபவிக்கும் தன்மை அனுபவத்தொழில், அனுபவக்கருவி, அனுபவப்பொருட்டாதி மயமாகிய பாசலட்சணத்தை யுணர்வது எளிது; அப்பாசத்தையுணருஞ் சரீரியாகிய பசுவையுணர்வதருமை; யாதலாற்றான் அங்கமும் வேண்டுவதாயிற்று. பசுநிலையாகிய ஆன்மலக்ஷணமுணர்ந்தவழியே அருணிலையாகிய பதியை யறிவதாமாதலால் அதற்கும் அங்கங் கருவிக்குக் கருவியாம். அனுபவஞானத்தைத் தரும் உபநிடதத்திற்கு வேறுகருவியின்று, அவ்வேதாகம புராணங்களே கருவியாம். இச்சிறப்புக்கு நிமித்தமே தம்பதி நியாயமாக வேதாகமமென்று கூறியதுஎன்று கொள்க. உபநிடதத்தையும் புராணத்தையுஞ் சோதித்திம்முறையே கூறுதேற்ற பெற்றியாற் கூறியது அநுபவஞ் சொல்லளவன்று குறிப்பளவினது, பாசஞ்சடம், ஆதலினாலென்றுங் கொள்க.

## புராணம் பாசநூலெனல்.

ஆயின் புராணங்களையெல்லாம் பாசஞானத்தை யுணர்த்தும்பாச நூலென்று கூறலாமோ அதற்கு நியாயமென்னவெனில்? அப்புராணங்களுட் கூறி...

முற்றும் ஆணவங்காமியம் மாயை யென்று சொல்லப்படும் மும்மலங்களைப் போலவும், அவற்றிற் கியைந்த தத்துவங்களைப்போலவும், அத்தத்துவக் கூட்டத்தாலாகிய உடம்புளமைந்தவாத பித்த சிலேத்துமம் போலவும், ஒன்றோடொன்று பொருத்தமில்லாமல் தம்முள் முரணுடையன வாகிய கதைகளும், உள்ளுணர்க்குறிப்பினால் நோக்குமிடத்துப் பரஸ்பர சம்பந்தமுடைய பொருண்மையும், பலபடப் பரத்துவ நிலைமை முதலியனவுங் கூறுதலேசாட்சியாம். இக்கருத்து திருமூலர் திருமந்திரத்தாலும் காமிகாதி ஆகமங்களாலும் உணரலாம்.

திருமந்திரம்.

அப்பணி செஞ்சடையாதி புராதன ன்
முப்புரஞ்செற்றன னென்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மலகாரி ய
மப்புரமெய்தமையாரறிவா ரே.

என்பது முதலியன.

## வேதம் பசுநூலெனல்.

வேதத்தைப் பசுநூலென்றும், அதுவுணர்த்துவது பசுஞானத்தை யென்றுங் கூறியதெத்தாலெனில்? முக்கியம் அவ்வேதமகாவாக்கியங்களாகிய பிரஞ்ஞானம்பிரமம், அகம்பிரமாஸ்மி, தத்துவமஸி, அயமாத்துமாப்பிரமம், என்னும் நான்கனுள்ளும், ஒவ்வொன்றில் அவ்வான்மலக்கூணதாற் பரியத்தையுஞ் சொல்லையுமே விளக்குகின்றது. அன்றியும், வேள்விமுதலிய கருமங் கூறியதும், கடவுட்டன்மை பலபடக் கூறியதும், பிறவுமக் கருத்து: இதனைச் சிவஞான சித்தியாரிலுங் காண்க. இது விரிக்கிற் பெருகும்.



என்றுபிரமாணித்தவிடத்தில், வேதமவர் உணர்ந்தவரென்றே கொள்ளப்படும். அன்றியும், சிலநாளைக்கு முன் திருவாவடுதுறை ஆதீனஞ் சிவஞான சுவாமிகள் ஸ்ரீவேதாந்த பாஷியத்தை வாசிக்க அபேக்ஷித்த காலத்தில் ஒருஸ்மார்த்தப் பிராமணர், சூத்திரரென்று சொல்லுவிப்பதற்குத் தடுத்து, பின் கடவுள் சந்நிதியிலிட்ட திருவுளச்சீட்டு விதித்ததால் சொல்லப்படுமென்று கூறி, அவ்வாறு கட்டளைபெற்றுப் பின்பு அவர் அப்பாஷியத்தை யுரைத்தார். இன்னும் சுத்த சைவர்கள் வேதமாதாவாகிய பிரமகாயத்திரி, சிவகாயத்திரியை ஜெபித்து வருகின்ற வழக்கமிகுத்துள்ளது.

## உபய வேதம்.

அதுவுமன்றி, வேளாளர்க்கு வேதமோதலென்பது என்றும் விட்டொழிந்த படியன்று. என்னை? வேதமென்பது ஒன்றேயாயும், பொருட்பாகுபாட்டால் நான் மறையானாற்போலும், மொழிப் பாகுபாட்டாலும், வடமொழி மறையெனவுந் தென்மொழி மறையெனவும் இருவகைப்பட்டுள்ளது.

அவைதாம், தைத்திரீயம், தல்வாகாரம், பௌடியம், சாமம், எனவடமொழிக்கண்ணும், தேவாரந் திருவாசக முதலிய திருமுறைகளும், திருவாய் மொழியுமெனத் தென்மொழிக் கண்ணும் வழங்கும். இனி இருக்கு, யஜுசு, சாமம், அதர்வண மெனவடமொழிக்கண்ணேவழங்குமே? எனின், சில்வாழ்நாட்பல்பிணிச்சிற்றறி வினையுடைய மாந்தர்க்கு இனிது பயன்படுமாறு வேதவியாசராற்பின் அம்மறையினை நான்கு கூறாக வகுத்தவாறென்றுணர்க. இதனைத் தொல்காப்பிய வுரையானுமுணர்க. அற்றேலற்றாக.

வடமொழிக்கண்ணும் தென்மொழிக்கண்ணும் மறையுள வாறுபோல பிற திசைமொழி தேசமொழிக்கண்ணுமில வோவெனில்? அம்மொழிக ளிவ்விரு மொழியடிப்பாடாகத் தோற்றியபடி யன்றி வேறல்ல. அதனையிடம் பெற்ற விடத்து விரித்துக் கூறுதும். அதுநிற்க, அத்துணையேயன்றி கடவுள்வாக்கியமும்,* அவனருட்பட்டோர் திருமொழியும், அவனேவலினால் அறமுணர்ந்த அந்தணராகிய முனிவர்கண் மொழியும், பெற்றுடையதிவ்விரண்டு மொழிகளுமேயென்க. அல்லதூஉம், அச்சத்தம் கடவுள் திருவடிவமென்றபடி ஆளுடைய வரசுகள் திருமறைக்காடு, திருத்தாண்டகம். "ஆரியன் கண்டாய் தமிழன்கண்டாய்" எனவும், "மூலநோய்தீர்க்கு முதல்வன்கண்டாய் முத்தமிழு நான்மறையு மானான்கண்டாய்" எனவும், திருவாவடுத்துறை திருத்தாண்டகம், "செந்தமிழோடாரியனை" எனவும், ஆளுடைய நம்பிகள், திருமழபாடி, பண்-நட்டராகம், "கண்ணு யேழுலகுங் கருத்தாயருத்தமுமாய்ப் பண்ணுரின் தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரோ" எனவுங் கூறுமாறுகாண்க. அங்ஙனமாக அத்தேவாரமுதலியன "தமிழ்வேத" மென்பதனை ஆளுடைய பிள்ளையார் திருப்பிரமபுரம். பண்-நட்டபாடை "திருநெறிய தமிழ் வல்வினை தீர்த லெளிதாமே" எனவும், திருச்சங்காட்டங்குடி-பண்-பழந்தக்கராகம் "கறையிலங்குமலர்க் குவளைக் கண்காட்ட" என்ற திருக்கடைக்காப்பில் "செங்காட்டங்குடி சேர்த்து மறையிலங்கு தமிழ் வல்லார் வானுலகத் திருப்பாரே" எனவும், விதித்தவாற்றானுமுணர்க. அற்றேல், அத்தேவார முதலியன சமயாசிரியர்களாகிய அவ்வாளுடைய பிள்ளையார் முதலியோரன்றோ திருவாய் மலர்ந்தருளிய தென்னில்? அற்றன்று. அத்தேவாரமுதலியன அனாதியேயுள்ளன வட



(சிவஞான சித்தியார்-கூ-வது-சூத்திரம்.)

வேதசாத்திர மிருதிபுராணங் கலைஞான ம்
விரும்பசவைவைகரியாதித்திறங்கண்மேலா ம்
நாத முடிவான வெலாம் பாசஞா ன்
னணுகி யான் மாவினைகீழ் நாடலா லே
காதலினானன் பிரமமென்னு ஞான ங்
கருது பசுஞான மிவனுடலிற் கட்டுண் [பசுவா
டோதியுணர்ந் தொன்றான்று வுணர்ந் திடலாற்
மொன்றாகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே *

எனவும்,

புறச்சமைய நெறிநின்று மகச்சமையம்புக்கு ம்
புகன் மிருதிவழியுழன்றும் புகலு மாச்சிர ம
வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மறங்கள் பலதெரிந்து மாரணங்கள் படித்து ஞ்
சிரப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத ச்
சிரப்பொருளை மிகத்தெரிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடை வரிதிற் சரியைகிரியா யோக ஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வர் *

## ஆகமம் பதி நூலெனல்.

ஆகமம் பதிநூல். பதிலட்சணத்தைத் தெரிவித்ததென்பதை இவ்விடம் விரிக்கிற் பெருகும். சித்தாந்த நூலாதியாலும் பாஷியத்தாலுங் காணலாம். அன்றியும் ஸ்ரீபஞ்சாக்ஷரவுரையையும் விசாரித்தறியலாம். இன்னுஞ் சித்தியார் திருவிளையாட்லாலு முணரலாம்.

(சித்தியார்-அ-வது-சூத்திரம்)

வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்க ள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல் க
ளாதி நூலநாதியமலன்றரு நூலிரண் டு
மாரண நூல்பொது சைவமருஞ் சிறப்பு நூ லா

நீதியினாலுலகர்க்குஞ் சத்தினி பாதர்க் கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம்பிறநூல்
திகழ்பூர்வஞ்சிவாகமங்கள் சித்தாந்தமாகும். *

(திருவிளையாடல் நகரப்படலம்-௯௭-வது-பாட்டு.)

வேதவந்தமுந் துளக்கற மெய்ப்பொருள் விளங்கும்
நாதவந்தமுங் கடந்ததோர் நடுநிலைப் பொருளி ன்
பாதவந்தனைப் பத்தியின் பாலராய்ப்பயில்வோ ர்
மாதவந்தரு பயனெனத் தழைத்தபல் வளனும். *

## உபநிடதம் அனுபவ நூலெனல்.

உபநிடதம் அனுப நூலென்பது கூறுதமையும். இக்கருத்தைக் குமாரதேவர் நூலுட் காண்க. இவ்விடத்துண்டாகும் பலசமய நூல் வாதாதிகளை மறுத்துக் கூறத்தொடங்குகிற காலமில்லாமையால் சுருக்கிச்சொல்லப்பட்டது. இதை விரிநூலுள்விளங்கக் காணலாம். ஆகவே, பசுநூல்வாசிக்கலாகாத வொருவர் பதிநூல்வாசிக்கலாமென்று சொல்வது நகைதரும். ஆதலால், வேளாளர் ஆகமம் வாசிக்கலாம்,வேதம் வாசிக்கலாகாதென்பது அசம்பவவார்த்தை. அன்றியும், முன்னாள்தொட்டு ஆகமமாத்திரம் வாசித்து வந்தார்களன்றி வேதம் வாசிக்கவில்லையென்பதுந் தவறு. என்னையெனில்? திருக்கைவழக்கத்துள்

"ஆதுலர்க்குச்செம்பொன் அளிக்குங்கை யாகமங்கள்
வேதபுராணங்கள் விரிக்குங்கை"

என்று கூறப்பட்டிருக்கின்றதினாலும், இதற்கு அனுபவமாகவேசிவஞானபோதஞ் செய்தமெய்கண்ட சிவாசாரியார், வேளாளர், அவர் தமது நூலில்,

அக்கரங்களின்றும் அகரவுயிரின்றே
லிக்கரமத் தென்னு மிருக்கு.



சொன்மறைபோலும் இறைவனென்றுள்ளான் அன்றுளது அவன் வாக்கு மாமன்றோ! என்னை? ஆளுடைய வரசுகள் திருப்பந்தணநல்லூர், திருத்தாண்டகம் "நான்மறையோ டாறங்க நவின்றநாவான்" என்றலின், அவ்வண்ணமே தமிழ்மறை விடயத்தும் அவர் திருப்புன்கூர்திருத்தாண்டகம் "கலைஞானங் கல்லாமேகற் பித்தானை" எனவும். அரசுகள்-௬-வது திருமுறை, திருமுதுகுன்றம், திருத்தாண்டகம். "பத்தனாய்ப்பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்பா மாலைபாடப் பயில் வித்தானை" எ-ம், செங்காட்டங்குடி, ௸ "நாயேன் முன்னைப் பந்தமறுத்தாளாக்கிப் பணிகொண்டாங்கே பன்னியநூற்றமிழ் மாலைப்பாடுவித்தென் சிந்தைமயக்கறுத்த திருவருளினானை" எ-ம், திருவெறும்பியூர், ௸, "பன்னிய செந்தமிழறியேன் கவியேன் மாட்டே னெண்ணொடு பண்ணிறைந்த கலைகளாய, தன்னையுந் தன்றிறத்தறியாப் பொறியிலேனைத் தன்றிறமு மறிவித்து நெறியுங்காட்டி, யன்னையு மத்தனையும் போலவன்பாலடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக்கொண்ட" எ-ம், தனித்திருந்தாண்டகம், "பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரே" எனவும், வரும். இங்ஙனம், இத்தேவாரந் திருவாசகம்தமிழ் மறையேயென்பதற்கு வேறு பிறசான்று வேண்டா. முன்னர் வேதாரணியமாகிய திருமறைக்காட்டில் வடமொழி வேதம் பூசித்து அடைத்திருந்த கதவினைப் பிள்ளையாரும் அரசுகளுமெழுந்தருளியபோது தமிழ் மறைப்பதிகங்களை திறந்து மீட்டுமடைத்தது. ஆகவே எத்திறவு கோலெதனைப் பூட்டிற்றோ அத்திறவுகோலானன்றியப் பூட்டு விடாதென்பது உலகறிந்த வழக்கு. ஆதலாலும், அழகிய திருச்சிற்றம்பலமுடையாரோ தமது அருமைத் திருக்கரத்தாலெழுதப்பட்டுண்மையாலும் என்றுணர்க.

இன்னும் இது தோற்றம் இடையம முடிவு எனபன வின்றிமுக்காலத்தும் ஒத்துள்ள ஆநாதித் தெய்வமொழி யென்பதனை,

> அருமறையைச் *சிச்சிலிப்பண்டருந்தத்தே டு
> மதுபோலன்றிது வென்றுமுளதா மூண்மைப்
> பாபதமுந் தற்பதமும் பரனேயன்றி ப்
> பலரில்லையென்றெழுதும்பனுவல்*பா ரி
> னெரியினிடை வேவாதாற் றெதிரேறியோ டு
> மென்புக்கு முயிர்கொடுக்கு மிடுநஞ்சாற்று ங்
> கரியைவளைவிக்குங்கன் மிதக்கப்பண்ணு ங்
> காமதலைக்கரையிலுறக்காற்றுங் காணே. *

என்றதனுள் என்றுமுளதா மென்றளவினெழி யாது, ஆசிரியர் தொல்காப்பியனார், "முந்நிலைக்காலமுந் தோன்றுமியற்கை யெம்முறைச்சொல்லு நிகழுங்காலத்து மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்" எனவினையியலுட் கூறியவாறு "வேவாது, ஓடும், கொடுக்கும், ஆற்றும், வளைவிக்கும், பண்ணும், காற்றும்," எனநிகழ் காலத்தாற் கூறியதுமேசான்றெனக. ஆண்டு அரும்மறை என்றது வடசொன்மறையைக்குறித்தது; அதனைத் தமிழுனை நோக்கி யுணர்த்தியவாறு அன்றியொப்பிட்டவாறன்று. இரண்டு மோர்பொருளுந்தன்மை முதலிய வுமுடையபதாமாதலின். 'இஃ தித்துணை யினமைக.

ஆகவே, அவ்வாசிரிய மூர்த்தங்களாகச் சிவனே அருண்மேனி தாங்கிவந்து தமது திருமொழியினை வெளிப்படுத்திய வாறென்றுணர்க.

இன்றும் வைணவத்தும் உபயவேதாந்தமெனக் கூறி வடமொழிமறையினும் சிறப்பிற்றாகத் திருவாய்மொழியினைப்பாராயணமுதலிய திருமந்திரமாகக் கொண்டொழுகுதல்காண்க. இன்னும் இம்முறை யிடம்பெற்றழி விரிப்



பாம். இங்ஙனந் தெய்வத்தமிழுஞ் சிறப்புடைமை பற்றியன்றோ வடமொழி வேதாங்கமாகிய பூர்வமீமாம்ஸையுள்ளும் இராஜசூய வேள்விக் குரியார் யாரென்று வருணாச்சிரமங் குறித்து இராஜன் என்றமொழியினைப் பற்றிய விசாரத்தினுள் "திரமிடவழக்கு"முள்ளன என்று எடுத்துக் கூறி முனிவராகியர் சித்தாந்தஞ்செய்தனர்-வருமாறு.

(பராசரமாதவீயவுரை - ருசு அ·வ்து-பக்கம்.)

அரசனென்னும் பெயர்த்தகுதி.

அற்றேல் "దండయేద్రాజా" (தண்டயேத்ராஜா) அரசன் தண்டிக்க வேண்டுவது. என்று கூறப்பட்டது நிலத்தினை யாள்பவனன்றோ? அரசன்! தண்டனையு மாணையும் அவனுக்கன்றோ? உரியது. இங்ஙனமாக இதுக்ஷத்திரிய வருணத்திற்கே யுரிய சிறப்புத்தருமம் என எங்ஙனங்கூறப்படும் எனில்? அற்றன்று.

வருணதருமங்களைக் *கூறவந்த நூலுட் கூறப்பட்ட "இராஜன்" என்னுமொழிக்கு க்ஷத்திரியனே பொருளென்று தருமநூல் முடிபு. க்ஷத்திரியனல்லாதவனுக்கும் அரசச்செல்வமுண்டாயிருப்பின் தொழிலைப் பற்றியவாறாக, வுலகவழக்கினால் அம்மொழி உபசார வழக்காகச் செல்லுமென்றுணர்க. வைதிகமாகிய "இராஜன்" என்னுமொழி க்ஷத்திரியன் பாலதே என்று மீமாம்ஸையில் அவேஷ்டி அதிகரணத்துள்ளும் விதிக்கப்பட்டுள்ளது.

(அவேஷ்டி அதிகரணம்.)

பூருவ மீமாம்ஸை, ஜைமினிசூத்திரம் இரண்டாம் அத்தியாயம். அவேஷ்டி யென்ற அதிகரணம்.

விடயவாக்கியம். శ్రుతిః "ఆగ్నేయమష్టాకపాలం నిర్వపతి హిరణ్యం దక్షిణా"=வேதவாக்கியம்—"ஆக்நேயமஷ்டாகபாலம் நிர்வபதி ஹிரண்யந்தக்ஷிணா" அக்கினி தேவதாகமாகிய புரோடாசத்தை எட்டுக் கபாலத்தில் சுத்தப்படுத்தி வைத்து ஹோமஞ்செய்கின்ற

ன். அதற்குப் பொன்னைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டுவது என்றது முதலிய சுருதிகளால் அரசன் செய்யத்தக்க இராஜசூயமென்னும் வேள்வியில் அவேஷ்டியென்னும் பெயரினையுடைய வேள்விக்கருமத்தைமுன்னிலை யாக்கிக்கொண்டு "యదిబ్రాహ్మణో య జేత బార్హస్పత్యం మధ్యేనిధాయాహుతిం హుత్వాతమభిఘారయేత్, యదిరాజన్యఐన్ద్రం, యదివైశ్యో వైశ్వదేవం" = யதிப்பிராஹ்மணோய ஜேதபார்ஹஸ்ப்பத்யம் மத்யேநிதாயாஹுதிம்ஹுத்வாதமபிகாரயேதுயதிராஜன்யஐந்திரம்- யதிவை ஸ்யோவைஸ்வதேவம் (எ-து) வேதியன் வேள்விசெய்வதாயின் பிரகற்பதியைத் தெய்வமாகவுடையதை நடுவேவைத்து ஆகுதியை ஹோமஞ்செய்து அதனை அபிகரிக்கவேண்டும் (அபிகரித்தல்=நெய்வார்த்தல்) அரசனாயின் இந்திரனைத் தெய்வமாகவுடையதனை வைசியனாயின் விசுவேதேவர்களைத் தெய்வமாகவுடையதனை. எ-று. என்பது.

சமுசயம். அவேஷ்டி என்ற வேள்வியில், பொருந்தும் வேதியன் முதலியோர்க்கு நடுவே வைத்துக்கொள்ளும் விசேடத்தைக் குறித்த நிமித்தமேபயனாகவுடையதாய் அவர்கள் பெயர் கூறப்பட்டதோ? இல்லையேல், பொருந்தாதவர்களைப் பொருத்து விப்பதோ? அதுசித்திக்கும்பொருட்டு மூன்றுவருணத்தார்க்கும் இராஜசூயத்தில் அதிகார முடைமையோ? அல்லது, க்ஷத்திரிய னுக்கு மாத்திரமேயோ? அதன்பொருட்டு, "இராஜ" என்னு மொழி மூன்று வருணத்தினர்க்கும் பெயரா? அல்லது க்ஷத்திரியனுக்குமாத்திரமே பெயரா? அதன்பின்னரும் "இராஜ" என்னு மொழி இராச்சிய யோக்கியதையே நிமித்தமாக வுடையாதா? அல்லது க்ஷத்திரியத்தன்மையையே நிமித்தமாகவுடையதா? என்பது க்ஷத்திரியத்தன்மை பிறப்பால் அம்மரபுடைமை.

பூருவபக்ஷம். "இராஜ" என்னுமொழி இராச்சிய யோக்கியத்தையே நிமித்தமாகவுடையதாம். சான்றோராட்சியுடைமையினாலும், உலகமுழுவதும் வழங்கும் வழக்குடைமையாலும், மறுக்கப்படா திருத்தலினாலும் என்றுகொள்க. பிறப்பாலாய க்ஷத்திரியத்தின்மையையே நிமித்தமாகவுடைய தென்பதுகூடாது. இழிசனருள் வழங்குதலுடைமை சான்றோ ராட்சியினும் ஆற்றலற்ற தாதமா



தலினாலும், தமிழ் நூலுடையாரால் மறுக்கப்பட்டிருத்தலினாலும், அவரல்லாத வினையருள்ளும் ஆட்சியில்லாமையானும் என்க.

இராச்சியத்தை யுடையவனே இராஜன் என்பதற்குத் தமிழ்வழக்கு "வேடர்க்கதிபதி நாகனென்பான்" எ-ம், "வேடர்தங் கோமானாகன்" எ- ம், "மைந்தனையீண்டழைத்து நுங்கள் வளையாட்சியருளென்றார் மகிழ்ந்து வேடர்." எ-ம், குறுநிலமன்னர், வேளிர்குலத்தரசு, காடவர்கோன், குறும்பரசர், மலாடர்கோமான், எ-ம், "அடிசேர்முடியினராகி யரசர்கடாந்தொழ, இடிசேர் முரசங்கண் முற்றத்தியம்ப விருந்தவர், பொடிசேர் துகளாகப்போவார்" எ-ம், "உயர்குலமுமெல்லாந் திருமடந்தை யாம்போதவளோடுமொகும் அவள்பிரிந்து போம்போ தவளோடும்போம்." எ-ம், கூறுப.. "திருவுடைமன்னரைக் காணிற் றிருமாலைக்கண்டேனே யென்னும்." என்பதுமது.

இனி அங்குள்ள, இராச்சிய சம்பந்தத்தினால் மூன்றுவருணத்தாரும் அரசனே யாகின்றனர், "இராச்சியம்" என்னும்மொழியோ? வழக்கினால் தேயத்தின் காப்பினிடத்தே செல்லுகின்றது. அரசனுடையசம்பந்தத்தைக் குறித்து நிற்பதில்லை. ஆயின் "కర్మణి" (கர்மணி) என்னுஞ் சூத்திரமதிகாரமாக, "పత్యంశపురోహితాదిభ్యో యక్" (பத்தியம்ஸ புரோஹிதா திப்யோயக்கு) என்ற சூத்திரத்தால் "యక్" (யக்கு) என்ற பிரத்தியயம் வியாகரணத்துட் கூறப்பட்டுள்ளது. அக்கணத்துள் "இராஜம்" என்ற மொழியும் கூறப்பட்டது. (எனவே, அதிபதி யென்பது கருமப் பொருளில் ஆதிபத்தியம். எ-ம், புரோகித என்னு மொழிகருமப் பொருளில் அவ்வாறு "யக்கு" வந்து பௌரோகித்தியம் என்றாற்போல கூட்டத்துள் கூறப்பட்ட "இராச" மொழியும் கருமத்தில் "யக்கு" வந்து இராச்சியம் என முடிந்தது என்றபடி). இந்நூலு மிருதியாமாகவே, உலகவழக்கினும் செய்யுள்வழக்கு வலியதாமாதலின் இராஜசம்பந்தம் இராச்சியம் என்னும் மொழியாக்கத்திற்கு நிமித்தமாமே எனில்? அற்றன்று, சொற்களின்பொருளை நிச்சயிப்பதற்கு உலகவழக்கே யளவையாமாதலின். மிருதி = செய்யுள் வழக்கினுக்கு மதுவே காரணமாம் அன்றி, வேறல்ல. இராச்சியமுடையவனுக்கு இராஜன் என்னும் வழக்குடைமையானும் மேற்கூறிய வகையானும் இராச்சியமென்னு மொழியாக்கத்திற்கு இராஜனென்னு

மொழிச் சம்பந்தங் காரண மாதலாலும் "இராஜா, இராச்சியம்" என்னு மிவ்விரண்டனுள் இராஜ மொழிக்கே சுதந்தரமுடைமை யாகின்றது. அதனைப்பற்றி எழுந்த வியாகரணச் சூத்திரவிதி சொற்களின் வழுவையும் வழுவின்மையினையும் விளக்குதன்மாத்திரையே வந்ததென்று அதற்குப்பொருள் கூறவேண்டும். அதனால் மூன்றுவருணத்தாரும் "இராஜா" என்னு மொழியால் கூறத்தக்கவராய் "இராஜசூய யாகத்தில்" பொருத்தமுடையவர்களா யிருத்தலின் சுருதியில் அவர்கள் பெயர் கூறப்படுவது "బార్హస్పత్యం" (பார்ஹஸ்பத்திய)முதலியவற்றை நடுவே வைப்பது நிமித்தமாக வுடையதே சம்பந்தமாய் நேர்ந்தது. "యది" (யதி) = ஆனால் = ஆனபக்ஷத்தில், என்ற மொழியை "இராஜா" என்றமொழிக்கு இராச்சிய சம்பந்தமென்னு நிமித்தமுடைய தென்பதற்குப் பிரமாண முடையதாகின்றது. அங்ஙனமல்லாக்கால் "பிராமணன் முதலிய மொழிகள் ஆண்டுவாராவன்றே? "యది"(யதி)-என்ற மொழியைஆண்டு கூறியிருப்பதற்கும் நியாயமில்லாது ஒழியும். (எனவே, வேதியன் இராஜசூயம் செய்தால் என்றமொழியினால் வேதியன் அரசனால் என்றிவ்வாறு தோற்றுகின்ற தென்பது கருத்து). வியாகரண மிருதிக்காயினும் வைதிகவழக்குச் சிறந்தது, ஆதலின் விடயவாக்கியத்துள் கூறப்பட்ட பிராமணன் என்றதுமுதலிய மொழிகள் காரணப் பொருளினவாம். என்பது.

சித்தாந்தம். வேதத்துள் கூறிய மாத்திரையானே ஈண்டு வரம்பு செய்வதற்கு அமையாதன்றே? வேறுவகையால் வரம்பு பெறுதலுடைமையின். "రాజానమభిషేచయేత్" (ராஜா நமபிஷேசயது) = இராஜனுக்குப் பட்டாபிடேகஞ் செய்யவேண்டும் என்ற இவ்வபிடேக விதிவாக்கியத்துள், அரசுவருவதற்கு முன்பாகவே இராஜா என்னும்மொழி பட்டாபிடேகத்திற்குத் தகுதியுடைய க்ஷத்திரியனுக்குக் கூறப்பட்டுள்ளது. அதனால் இராஜா என்னுமொழிரூடம் = வழக் காற்றலுடையதென்றே கொள்ளப்படுகின்றது, இனி "యది" (யதி)-என்பதுவும் அவ்வியயமாதலின் எங்ஙனமே யாயினும் வியாகரண நியமத்திற்கு வாதையில்லாதபடி பொருட்சம்பந்த மாகின்றது, "இராஜா" என்னுஞ் சொல் வியாகரணத்தால் விவகரிக்கப்படுதலினால் சுதந்தரமுடையதல்லது இராச்சிய நிமித்தத்தினால் வந்ததன்று. இராஜமொழிக்கு



க்ஷத்திரியன் என்று பொருள்கொள்ளும் வழக்கினுக்குக் காரணமில்லை என்பது கூடாது. இராச்சிய முடைமையாலன்று பிறப்பியற்கையானே "இராஜா" என்ற மொழி க்ஷத்திரியனுக்கே என்பதற்குத் தமிழ்நூல வழக்குடைமையே காரணமாக விருக்கின்றது. "అతో నయథార్థత్వే స్మరణస్యప్రమాణమస్తి" (அதோநயதார்த் தத்வே ஸ்மரணஸ்ய பிரமாணமஸ்தி) வழக்கு உண்மையே யானவழி மிருதி பிரமாணமாகாது. (எனவே, உண்மையான வுலகவழக்குச் செய்யுள் வழக்கினுஞ் சிறந்ததென்பது கருத்து). என்று, சான்றோராகிய அவ்வியாகரண வாசிரியரானே கூறப்பட்டிருத்தலின், உலகவழக்கு ஈண்டுச் சம்பந்தப்படுகின்றது. வழக்கு என்பது எப்பொருளை யெம்மொழியாற் கூறிவந்ததோ? அது பொதுவாகிய மயக்கவகையால் மருவியதற்குத் தடையுண்டாகின்றது. ஆதலின், "இராஜா" என்றமொழியின் காரணசம்பந்தத்தானே "இராச்சியம்" என்னு மொழியாக்கப்பட்டது. சுதந்தரமொழி = வேறுகாரணத்தால் தோன்றாத சொல்லாகிய இராஜா என்றது பிறப்பால் க்ஷத்திரியனானவனைக் குறிக்குஞ் சொல்லாகின்றது. மேற்கூறிப் போந்தசுருதி மொழியாகிய விடயத் தொடர் மொழியால் கூறப்பட்டுள்ள வேதியன் முதலியமொழிகள் அவேஷ்டியென்ற வேள்விக்கருமத்தில் அவ்வேதியன் முதலியோர்க்கு இல்லாதபேற்றைப் பெறுவிக்கின்றது. என்பது சித்தாந்தம்.

இராஜன் என்பது மரபுபற்றிய க்ஷத்திரியனுக்கே யெனத் தமிழினுள்ளும் "அரசிளங் குமரன்போது மணிமணிமாடவீதி" எ-ம், "உரிமையரசர் தொழில்புரியார்" எ-ம், "வளநாடெல்லாங் கவர்ந்து முடியொன்று மொழியவரசர் இருவெல்லாமுடையராயினர்." எ-ம், செம்பியர்தந் தொல்லை நீடுங்குலமுதலோர்க் கன்றிச் சூடோ முடியென்று" எ-ம், "பார்த்திபன்றென்னன் பாண்டியர்க்காகவே." எ-ம், "நாவலந்தீவகத்தினுக்கு நாதரான காவலரேயேவி விடுத்தாரேனுங் கடவமலோம்." எ-ம், "முடியாலுலகாண்ட மூவேந்தர்முன்னே" எ-ம், "வேந்தராயுல காண்டறம்புரிந்து" எ-ம், "திருவும்வண்மையுந் திண்டிறலரசுஞ் சிலந்தியார்செய்த செய்பணி கண்டு, மருவுகோச்செங்க ணான்றனக்களித்த வார்த்தை கேட்டு." எ-ம், "தெருண்டவாயிடைநூல் கொண்டுசிலந்தி சித்திரப்பந்தர் சிக்கெனவியற்றச் சுருண்ட செஞ்சடை யாயதுதன்னைச் சோழனாக்

கிய தொட்டர்ச்சிசண்டு அடியேன்" எ-ம், "வேந்துவினையியற்கை
வேந்தனொரீஇய, வேளொர்மருங்கினு மெய்தி—னுடைத்தே"
எ-ம், பொருளதிகாரம் மரபியன் முதவியவுறறுள்ளும் வருவன
காண்க.

அவ்வாறே யீண்டும் "இராஜா" என்றமொழி க்ஷத்திரிய
னுக்கே உரியபெயராகின்றது.

இன்னுமித் தென்மொழி வடமொழி விசாரம்பற்றி
யருட்சிவர் சே.மூ நாலுமியற்றிவருதலா லாண்டுதெளி
வுறக்காணப்படுமென்க.

ஆகவே, யிவ்வேளாளருள்ளும், சைவர்கள், தேவா
ரங் திருவாசகமுதலிய திருமுறைத்தமிழ்மறைகளைப் பல,
வாற்றாலும் முறைப்படியோதி சுபாசுப கருமங்களி
லும் நித்தியாநுட்டான ஒழுக்கங்களிலும் பாராட்டு
மாறு தெற்றென்றுணரப்படுமென்க. இதனையன்றென
மறுப்பாராற்றலாற்றப் படுமென்க. அல்லதூஉம், அத்
தியயனஞ் செய்விப்போன் உபாத்தியாய னென்றாற்
போலுந் தேவார முதலியவற்றைச் சுரவடிவமாகிய
பண்ணோடும் ஓதிவிப்போர் "ஓதுவார்" என இன்றும்
வழங்கும் வழக்குமுணர்க. அற்றேல், இம்மரபினர் வட
மொழித்திருமறையோதல் வழக்கம் மறுத்தவாறென்னெ
னின்? வேறுதிசைமொழியாமாதலினும், அதுவழங்குங்கால்
சுரம் மாறுபாடாகாமை "மொழிவதறமொழி" என்பது
மூதுவராணையா மாதலினும், பொதுமையிற் பயில்வா
ரன்றி ஓதலாகாவென்னும் நியமம்பற்றியன்று. சூத்திரர்
ஓதலாகாதென்னும் அந்நியமம் தென்மொழி மறைக்
கண்ணுமுள்ள வென்பதனை நல்லாசிரியராலுணர்க.
ஆதலால் வேதமோதலிவர்க்கு என்றுமுளதென்பதே தே
ற்றம். அற்றேல்,

செய்யாமொழிக்குந் திருவள்ளுவர்மொழிந்......த
பொய்யாமொழிக்கும் பொருளொன்றே, செய்யா



வதற்குரியாரந்தணரே யாராயினே............னை
இதற்குரியார்ல்லாதாரி.............................ல்.

என், சங்கத்துட் புலவராகிய வெள்ளிவீதியார்
கூறிய தென்னையெனின் ? சாதித்தலைமைச் சிறப்புடைமை
பற்றி வேதியரைக்கூறிஏனைய அரசர்வைசியரையுபலக்கண
த்தாற்றழுவியவாறு "கோளில் பொறியிற் குணமிலவே
யெண் குணத்தான் றாளைவணங்காத்தலை" என்றாற்போல.
அல்லதூஉம், ஓதுவித்தற் சிறப்புடைமைபற்றிக் கூறினா
ரென்பது மொன்று. அங்ஙனம் பொருள் கொள்ளாக்
கால் முதனூற் கருத்தொடுமுரணும் என்றொழிக.

## உபவீதம்.

அங்ஙனமாயின் இவர்கட்கு உபவீதம் விடாது
பூணுமாறு என் வழக்கத்தொழிந்ததெனில்? அற்றன்று,
இருடிசிங்க முனிவர், ஆடையாலாயினும் பூணநூலைத்
தரிக்கலாம், ஆடைகிடையாவழி மூன்றிழை நூலாலாயி
னுந் தரிக்கலாம் என்று கூறினர். வருமாறு.

(பராசரம். உ-ம் அத். ௩௯-வது பக்கம்.)

శ్లో॥ అపివావాససాయజ్ఞోపవీతదారణం
కుర్యాత్తదభావేత్రివృతాసూత్రేణ॥

அபிவாவாஸஸாயக்ஞோபவீததாரணங்
குர்யாத்ததபாவேத்திரிவிரதாஸூத்ரேண.

இவ்வண்ணமே ஆடையையே பூணுநூலாகக்கொ
ண்டு இன்றுந்தரித்துவரும் வழக்கமுள்ளது. ஆதலால்,
அவர் உபவீதத்தினை விடாதொழியும் வழக்குபாண
டையதென்க.

ஆயின் ஏனையவேதியராதியர் அங்ஙனஞ் செய்யும்
வழக்கமேனில்லையென்னின் ! நன்றுவினாவினை, மநு, பருத்

தியால் நூற்கப்பட்டு முப்புரியுடைய மூன்றிழைகூடி மேனின்றும் கீழ்தொங்கத்தக்க பூணநூல் வேதியனுக்கும், சணல்நூலாற்சமைந்தது அரசனுக்கும், கம்பளிக்கயிற்றாற்செய்தது வைசியனுக்கும் ஆம். கம்பளி எ-து யாட்டின்மயிர்.

மநு. (பாரசரம். உ-ம் அத். ௩௮-வது பக்கம்.)

శ్లో॥ కార్పాసముపవీతంస్యా ద్విప్రస్యోర్ధ్వవృతంత్రివృత్ ।
శాణసూత్రమయంరాజ్ఞో వైశ్యస్యావికసూత్రకం ॥
கார்ப்பாஸமுபவீதம்ஸ்யாத்
விப்ரஸ்யோர்த்வவிரதந்திரிவிரது
ஸாணஸூத்ரமயம்ராக்ஞோ
வைஸ்யஸ்யாவிகஸூத்ரகம்.

பருத்திநூல் வேதியனுக்கு, பட்டுநூல் அரசனுக்கு, யாட்டுமயிர்நூல் வைசியனுக்கு, ஆம். என்று. பைட்டீநசி. கூறினர்.

శ్లో॥ కార్పాసముపవీతంస్యాద్బ్రాహ్మణస్యకౌశేయం
రాజన్యస్యావికంవైశ్యస్య ॥
கார்பாஸமுபவீதம்ஸ்யாத்
பிராஹ்மணஸ்யகௌஸேயம்
ராஜந்யஸ்யாவிகம் வைஸ்யஸ்ய.

பருத்தி, பட்டு, பசுவால்மயிர், சணல், மரநார், வைக்கோல் முதலியவற்றுள் கிடைத்ததனுல் பூணநூல் செய்து இருபிறப்பாளர் எப்போதுந் தரிக்கலாம். என்று தேவலர் கூறினர்.

శ్లో॥ కార్పాసక్షౌమగోవాలశణవల్కతృణాదికం ।
సదాసంభవతాకార్య ముపవీతంద్విజాతిభిః ॥
கார்ப்பாஸக்ஷௌம கோவால-ஸணவல்கத்ருணாதிகம்
ஸ்தாஸம்பவதாகார்ய-முபவீதம்திவிஜாதிபி :



என்றுவிதித்த வண்ணம் இக்காலத்துள் சணல்நார், யாட்டின்மயிர்க்கயிறு போல்வன ஒருவருந்தரியாதொழிந்தகாரணமென்னை? அவ்வேதியர் முதலியோர் விதிப்படி மான்றோல்முதலிய போர்த்தலும் தண்டந்தாங்கலும் பிறவொழுக்கமும், காலவியற்கை இல்லாமை முதலிய பலகாரணத்தாற் றவறியதுபோல இதுவுந்தவறிற்றென்க. இதனை விரிக்கிற்பெருகும்.

அற்றேல் மநு, தேவலர், காத்தியாயனர், கௌதமர், பிருகுமுதலியோரே நூலாற் பூணநூல் தரிக்கவென்றதென்னெனில்? ஆரணியத்துள்ள முனிவருக்கும் அவர்பால் வேதமோதும் மூவருணப்பிரமச்சாரியர் முதலியோர்க்கும் அவ்வாறுய பிற ஆச்சிரமத்தார்க்கும் ஆடைதேடுதல் முயற்சியுழைப்புநோக்கி, அவர்வைதிககருமகாலம் வீண்கழியாமையின் பொருட்டு நூலும், போர்வைக்குத்தோலும், உடைக்குமரவுரி நார்ச்சீலையுமாக, விதித்தவாறென்க. ஆகவே, நூற்றரித்தல் கௌணவிதி, ஆடைதரித்தல்முக்கியவிதி. அம்முறையால் வைசியர்தரிக்கத்தக்கன கம்பளம் அல்லது சாலுவை அம்முறையே இன்றும் வேளாளர்வைதிக கருமங்களி லெல்லாம் தரித்தல் வழக்குள்ளது.

நூலாற்றரித்தல் கௌணமல்லா விடத்து, சூத்திர கருமமாகிய சிற்பத்தொழில் செய்வார்க்கும், சூத்திரரும் விற்கலாகா எண்ணெய்முதலிய விற்பார்க்கும், மற்றும் மாகதர், மல்லர், காணர், தச்சர், தையற்றொழில்முதலிய செய்யும் ஏனைய இழிந்த சங்கரவருணர்க்கும், பல சில நாளாகப் பருத்திப் பூணநூல் வழங்கிய வாறென்னையெனவினுவிமறுக்க.

அதுவுமன்றி சந்நியாசவிதி கூறவந்தவிடத்து, இப்பூணநூலினைப்பற்றி பாராசரமாதவீயம் - உ-ம் அத்தியா

யம் ஜாபாலசுருதியில், ஜனகருக்கும் யாஞ்ஞவற்கியருக்கும் நடந்தவாது கூறுமிடத்துப் பூணூல் விடுதலைமறுத்துப்பின் உடன்பாடு கூறப்பட்டது. வருமாறு-ஓ யாஞ்ஞவற்கியரோ! உம்மைவினவுகின்றேன். எக்கியோபவீதம் இல்லாதவன் எங்ஙனம் வேதியனாவான்? என, அந்த யாஞ்ஞவற்கியர் கூறுவர். இவனுக்கு ஆன்மாயாவனோ! அவனே எக்கியோபவீதமாம்.

(பராசரம். உ-ம் அத். உ0௫-வது பக்கம்.)

శ్లో॥ పృచ్ఛామిత్వాయాజ్ఞవల్క్య యజ్ఞోపవీతీకథంబ్రాహ్మణఇతి ।
సహోవాచయాజ్ఞవల్క్య ఇదమేవాస్యతద్యజ్ఞోపవీతం
యఆత్మేతి ॥

பிரச்சாமித்வாயாஞ்ஞவல்க்யா
யக்ஞோபவீதீகதம்பிராஹ்மண இதி
ஸஹோவாசயாஞ்ஞவல்கிய
இதமேவாஸ்யதத்யக்ஞோப்வீதம்-ய ஆத்மேதி.

(பிப்பலாதசாகைச் சுருதி, பராசரம். உ0எ-வது பக்கம்.)

సశిఖంవపనంకృత్వా బహిస్సూత్రంపరిత్యజేత్ ।
ஸசிகம்வபநம்கிருத்வா பஹிஸ்ஸூத்ரம்பரித்யஜேத்
యదక్షరంపరంబ్రహ్మతత్సూత్రమితిధారయేత్ ।
யதக்ஷரம்பரம்பிரஹ்மதத்ஸூத்ரமிதிதாரயேத்
సూచనాత్సూత్రమిత్యాహుస్సూత్రంనామపరంపదం ।
ஸூசநாத்ஸூத்ரமித்யாஹுஸ்ஸூத்ரம்நாமபரம்பதம்
తత్సూత్రంవిదితంయేనసవిప్రోవేదపారగః ।
தத்ஸூத்ரம்விதிதம்யேநஸவிப்ரோவேதபாரக:
యేనసూత్రమిదంప్రోతంసూత్రేమణిగణాఇవ ।
யேனஸூத்ரமிதம்ப்ரோதம்ஸூத்ரேமணிகணாஇவ
తత్సూత్రంధారయేద్యోగీయోగవిత్తత్వదర్శనః ।
தத்ஸூத்ரம்தாரயேத்யோகீயோகவித்தத்வதர்ஸந:



బహిస్సూత్రంత్యజేద్విద్వాన్యోగముత్తమమాస్థితః ।
பஹிஸ்ஸூத்ரந்தியஜேர்வித்வாந்யோகமுத்தமமாஸ்தித:
బ్రహ్మభావమిదంసూత్రంధారయేద్యస్సచేతనః ।
பிரஹ்மபாவமிதம்ஸூத்ரம்தாரயேத்யஸ்ஸசேதந:
ధారణాత్తస్యసూత్రస్యనోచ్ఛిష్టోనాశుచిర్భవేత్ ॥
தாரணாத்தஸ்யஸூத்ரஸ்ய நோச்சிஷ்டோநாஸுசிர்பவே[த்
సూత్రమంతర్గతంయేషాంజ్ఞానయజ్ఞోపవీతినాం ।
ஸூத்ரமந்தர்க்கதம்யேஷாம்க்ஞாநயக்ஞோபவீதிநாம்
తేవైసూత్రవిదోలోకేతేచయజ్ఞోపవీతినః ।
தெவைஸூத்ரவிதோலோகேதெசயக்ஞோபவீதிந:
జ్ఞానశిఖినోజ్ఞాననిష్ఠాజ్ఞానయజ్ఞోపవీతినః ।
க்ஞாநஸிகினோக்ஞாநநிஷ்டாக்ஞாநயக்ஞோபவீதிந:
జ్ఞానమేవపరంతేషాంపవిత్రంజ్ఞానముచ్యతే ।
க்ஞாநமேவபரந்தேஷாம்பவித்ரம்க்ஞாநமுச்யதே
అగ్నేరివశిఖానాన్యాయస్యజ్ఞానమయీశిఖా ।
அக்கிரேவஸிகாநாந்யா யஸ்யக்ஞாநமயீஸிகா
సశిఖీత్యుచ్యతేవిద్వాన్నేతరేకేశధారిణః ।
ஸஸிக்கீத்யுச்யதேவித்வாந்நேதரேகேஸதாரிண:
కర్మణ్యధికృతాయేతువైదికేబ్రాహ్మణాదయః ।
கர்மண்யதிக்கிருதாயேதுவைதிகேப்ராஹ்மணாதய:
ఏభిర్ధార్యమిదంసూత్రంక్రియాంగంతద్ధివైస్మృతం ॥
எபிர்த்தார்யமிதம்ஸூத்ரங்கிரியாங்கந்தத்திவைஸ்மிரு[தம்
శిఖాజ్ఞానమయీయస్యఉపవీతంతుతన్మయం ।
ஸிகாக்ஞாநமயீயஸ்யஉபவீதந்துதந்மயம்
బ్రాహ్మణ్యంసకలంతస్యఇతిబ్రహ్మవిదోవిదుః ।
பிராஹ்மண்யம்ஸகலந்தஸ்ய இதிப்பிரஹ்மவிதோவிது:
ఇదంయజ్ఞోపవీతంతుపరమంయత్పరాయణం ।
இதம்யக்ஞோபவீதந்துபரமம்யத்பராயணம்

విద్వాన్యజ్ఞోపవీతీస్యాద్విజ్ఞాస్తంయజ్వసంవిదుః ।

வித்வாங்யக்ஞோப்வீதீஸ்யாத்விக்ஞாஸ்தம்பஜ்வநம்விது

குடுமியோடுக்ஷவரஞ்செய்துக்கொண்டு வெளியிலிட்டபூணநூலைக்கழற்றி யெறியவேண்டுவது. நாசமற்ற பிரம மெதுவோ? அதுஸூத்திரம்(நூல்)என்றுதரிக்கவேண்டும். சத்தியத்தைக் காட்டுதலினாற்பரமபதமே ஸூத்திரமெனப்படும். அந்தச் சூத்திரத்தினை யறிந்தவனே வேதமுடிபுணர்ந்தவன். நூலில் மணிகளைக்கோத்தாற்போலுா ஏதனு லிவ்வுலகு கோக்கப்பட்டுள்ளதோ அந்த நூலினை யோக முணர்ந்து *தத்துவத்தினை நோக்கும் யோகிதரித்தல்வேண்டும். அறிவறிந்து மேலான யோகத்தினை அனுட்டித்திருப்பவன் வெளிச் சூத்திரத்தினை யொழிக்க வேண்டும். பிரமபாவனையாகிய இந்தச்சூத்திரத்தினை யறிவுடையோன் தரிப்பன். அந்தச்சூத்திரனைத் தரிப்பதனால் எச்சில் அசுத்தங்கலவாது. யாவனொருவனுள்ளே யிந்த ஞானசூத்திர முண்டாயிருக்குமோ? அவனே சூத்திர முணர்ந்தவனும் உபவீதமுடையவனுமாம். அவனுக்கு ஞானமே குடுமி, ஞானமே அழிவற்றசெல்வம் (நிட்டை) ஞானமே பூணநூல், ஞானமே மேலானது, ஞானமே சுத்தமானது, ஞானுக்கினியே குடுமியல்லாது வேறல்ல. யார்குடுமி ஞானமயமானதோ? அவனே குடுமியையுடையோன். மயிர் சுமந்திருக்கும் ஏனையரல்லர். வைதிக கருமத்தில் அதிகரிக்கப்பட்ட வேதியர் முதலியோரால் கரும அங்கமாகிய வெளிப் பூணநூல் தரிக்கத்தக்கது. ஞானமயமாகிய குடுமியும் ஞானமயமான பூணநூலு முடையவன் முற்றும் நிரம்பிய அந்தணத் தன்மை யுடையோனும் என்று பிரம முணர்ந்தவர்களறிவார்கள். இந்தவுபவீதமே சிறந்த மேலான நிலைமையாக விருக்கின்றது. ஞானமே வேள்வி, ஞானமுடை



யோனே சோமயாஜீ என்றுணர்வர் எனவுங் கௌஷீதகிப் பிராமண மென்னும் சுருதியில் வினவிடைகளால் அதுவிளங்க கூறப்பட்டுள்ளது.

(பராசரம். உ-ம் அத். உக0-வது பக்கம்.)

కిమస్యయజ్ఞోపవీతంకథంచాస్యోపస్పర్శనం

கிமஸ்யயக்ஞோபவீதங்கதஞ்சாஸ்யாபஸ்பர்ஸநம்.

இவனுக்குப்பூணநூல் ஏன்? குடுமி ஏன்? ஆசமனம் எவ்வாறு? என்று (இதுவினு)

ఇదమేవాస్యయద్యజ్ఞోపవీతంయదాత్మధ్యానంవిద్యాశిఖా ।

இதமேவாஸ்யயத்யக்ஞோப வீதம்யதாத்மத்யாநம் வித்யாஸிகா.

தன்னை எண்ணியறிதலாகிய விதவேயிவனுக்குப் பூணநூல். அறிவே குடுமி. (என்பன முதலியவிடை) எனவும், அவ்வுபவீத மென்பதனுண்மை கூறுமாறு காண்க. அல்லதூஉம், இப்போது அவ்வுபவீதத்தினைத்தரிக்கும் மந்திரமாயுள்ள பிரமமோபநிஷதத்தில் நூல்விதித்தபடி யென்றுமேலையவுண்மையே கூறிற்று.

(பராசரம். ௨-ம் அத். ௨0அ-வது பக்கம்.)

அல்லதூஉம் வியாசஸ்மிருதியில்.

యజ్ఞోపవీతంకర్మాంగంవదంత్యుత్తమబుద్ధయః ।
ఉపకుర్వాణకాత్పూర్వంయత్లోకేనదృశ్యతే ।
యావత్కర్మాణికురుతేతావదేవాస్యధారణం ।
తస్మాదస్యపరిత్యాగః క్రియతేకర్మభిస్సహ ।
అగ్నిహోత్రవినాశేతుజుహ్వాదీనియథాత్యజేత్ ।
యథాచమేఖలాదీనిగృహస్థాశ్రమవాంఛయా ।
పత్నీయోక్త్రంయదేష్ట్యంతేసోమాంతేచయథాగ్రహాన్ ।
తద్వద్యజ్ఞోపవీతస్యత్యాగమిచ్ఛంతియోగినః ।

யக்ஞோபவீதங்கர்மாங்கம் வதந்தியுத்தமபுத்தய:
உபகுர்வாணகாத்பூர்வம் யதோலோகேநதிருஸ்யதே
யாவத்கர்மாணிகுருதேதாவ தேவாஸ்யதாரணம்
தஸ்மாதஸ்யபரித்யாக:கிரியதேகர்மபிஸ்ஸஹ
அக்நிஹோத்ரவிநாஸேதுஜ-ஹ்வாதீநியதாத்யஜேத்
யதாசமேகலாதீந்கிரஹஸ்த்தாஸ்ரமவாஞ்சயா [ஹோாங்
பத்நீயோக்த்ரம்ய தேஷ்டயம்தேஸோமாந்தெசயதாகிர
தத்வத்யக்ஞோபவீதஸ்யதியாக மிச்சந்தியோகிந:

மேலான அறிவினையுடையோர் பூணநூலினைக்கரும அங்கமென்று கூறுகின்றனர். கருமம் உபகாரஞ்செய்வது. அதற்குமுன் உலகத்தில் உபவீதங் காணப்படுகிறதில்லை. கருமஞ்செய்துகொண்டு இருக்கும் வரையில் இவ்வுபவீதத்தினைத் தரிக்கவேண்டும். ஆதலால், கருமத்தோடு இதுவும் விடப்படும். அக்கினி ஹோத்திரம் முடிவினையடையும்போது ஹோம பாத்திரங்களை யெவ்வாறு விட்டுவிடுவானோ? இல்லறவிச்சையால் முஞ்சிப் புல்லரைஞாண் முதலியவற்றினை யெவ்வாறு விடுவானோ? பத்தினிக்குக்கட்டிய "యోక్త్రం" (யோக்திரம்) என்னுந் தருப்பைக்கயிற்றினை இஷ்டிக்கரும் முடிந்தபின்பு எவ்வாறு ஒழித்துவிடுவானோ! ஸோமயாகமுடிவில் கிரகம் என்னு மரப்பாத்திரங்களை எவ்வாறு விடுவானோ! அவ்வாறே சந்நியாச யோகமுடையவர்கள் உபவீதத்தை யொழிப்பதனை விரும்புகின்றனர்,' என்று கூறப்பட்டுள்ளது. ஆதலால், பூணநூல் கருமாங்கம், கருமம் உபகாரம்அதற்குமுன் உலகத்தில்உபவீதங்காணப்படுவதில்லை. கருமஞ் செய்துகொண்டிருக்கும் வரையில் இவ்வுபவீதத்தினைதரிக்கவேண்டும். ஆதலால், கருமத்தோடு இதுவும் விடப்படும், என்று பொதுவிதி கூறிப்பின்பு அவ்வாறே சந்நியாசியோக முடையவர்கள் உபவீதத்தை யொழிப்பதனை விரும்புகின்றனர், என்றுசந்நியாசவிதிவிதித்தனர்.



இன்னுமிவ்வாறே சுருதி முதலியவற்றுள் குடுமி, தண்டம், கமண்டலம், ஹோமபாத்திரம், முதலியவற்றிற்கும், வேள்வியாதி கருமங்களுக்கும், உண்மை உரை கூறியுள்ளன. ஈண்டு விரிக்கிற்பெருகும். ஆதலால் ஏனையர் போல இவ்வேளாளர் பூணநூல் எந்நோமுந்தரியாத தேன்? என்பது ஒத்தவினுவல்லவென்க. இக்கருத்தை யவத்தைவயத்தான் மறந்து கருமகாலத்திற் கொண்டு மற்றைக்காலத்துப் புரோகிதர்பால் வைத்தார் எனமருண்டு கூறினருமுளர்; அதுமரபன்றென்க.

---

## வேள்வி.

இனி வேள்வியாவதென்னை? யது வேளாளர் அனுஷ்டிப்பினுண்டோவெனின்?

தைத்திரீயப்பிராமணம்.

(பாராசரம். முதலாவது-அத், சகஅ-வது பக்கம்.)

యత్స్వాధ్యాయమధీయీతై
కామప్యృచంయజుస్సామ
వాతద్బ్రహ్మయజ్ఞస్సంతిష్ఠతే.

யத்ஸ்வாத்யாயமதீயீதை
காம்ப்பிரயசம்யஜுஸ்ஸாம
வாதத்பிரஹ்மயக்ஞஸ்ஸந்திஷ்டதே.

நன்றாக வேதமோதுதலே பிரம வேள்வியாம். கடைமுறை ஒரு இருக்குமந்திரமாயினும் ஒரு யஜுர் மந்திரமாயினும் ஒருசாமமந்திரமாயினும் விதிப்படி நாடோறும் ஓதுதலாகிய பாராயணஞ் செய்வதே பிரமவேள்வி யென்னப்படும்.

யாஞ்ஞுவற்கியர்

(பாராசரம்- முதல்-அத், சசகூ-வது பக்கம்.)

శ్లో॥ వేదాథర్వణపురాణాని ఇతిహాసానిశక్తితః ।
జపయజ్ఞప్రసిద్ధ్యర్థం విద్యాంచాధ్యాత్మికీంజపేత్॥

வேதாதர்வணபுராணுநி இதிஹாஸாநிஸக்தித:
ஜபயக்ஞபிரஸித்யர்த்தம்
வித்யாஞ்சாத்யாத்மிகிஞ்ஜபேது.

மூன்று வேதங்களையும், அதர்வணத்தையும், புராணங்களையும், இதிகாசங்களையும், ஞானவித்தையையும், பிரமவேள்வி சித்திக்கும்படி செபிக்கவேண்டும்.

தக்ஷர். (பராசரம். முதல், அத், சருரு-வது பக்கம்)
పంచ సేచ తథా భాగ సంవిభాగో యథార్హతః।
పితృదేవమనుష్యాణాం కీటానాంచోపదిశ్యతే॥

பஞ்சமேசததாபாகே-ஸம்விபாகோயதார்ஹத:
பித்ருதேவமநுஷ்யாணும்-கீட்டாநாஞ்சோபதிஸ்யதே.

பகலின்-ரு-வது, பங்கில்-தென்புலத்தார் வேள்வி, தேவர்வேள்வி, மாநுட வேள்வி, பூதவேள்வி, செய்யத்தக்கதென்று முறைமைப்படி உபதேசிக்கப்படுகின்றது.

காத்தியாயனர்.
(பராசரம். முதல், அத், சகூகூ-வது பக்கம்.)
అధ్యాపనం బ్రహ్మయజ్ఞః పితృయజ్ఞస్తు తర్పణం
హోమోదైవో బలిర్భౌతో నృయజ్ఞోతిథిపూజనం
శ్రాద్ధంవాపి తృయజ్ఞస్స్యాత్పిత్రోర్బలిరథాపివా.
அத்யாபநம் பிரஹ்மயக்ஞ:
பித்ருயக்ஞஸ்த்து தர்ப்பணம்
ஹோமோ தேவோபலிர்ப்பூதோ
நரயக்ஞோதிதிபூஜனம்
ஸ்ராத்தம் வாபித்ருயக்ஞஸ்ஸியாத்
பித்ரோர்ப்பலிரதாபிவா.

வேதத்தை யோதுவித்தல்-பிரமவேள்வி.
தருப்பணமே பிதுர்வேள்வி.



ஹோமமே தேவவேள்வி.
பலிகொடுத்தலே பூதவேள்வி.

அதிதிகளைப் பூசிப்பதே மானுடவேள்வி என்பதாம். சிரார்த்தமும்-பிதுர்யாக மாகின்றது. தென்புலத்தார்க்குப் பலியீதலும் பிதுர்வேள்வியாம். இவற்றுள், நித்யகிரியை அபரகிரியைகளில் தேவ வேள்வியும், நித்திய கர்மங்களிலும் பூஜா காலத்தும் பிரம வேள்வியும், சந்தியாவந்தனங்களிலும் சிரார்த்தகாலங்களிலும் பிதுர் வேள்வியும், போஜனத்துக்குமுன் காகபலி முதலிய பூத வேள்வியையும், சதாகாலம் மானுடவேள்வியையும், வேளாளர் செய்து வருகிறார்கள்.—இதனை

தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கறுனென்றாங்
கைம்புலத்தாரோம்பறலை... ... ...

என நாயனாரும் சுருக்கிக்கூறினர்.

இந்த ஐம்பெரும் வேள்வியின் பிரயோசனம் யாதெனின்?

இயமன். (பராசரம் முதல், அத், சருஅ-வது-பக்கம்)
శ్లో॥ పంచసూనా గృహస్థస్య వర్తంతే హరహస్సదా।
ఖండినీ పేషిణీచుల్లి జలకుంభ ఉపస్కరః॥
பஞ்சஸூநாகிரஹஸ்தஸ்ய
வர்த்தந்தேஹரஹஸ்ஸதா
கண்டினீ பேஷிணீ சுல்லீ
ஜலகும்ப உபஸ்கர:

எ-து. இல்லறத்தானுக்கு ஒவ்வொரு பகலினும் ஐவகைச் சூனம் உள்ளது. அவை (க) கண்டினி (உ) பேஷிணி (ந) சுல்லி (ச) சலகும்பம். (ரு) உபஸ்கரம் அல்லது அபஸ்கரம் என்ற வைந்தும், சூனமென்று பெயராம். இவற்றை அவற்றவற்றின் காரியத்துள்ளே சம்பந்தப்படுத்துகின்ற வேதியன் ஒவ்வொரு தடவையும் பாவக் கட்டுக்குளகப்படுகின்றான். ஆதலால் இவ்வைந்தின் ஒழி

வார்சுத்தனுக்கும்பொருட்டு ஐவகைப்பெரும் வேள்வி கூறப்பட்டுள்ளன. சூனம் என்பது கொலைக்கிடம்.

(க) கண்டினி=முறித்தல்- அது-உலக்கை, உரல் அரிகருவி முதலிய கருவியாலாவது.

(உ) பேஷணி=அரைத்தல்-அது அம்மி முதலியவற்றாலாவது.

(ங) சுல்லி=அடுப்பு-அது அடுக்களையிடம்.

(ச) சலகும்பம்=நீர்க்குடம்-அது நீர் சோதிக்கும் ஆடைமுதலியன.

(ரு) உபஸ்கரம்=முறம், அல்லது சல்லடை முதலியபாட பேதத்தால் அப்ஸ்கரம் என்றது விளக்கும் அலகுமெழுகும் ஆடை முதலியன. இவைகள் உயிர்க்கொலைக்கு இடமாக விருக்கின்றன. இவை இல்லறத்தார் அனைவர்க்கும் நாடோறும் செய்யத்தக்க கருமங்கட்கு இன்றியமையாதன. இவற்றாலுண்டாகும் உயிர்க்கொலைப் பாவம் மனைத்தலைவன் ஒருவனைச் சேருமேயல்லது அக்குடும்பத்துள் ஏனையர்க்கு இல்லை.

இது பொது விதியால் வந்தது. அன்றியும் வைசியஸ்தோமம் என்ற சிறப்பு வேள்வியுமுண்டு. அதனை விரிநூலுட் காண்க.

## வைசியதருமம்.

(பராசரம் முதல், அத், ருஎஎ-வது பக்கம்.)

శ్లో॥ లాభకర్మతథారత్నం గవాంచపరిపాలనం।
కృషికర్మ చవాణిజ్యం వైశ్యవృత్తిరుదాహృతా॥

லாபகர்மததாரத்நங்-கவாஞ்ச பரிபாலநம்
கிருஷிகர்மசவாணிஜ்யம்-வைஸ்யவிருத்திருதாஹிருதா.

(இ-ள்.) வட்டிவாங்குதல், இரத்தினமுதலிய மணிச்சோதனை, பசுநிரைகளைக் காத்தல், உழுதல், கொள்ளல் விற்றலாகிய பண்டமாற்று, இவைகள் வைசியன் தருமமாகக் கூறப்பட்டது.

"లాభకర్మ" (லாபகர்ம)—இலாபத்தின் பொருட்டுச் செய்யுந் தொழில். எனவே, கடன் கொடுத்து வட்டிவாங்குதல், நெல்முதலிய தானியங்களைக் கொடுத்து நெல் வாங்குதல் முதலியன. (இது, தலவாசி, நாங்குயென விக்காலத்து வழங்குகின்றது.)

"రత్నం"(ரத்னம்)—வச்சிரம், நீலம், மாணிக்கம்=செம்மணி, மரகதம், கோமேதகம், வைடூரியம், புட்பராகம், பவளம், முத்து முதலியன. இம்மொழி இலக்கணையால் அவற்றைச் சோதித்தல், விற்றல் வாங்கல் என்ற பொருளைத் தருகின்றது.

பசு நிரைகளைக் காத்தலாவது-வைக்கோல் புல்லிடுதல், நீர்குடிப்பித்தல், மேய்த்தல், தேய்த்தல், சொறிதல், சுத்தஞ் செய்தல், நீராட்டல், பால்கறத்தல், புலிமுதலியவற்றால் இடையூறு வராமற்காத்தல், முதலியவைகளாம்.

"కృషికర్మ"(—கிருஷிகர்ம.)நிலத்தையுழுது பக்குவஞ்செய்து விதைவிதைத்து, பயிர் வளரக் காத்துப் பயனைப்பெறுதல்.

"వాణిజ్యం"—(வாணிஜ்யம்) தானியம், பாக்கு, ஆடைமுதலியவற்றைக் கொள்ளல் விற்றல் இவையே வைசியதருமமாம்.

இவ்வட்டி வாங்குதல் முதலிய கருமங்கள் வைசியனுக்குத் தருமமென்று யாஞ்ஞவற்கியரும் கூறினர்.

శ్లో॥ "కుసీదకృషి వాణిజ్య పాశుపాల్యంవిశస్స్మృతం"

குஸீதகிருஷிவாணிஜ்யபாஸுபால்யம்விஸ: ஸ்மிருதம்,

வட்டிவாங்குதல், உழவு, கொள்ளல்விற்றல், பசுக்காத்தல், வைசியனது என்று கூறப்பட்டது.

மனு.

శ్లో॥ పశూనాం రక్షణం దాన మిజ్యాధ్యయన మేవచ।

వణిక్పథం కుసీదంచ వైశ్యస్యకృషి మేవచ॥

பஸூநாம்ரக்ஷணந்தான-மிஜ்யாத்யயனமேவச

வணிக்பதங் குஸீதஞ்ச-வைஸ்யஸ்ய கிருஷிமேவச.

பசுக்களைக் காத்தல், தானங் கொடுத்தல், வேட்டல் வேதமோதல், கொள்ளல் விற்றல், வட்டி வாங்குதல், இக் கருமங்களை வைசியனுக்கு விதிக்கத்தக்கது.

வராகபுராணம்.

శ్లో॥ స్వాధ్యాయంయజనందానం కుసీదంపశుపాలనం।

గోరక్షాంకృషివాణిజ్యంకుర్యాద్వైశ్యోయథావిధి॥

ஸ்வாத்யாயம்பஜனந்தானம்-குஸீதம்பஸுபாலநம்

கோரக்ஷாங்கிருஷிவாணிஜ்யங்-குர்யாத்வைஸ்யோயதாவிதி.

வேதமோதல், வேள்விசெய்தல், தானமீதல், வட்டிவாங்குதல், பசுநிரையோம்பல், ஆனிரைகாத்தல், உழவு, வாணிபம், இவைகளை விதிப்படி வைசியன் செய்தல் வேண்டும். எ-று. காண்க. ஆனிரைகாத்தலை வேறுகூறியிருத்தலின், பசுநிரையோம்ப லென்பது யாடு, குதிரைமுதலியவற்றை யோம்புதலெனக்கொள்க.

விற்றற்குரிய பண்டங்கள்.

அநுசாசனபர்வம்.

శ్లో॥ తిలచర్మరసాశ్చైవ విక్రేయాఃపశువాజినః।

వణిక్పథముపాసీనై ర్వైశ్యైర్వైశ్యస్థితైరపి॥

திலசர்மரஸாஸ்சைவ-விக்ரேயா: பஸுவாஜிந:

வணிக்பதமுபாஸீநைர்வைஸ்-யைர்வைஸ்யஸ்திதைரபி.

எள், தோல், இரசவர்க்கங்கள், பசுக்கள், குதிரை முதலியவற்றினை ஆவணத்திருந்த வைசியராயினும் அவர்களுடத்து அம்முயற்சியின் பொருட்டு நின்ற மற்றையராயினும் விற்றல் வேண்டும். ஆவணம்=கடைவீதி.



சாந்திபர்வத்தில் ஜாபாலியுபாக்கியானப் பிரசங்கத்தில் துலாதாரன் என்பவனால் வைசியதருமங்கூறப்பட்டது.

యద్దదామినతం న్యూనం యద్గృహ్ణామినచాధికం।

విక్రీణామిరసాంశ్చాహమన్యత్ర వర్జమమాయయా।

క్రీత్వాచప్రతివిక్రీణే పరహస్తాద్ధనంబహు॥

யத்ததாமிநதம்நியூநம்-யத்கிரஹ்ணாமிநசாதிகம்

விக்கிரீணாமிராஸாம்ஸ்சா-ஹமந்நவர்ஜமமாயயா

கிரீத்வாவைபிரதிவிகிரீணே- பரஹஸ்தாத்தநம்பஹு.

நான் எதனைக் கொடுக்கின்றேனோ அது குறைவாக விராது. நான் எதனைக் கொள்ளுகின்றேனோ அது மிகுதியாக விராது. சமைத்த சோறொன்றொழிய மற்றைய இரசவருக்கமனைத்தினையும் வஞ்சிப்பின்றி விற்கின்றேன். ஆயின், கொண்டதினும் அதிக பொருளைப் பிறன் கையிற்பெற்று விற்கின்றேன்.

ஆனிரையோம்புதல்.

சங்கலிதர்.

గారక్షేతాస్వపీతాసు నపిబేన్నతిష్ఠేన్న

తూపవిశేన్నస్వ్యయముత్థాప యేన్నైవా

ర్ద్రశాఖయానఫలాశయాంపృష్ఠతోఽభిహన్యా

త్తిష్ఠేనవిషమేణాల్పోదకేననైవతారయే

ద్బాలవృద్ధరోగార్తానాం శక్తితః

ప్రతీకారంకుర్యాదన్యథావిప్లవ.

காரக்ஷேதாஸ்வபீதாஸுநபிபென்னதிஷ்டே

தூபவிஸென்னஸ்வயமுத்தாபயென்னைவார்த்த

ர்ஸாகயாநபலாஸயாவிருஷ்ட்டதோபி ஹன்யாத்

திஷ்டேதவிஷமேணால்போதகேநநைவதாரயேத்

பாலவிருத்தரோகார்த்தானாம் ஸக்தித:

பிரதீகாரங்குர்யா தன்யதாவிப்லவ:

ஆனிரை காத்தல் வேண்டும். அவை நீர் குடிக்குமளவுந் தானீர் குடிக்கலாகாது; அவை படுக்காவிட்டால்

தான் உட்காரலாகாது; படுத்திருப்பதனைத் தான் எழுப்பலாகாது. பசிய சிறுவளாரினாலும் இலைபற்ற கட்டைக்கோட்டினாலும் அதனைத் தீண்டாது உலர்ந்த இலைகளோடுங் கூடிய உலர்ந்த சிறுவளாரினால் அதன் கால் முதலிய விடங்களின் மெல்லப் பரிசித்துச் செலுத்தவேண்டும். விஷமம்=பெரு சிறு மேடுபள்ளம் அழுக்கு உளை முதலியவுடைய நீர் நிலைகளில் இறங்கவிடலாகாது. நீரில்லாத நிலைகளிலும் விடலாகாது. இளங்கன்று, கிழப்பசு, நோயுடையன இவற்றிற்குத் தன்னாலியன்றமட்டில் அவற்றின் றுன்பத்தை யொழிக்கத்தக்க [illegible]முபகாரமுஞ் செய்யவேண்டும். செய்யாவிடின், பாவத்துள் அழுந்துவன் என்று காண்க.

## வைசியன் அறுதொழில் மூவகைச் சீவனம்.

வட்டிவாங்குதள் முதல் வாணிபம்வரையில் எந்தெந்தக் கருமம் வைசியனுக்குக் கூறப்பட்டதோ அவையெல்லாம் "వృత్తిః" (விருத்தி:) சீவனோபாயம்=பிழைக்கும் வழியாம். இது மார்க்கண்டேயபுராணத்துட் கூறப்பட்டது. வருமாறு.

శ్లో॥ దానమధ్యయనంయజ్ఞో వైశ్యస్యాపిత్రిధైవసః।
వాణిజ్యంపాశుపాల్యంచ కృషిశ్చైవాస్యజీవికా॥

தாநமத்யயநம்யக்ஞோ-வைஸ்யஸ்யாபித்ரிதைவஸா
வாணிஜ்[illegible]பால்யஞ்ச-கிருஷிஸ்சைவாஸ்யஜீவிகா.

தானமீதல், வேதமோதல், வேள்விசெய்தல், இம்மூன்றும் வைசியன் வைதிககருமமாம். வாணிபம், பசுநிரைகாத்தல், உழவுத்தொழில் இம்மூன்றும் சீவனத்தொழிலாம்.

## வைசியன் சிறப்புத்தருமம்.

மனு.

శ్లో॥ వైశ్యస్తుకృతసంస్కారః కృత్వాదారపరిగ్రహం।
వార్తాయాంనిత్యయుక్తస్యపశూనాంచైవరక్షణే॥



வைஸ்யஸ்துகிருதஸம்ஸ்கார:-கிருத்வாதாரபரிக்ரஹம்
வார்த்தாயாம்நித்யயுக்தஸ்ய-பஸூநாஞ்சைவரக்ஷணே.

வைசியன் தக்கவிதியோடு உபநயநமுதலிய சமஸ்கார கருமங்கள் செய்யப்பட்டு மணம் புணர்ந்து (பிரமசாரியாகவாயினும் சந்நியாசியாகவாயினு மிருத்தலாகாதென்று தோற்றுவது. கிரகத்ததருமத்தையே அனுட்டிக்க வேண்டுமென்பது சித்தமாகின்றது) உழவு, வாணிபம், ஆனிரை காத்தல் என்னும் "வார்த்தை" யிலும், யாடு குதிரை முதலிய பசுக்காத்தலிலும் தவறாது எப்போதும் நடத்தல் வேண்டும்.

ప్రజాపతిర్హివైశ్యాయ సృష్ట్వాపరిదదేపశూన్.

பிரஜாபதிர்ஹிவைஸ்யாய ஸ்ருஷ்ட்வாபரிததேபஸூன்.

பிரமன் பசுக்களைப் படைத்து வைசியனுக்குக் கொடுத்தனர்.

శ్లో॥ నచవైశ్యస్యకామస్స్యాన్నరక్షేయంపశూనితి।
వైశ్యేచేచ్ఛతినాన్యేనరక్షితవ్యాఃకథంచన॥

நசவைஸ்யகாமஸ்யாந்-நரக்ஷேயம்பஸூநிதி.
வைஸ்யெசேச்சதிநாந்யேன-ரக்ஷிதவ்யா: கதஞ்சந.

பசுவை நான்காக்கமாட்டேன் என்று வைசியனுக்கு எண்ணம் பிறவாது, வைசியன் விரும்பிநிற்கையில் ஏனையோரால் பசுக்களை யோம்பச் செய்யலாகாது.

శ్లో॥ మణిముక్తాప్రవాళానాం లోహానాంతాంతవస్యచ।
గంధానాంచరసానాంచ విద్యాదర్ఘబలాబలం॥

மணிமுக்தாபிரவாளாநாம்-லோஹாநாந்தாந்தவஸ்யச
கந்தாநாஞ்சரஸாநாஞ்ச-வித்யாதர்கபலாபலம்.

வயிர முதலிய மணிகள் சந்திரகாந்தம், சூரியகாந்தம், படிகம், அயக்காந்தமுதலிய உபமணிகள் முத்து, சங்கு, பவளம்முதலியவும், வெள்ளிபொன்முதலிய வுலோ

கங்களும், நார்ச்சீலை, நூலாடை, பட்டுக்கோசிகம், மயிர்க்கம்பளம், அகில், சந்தனம், குங்குமப்பூ, கஸ்தூரி, பசசைக் கருப்பூரம், புழுகு=புனுகு, சவ்வாது, விலாமிச்சம், முதலிய வாசனைப்பண்டமும், வெல்லம், சருக்கரை, உப்பு, புளிப்பு, காரம், நெய், எண்ணெய், தேன், அரக்கு, கந்தகம் முதலிய இரசவருக்கங்களும்,

శ్లో॥ బీజానాముప్తిమావిద్యా త్క్షేత్రబీజగుణస్యచ।
మానయోగాంశ్చజానీయా త్తులాయోగాంశ్చసర్వశః॥

பீஜாநாமுப்திமாவித்யாத்-க்ஷேத்திரபீஜகுணஸ்யச
மாநயோகாம்ஸ்சஜாநீயாத்-துலாயோகாம்ஸ்சசர்வஸ:

தானியங்களும், பிரம்பு, மூங்கல் முதலிய மரவகைகளும் பிறவுமாயுள்ள பண்டங்களின் விலைகளும், அவற்றின் தரங்களும், நிலத்தின் குணங்களும், எந்த நிலத்தில் எந்தகாலத்தில், எதனை விதைத்துப் பயிர்செய்து பயன் கொள்ளவேண்டுமென்பதனையும், தானியமுதலிய பண்டங்களைச் சுத்தஞ்செய்து வைத்தலும், வித்துக்களைச் சேர் செய்து வைத்தலும், முகத்தலளவையின் வேறுபாடுகளும், நிறுத்தலளவை வேறுபாடுகளும், கணித வேறுபாடுகளும்,

శ్లో॥ సారాసారంచభాండానాం దేశానాంచగుణాగుణాం।
లాభాలాభంచపణ్యానాం పశూనాంచవివర్ధనం॥

ஸாராஸாரஞ்சபாண்டாநாம்-தேஸாநாஞ்சகுணாகுணாம
லாபாலாபஞ்சபண்யாநாம்-பஸூநாஞ்சவிவர்தநம்.

ஆக்கப்பட்ட பண்டங்களின் நன்மைதீமை முதலிய நிலைமைகளும், நிறவண்ணங்களின் ஏற்பாடுகளும். "ச" என்றதனாற் சிற்பபேதங்களும், தேயவியற்கைகளும், கொள்ளல் விற்றலின் நயநஷ்டங்களும், பசுக்களைக் காக்கத் தக்க வகைமைகளும்,



శ్లో॥ భృత్యానాంచభృతింవిద్యా ద్భాషాశ్చవివిధానృణాం।
ద్రవ్యాణాంస్థానయోగాంశ్చ క్రయంవిక్రయమేవచ॥

பிரத்யாநாஞ்சபிரதிம்வித்யாத்
பாஷாஸ்சவிவிதாந்ருணாம்
திரவியாணாம்ஸ்தாநயோகாம்ஸ்ச
கிரயம்விக்கிரயமேவச.

கூலித்தொழில் செய்பவர்களுக்குக் கூலியேற்பாடுகளும், எந்தெந்த நாட்டில் யார் யார் எந்தெந்தப் பாஷைகள் பயின்று எந்தெந்த வொழுக்கமுடையவர்களாயிருக்கின்றார்களோ அவற்றினை யறிந்து பழகுதலும், அவ்வப் பண்டங்கள் பிறக்குமிடமும், கொள்ளுமிடமும் கொள்ளத்தக்க பண்டமும், விற்குமிடமும், கொள்வோரைப் பற்றும் வகைமைகளும், முதலிய பிறவெல்லாமும் சான்றோர் வழியாலுணர்ந்து அனுபவத்தால் அறிவுணர்ச்சியடைந்து,

శ్లో॥ ధర్మేణచద్రవ్యవృద్ధావా తిష్ఠేద్యత్నముత్తమం
దద్యాచ్చసర్వభూతానా మన్నమేవప్రయత్నతః.

தர்மேணசத்ரவ்யவிரத்தாவா-திஷ்டேத்யத்நமுத்தமம்.
தத்யாஸ்சஸர்வபூதாநா-மந்நமேவப்ரயத்நத:

தருமத்தோடும் "ச" என்றதனால் தருமத்திற்கு மாறுபாடில்லாததாகிய பொய்முதலியவற்றோடும் நடத்தியும் தன் பொருள் விருத்தியாகும்படி நல்ல முயற்சிகளை எப்பொழுதும் செய்துவரவேண்டும். இப்படிப்பட்டவைசியன் விசேடம் பொருளைத் தேடி எல்லாமுயற்சியாலும் அந்தப் பொருளினை வேதியன் முதலிய எல்லாவுயிர்களுக்கும் தக்கவாறு சோறிடுதன் முதலிய வேளாண்மை செய்யவேண்டும். எ-று. காண்க. வேளாண்மை=உபகாரம்.

வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான்றன்மடந்தை *
தோளாகம்பாகமாம் புல்கினான்றேல்கோயில் ... ...... *

வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான்மிக்கிருக்குங் ... *
தாளாளராக்கூறிற்றன்றேன்றிமாடமே... ... ..; ... ... *

எ-ம், வேளாளர் - என்பது, வைசியர்க்கு உபகாரங் காரணமாக வந்ததோர் குறியீடு.

தாளாற்றித்தந்தபொருளெல்லாந்தக்கார்க்கு ... ... *
வேளாண்மை செய்தற்பொருட்டு... ... ... ......*

என்பனவுமது.

இனி மூலத்துள் "లాభకర్మ" (லாபகர்ம) என்றதனை "లోహకర్మ" (லோஹகர்ம) எனவும் சிலர் பாடமோதுகின்றனர். "లోహానాంచ" (லோஹாநாஞ்ச) என மனுவுங் கூறியிருத்தலின் உலோகங்களைச் சோதிக்கும் அறிவுதொழிலென அதற்குப் பொருள் கூறுக.

## வைசியதருமத்தின் பயன்.

வைசியன் மேற்கூறிய தன் கருமத்தினை நான்முறையே அனுட்டித்து வருவானாயின் அவனுக்குண்டாம் பயனைப் பற்றி அஸ்வமேத பர்வத்துட் கூறப்பட்டது.

శ్లో|| వణిగ్ధర్మమముంచన్వై దేవబ్రాహ్మణపూజకః।
సవణిక్స్వర్గమాప్నోతి పూజ్యమానాప్సరోగణైః॥

வணிக்தர்மமுஞ்சஸ்வை-தேவபிராஹ்மணபூஜக:
ஸவணிக்ஸ்வர்கமாப்னோதி-பூஜ்யமானோப்ஸரோகணை:

வைசியதருமத்தை விடாமல் தேவர்களையும் வேதியரையும பூசித்துக் கொண்டிருக்கும் வைசியன் அரமாதரால் பூசிக்கப்பட்டுச் சுவர்க்கம் புகுவன் என்று காண்க. அரமாதர்=தெய்வப் பெண்கள்.

## வைசியன் இவ்விதிதவறிய வழிவருங்குற்றம்.

சாந்திபர்வம்.

శ్లో|| యత్కరోతిజడాన్స్వాన్హా స్వణిక్కర్మణివంచితాన్।
సయాతినరకంఘోరం ధనంతస్యాపిహీయతే॥



யத்கரோதிஜடான்ஸாதூன்-வணிக்கர்மணிவஞ்சிதான்
ஸயாதிநரகங்கோரங்-தனந்தஸ்யாபிஹீயதே.

எந்தவைசியன், சாதுக்களாயும் தெரியாதவர்களாயுமுள்ளவர்களை வஞ்சிக்கின்றானே அந்தவைசியன் அச்சத்தைத் தருகின்ற நரகத்திற்குச் செல்வன். அவன் பொருளும் அழிந்துவிடும். எ-று-காண்க.

வாணிகஞ்செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந்தமபோற் செயின்.... ... ... ... ...*

என்பதுமது.

---

## சூத்திரராவா ரிவரெனல்.

இவ்விதிங்ஙனமாக, இனிச் சூத்திரராவார் தாம் யாரெனின்? குயவனும், தச்சு வேலை முதலிய சிறபத்தொழில் செய்வாரும், மூவகை நிரைகளை மேய்ப்பாரும், அங்காடிப் பண்டம் விற்பாரும், பிறருமாம். இதனைப் பராசரமாதவீயவுரை கலியொழிப்பில் -கூ0-வது "சாமித்திரம்" வருமாறு. பசுவைக் கொலைசெய்தல் இதற்காக ஒரு இருத்துவிக்குஆனாலும் வேதத்தில் ஏற்படுத்தப்பட்டதில்லை. பசுவை செய்யுங்காலத்தில் யஜமானன் இருத்துவிக்கு யாரும் அதைப் பார்க்கலாகாது. கொலை செய்தவனுக்கும் பிராயச்சித்தமுண்டு. ஆயின்,வேள்வியிற் பசுக்கொலை செய்தல் வேதவிதி சித்தமானது. இத்தொண்ட மண்டலத்தும் சோழமண்டலத்தும் வடாரடு சில பாகத்தும் வேதியன் "சாமித்திரம்" செய்வதில்லை. "சற் சூத்திரன் என்ற குயவனால்" செய்விக்கின்றனர். இக்கலிவர்ச்சியம் மைசூர் தேசம் மேற்றிசை நாடு முதலிய சில நாட்டுகளில் வழக்கத்தின் கண் வரவில்லை. அங்கு இப்பொழுதும் வேதியரே அந்தச் சாமித்திரத்தைச் செய்கின்றனர். ஏனெ

னின்? பிராமணன் சாமித்திரஞ் செய்து பின்பு பிராயச்சித்தம் செய்துக்கொள்ளும்படி வேதத்தால் விதிக்கப்பட்டது. ஆதலால் இது விடயத்தில் பிராமணர்களுள் விவாதப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவும்,

(பாராசரம் முதலாவது காண்டம்,சசஉ-வது பக்கம்.)

உசனை சு—சுக்கிரனுற் கூறப்பட்டது.

శ్లో॥ శూద్రస్య * ద్విజశుశ్రూషా సర్వశిల్పాని వాపిచ।

విక్రయస్సర్వ వస్తూనాం శూద్రకర్మ హ్యుదాహృతం॥

சூத்ரஸ்யதிவிஜஸிஸ்ருஷா-ஸர்வஸில்பாநிவாபிச

விக்ரயஸ்ஸர்வவஸ்துநாம்-ஸூத்ரகர்மஹியுதாஹிருதம்.

அந்தணர், அரசர், வைசியர், என்னும் இருபிறப்பாளர் மூவரையும் முறைமைப்படி உபசரித்துப் பணிபுரிதல், எல்லாவகைப்பட்ட சிற்பத்தொழில்களையும் செய்தல்,

---

(பாராசரம், முதல், அத், ருஅ௩-வது பக்கம்)

* "ద్విజ" (திவிஜ)=இரண்டாற் பிறந்தவன். எனவே, பிறப்பாலுந் தொழிலாலும் பிறந்தவன் என்றவாறு. உபநயனமுடையவன் என்பது கருத்து. இக்காரணக் குறியில் "ద్విజ"(திவிஜ)= என்பதற்கு அந்தணன் அரசன் வசியனுமாகிய மூவருமெனப் பொருள்படுகின்றது. அம்மூவர்க்கும் பணிசெய்தல் சூத்திரனுக்குச் சிறந்த தருமமல்லவாதலாலும் (దంతవిప్రాండజా ద్విజాః தந்தவிப்ராண்டஜாத்திவிஜா:=பற்கள், வேதியன், முட்டையிலிருந்தும் பிறக்கும் பறைவைமுதலியன துவிஜ என்பதன் பொருள்) என்ற "அமரநிகண்டி" ஞலும் அம்மொழி வேதியன் மாட்டு உலகவழக்காதலின், காரணவாற்றலினும் வழக்காற்றல் சிறந்ததாமாதலானும் மனு முதலியோர் கருத்திருளைப்பற்றி, ஈண்டு துவிஜ என்னுமொழிக்கு வேதியன் மாத்திரமே யென்று பொருள் படுகின்றது.



எல்லாப் பொருளையும் விற்றல், இவைகள் சூத்திரன் சீவனத்தொழிலென்று கூறப்பட்டது.

யாஞ்ஞுவற்கியர்.

శ్లో॥ శూద్రస్య ద్విజశుశ్రూషా తయాజీవన్వణిగ్భవేత్।

శిల్పైర్వా వివిధైర్జీవే ద్ద్విజాతి హితమాచరన్॥

சூத்ரஸ்யதிவிஜஸிஸ்ருஷா - தயாஜீவன்வணிக்பவேத்

ஸில்பைர்வாவிவிதைர்ஜீவேத்- திவிஜாதிஹிதமாசரந்.

சூத்திரனுக்கு இருபிறப்பாளரைச் சேவிப்பதே தக்க கருமம் அம்முயற்சியாற் பிழைப்பவன் வைசியனோடொப்பாவன். பண்டங்களைக் கொடுக்கல் வாங்கலுமாகிய வாணிபமுஞ் செய்யலாம். இருபிறப்பாளர்க்கு இன்பம் விளையும் வகையை வேண்டிப் பலவகைப்பட்ட சிற்பத்தொழிலாலாவது பிழைக்கலாம்.

ஹாரீதர்.

శ్లో॥ శూద్రస్య ధర్మోద్విజాతి శుశ్రూషాపవర్జనం కళత్రాదిపోషణం

కర్షణంపశుపాలన భారోద్వహన పణ్యవ్యవహారచిత్రకర్మ

నృత్తగీతవేణువీణా మృదంగవాదనాదీనిచ.

சூத்ரஸ்யதர்மோதிவிஜாதிஸிஸ்ருஷா

பவர்ஜநம் களத்ராதிபோஷணம்

கர்ஷணம் பஸுபாலநபாரோத்வஹநபண்ய

வியவஹாரசித்ரகர்மநிருத்தகீதவேணு

வீணுமிருதங்கவாதநா தீநிச.

இருபிறப்பாளரைச் சேவிப்பதுவே சூத்திரனுக்குச் சிறந்த தருமமாம். அது குப்பைகளைதல் முதலிய தொழில், சுவாமி குடும்பத்தைக் காத்தல், நிலத்தையுழுதல் அல்லது பண்ணை வேலை முதலிய செய்தல், பசு நிரை காத்தல், சுமைசுமத்தல், அங்காடித் தொழில், சித்திர

வேலை, கூத்து, பாடல், குழலாதியூதல், வீணை மத்தள முதலிய வாத்தியங்களை முழக்குதலாதியுமாம். இவை சூத்திரனுக்குரிய தருமமாம். என்ற சூத்திர சீவனவகையுள்ளும் விளங்கக் கூறுமாறு காண்க.

## சூத்திரர்க்குரிய இழிதொழிலு மிரத்தலும் வேளாளர்க்கு யாண்டுமின்றெனல்.

ஆகவே, சூத்திரனுக்கு யாண்டும் உபநயநாதி கருமம் விதியாமையாலும், அவன் பொருளைச் சேர்ந்து வைக்கலாகாதெனவும், வைப்பினும் அவனுக்கது சுதந்தர முடைமையதல்லவெனவும், பாரதம் சாந்தி பருவத்துள் கூறப்பட்டது. வருமாறு.

(பாராசரம்-முதல்-அத்-௫அ௫-வதுபக்கம்.)

శ్లో॥ స్వాహాకారనమస్కారమాత్రంశూద్రేవిధీయతే।
తాభ్యాంశూద్రఃపాకయజ్ఞైర్యజేతబ్రాహ్మణాంస్స్వయం॥

ஸ்வாஹாகாரநமஸ்காரமாத்ரம்-ஸூத்ரெவிதீயதே,[வயம்.
தாப்யாம்ஸூத்ர: பாகயக்ஞைர்ய-ஜேதபிராஹ்மணாந்தஸ்

"స్వాహా" ஸ்வாஹா—"నమః" நம:—என்றஇவ்விரண்டு மந்திரங்கள் மாத்திரமே சூத்திரனுக்கு விதிக்கப்படுகின்றது. அதனாற் சூத்திரன் பாக எச்சஞ் செய்யவேண்டும். வேதியரைத் தானே சேவிக்கலாம். (எனவே, தக்க காலத்தில் படுக்கையிடுதல் கால் வருடல் முதலியன வாகத்தொட்டுச் செய்தலாம்.)

శ్లో॥ సంచయాంశ్చనకుర్వీతజాతుశూద్రఃకథంచన।
సేవయాహిధనంలబ్ధ్వావశేకుర్యాద్గరీయసః॥

ஸஞ்சயாம்ஸ்சநகுர்வீத-ஜாதுஸூத்ர:கதஞ்சந
ஸேவயாஹிதநம்லப்த்வாவ-ஸே குர்யாத்கரீயஸ:



தான் செய்யுந்தொழிலில் எவ்வகையாலேனும் மிகுதிசெய்து சேர்த்து வைத்துக்கொள்ளலாகாது. சேவித்தலால் திரவியத்தைச் சம்பாதித்துப் பெரியோர் பக்கலாகவைத்தல் வேண்டும்.

శ్లో॥ రాజ్ఞాదానమనుజ్ఞాతఃకామంకుర్వీతధార్మికః

ராக்ஞாதானமநுக்ஞாத:—காமங்குர்வீதார்மிக:

அரசனேயாயினும், தலைவனேயாயினும், உன் பொருளைக் கொண்டுபோ என்றபின் கொண்டுவந்து மனம்போல் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆயின் தருமத்தோடொழுகவேண்டும். எனவும், சூத்திரர்க்குத்தாம் தேடிய பொருளினையுந் தம்மிச்சைவழிகொடை முதலிய செய்யலாகாது என்று விதித்தலாலும், வைசியர்க்குக் கொடைச் சுதந்தரத்தானே வேளாளரென்ற பெயர் வழங்கியிருத்தலாலும், அவரைச் சூத்திரரென்பது அசங்கதமும் அழுக்காற்றுரையுமென்றொழிக. அல்லதூஉம், சூத்திரன் ஜீவனமார்க்கம்.

(பாராசரம் முதல் காண்டம்-௫அசு-வதுபக்கம்.)

சூத்திரன் வேதியர் பணிபுரிதல் மறுமைப்பயன் ஒன்றற்கே ஏதுவாதலன்றி இம்மைப்பயனாகிய சீவன வழியாகவுமிருக்குமென மநுகூறினர்.

శ్లో॥ ప్రకల్ప్యాతస్యతైర్వృత్తిఃస్వకుటుంబాద్యథార్హతః।
శక్తించావేక్ష్యభక్తించభృత్యానాంచపరిగ్రహం॥

பிரகல்பியாதஸ்யதைர்விருத்தி:-ஸ்வகுடும்பாததார்ஹத:
ஸக்திஞ்சாவேக்ஷ்யபக்திஞ்ச-ப்ருத்யாநாஞ்சபரிகிரஹம்.

வேதியர் தமது பணி செய்யுஞ் சூத்திரனுக்குத் தமது குடும்பத்திலிருந்து தக்கசீவன வழியை யுண்டு பண்ண

வேண்டும். அவன் செய்யும் பணிக்கும், அவனுக்குண்டாயிருக்கும் பத்திக்கும், அவன் குடும்பத்திற்கும் தக்கவாறு தன்னளவையும் அறிந்து கொடுக்கவேண்டும்.

శ్లో॥ ఉచ్ఛిష్టమన్నందాతవ్యంజీర్ణానివసనానిచ।
పులాకాశ్చైవధాన్యానాంజీర్ణాశ్చైవపరిచ్ఛదాః॥

உச்சிஷ்டமந்நம்தாதவ்யம்-ஜீர்ணாநிவஸநாநிச
புலாகாஸ்சைவதாந்யாநாம்-ஜீர்ணாஸ்சைவபரிச்சதா:

உண்டுமிக்க எச்சில், பழையது, அனுபவித்து மிருந்த பண்டங்கள், பழைய ஆடைகள், சோறு, அல்லது அவல் பொரி முதலியன, தானியவகைகளிற் சிறிது சிறிது பழைமைப்பட்ட ஏனையகருவிப்பொருள்களும் கொடுக்கப்படுவனவாம்.

சாந்திபர்வம்.

శ్లో॥ యశ్చకశ్చిద్ద్విజాతీనాంశూద్రశ్శుశ్రూషురావ్రజేత్।
ప్రకల్ప్యాతస్యతైరాహుర్వృత్తిర్ధర్మవిదోజనాః॥

யஸ்சகஸ்சித்திவிஜாதீநாம்-ஸூத்ரஸ்ஸுஸ்ரூஷுராவ்ரஜேத்
பிரகல்ப்யாதஸ்யதைராஹுர்-விருத்திர்தர்மவிதோஜநா:

யாரேனுஞ் சூத்திரன் அந்தணனுக்குப் பணிசெய்வோனாகவரின் அவனுக்குச் சீவனத்தை யுண்டுபண்ணவேண்டுமென்று தருமமுணர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

శ్లో॥ ఛత్రవేష్టనమౌంజానిహ్యుపానద్వ్యజనానిచ।
యాతయామానిదేయానిశూద్రాయపరిచారిణే॥

சத்ரவேஷ்டநமௌஞ்ஜாநி-ஹ்யுபாநட்வ்யஜநாநிச
யாதயாமாநிதேயாநி-ஸூத்ராயபரிசாரிணே.

குடை, தலைக்காடை, அரைஞாண், பாய், செருப்பு, விசிறி, உடுக்குமாடை இவைகள் பழைமைப்பட்டால் பணிவிடை செய்யும் சூத்திரனுக்குக் கொடுக்கவேண்டும்.



என்றபடி வேள்ளாளர் யாண்டுமின்றளவும் பெற்றுள்ள வழக்குக் காணப்பட்டதில்லையென்க.

## வேளாளர் சூத்திரரேல் வைசியத்தொழில் செய்வதற்கு அரசனால் ஒறுக்கப்படுவர்.

அல்லதூஉம், வியாதர் இருக்கு, யஜுசு, சாமம், அதர்வணமென ஒன்றாயிருந்த வேதத்தினை நான்குகூறு செய்வதற்கு நெடுங்காலத்தின் முன்னேதானே வேளாண்வாகை, யெனக்கொடைமடம், பொருளீட்டற் சுதந்தரமுடைய காரணம்பற்றிச் சிறப்பித்து இலக்கண நூன்முதலியவற்றுள் வகுத்தோதப்பெற்ற விவ்வேள்ளாளர் சூத்திரரேல், அக்காலத்து மநுமுறை தவறாதிருந்து அரசாண்ட அரசர்கள் அனைவரும்,

அரசதருமத்துள், வருணதருமம் நிலைபேறு.

(பராசரம். முதலாவது காண்டம். ருஙசு-வது பக்கம்.)

நாரதர் கூறினர்.

శ్లో॥ యోయోవర్ణోవహీయేతయశ్చోద్రేకమనువ్రజేత్।
తంతందృష్ట్వాస్వతోమార్గాత్ప్రచ్యుతంస్థాపయేత్పథి॥

யோயோவர்ணோவஹீயேத-யஸ்சோத்ரேகமநுவ்ரஜேத் [பதி
தந்தந்திருஷ்ட்வாஸ்வதோமார்காத்-ஸரச்யுதம்ஸ்தாபயேத்

எந்தெந்த மரபு குறைந்துவிடுகின்றதோ ! எது உயர்கின்றதோ ? அவற்றையாராய்ந்தறிந்து தன் வழி தவறியுள்ளதனை அரசன் நன்மார்க்கத்தில் நிறுத்துக.

யாஞ்ஞவற்கியர்.

శ్లో॥ అశాస్త్రోక్తేషుచాన్యేషుపాపయుక్తేషుకర్మసు।
ప్రసమీక్ష్యాత్మనారాజా దండందండ్యేషుపాతయేత్

அஸாஸ்த்ரோகைஷு—சாங்யேஷு—
பாபயுக்தேஷு—கர்மஸு—
பிரஸமீக்ஷயாத்மநாராஜா
தண்டந்தண்டியேஷு—பாதயேத்.

நூல்களுட்கூறப்படாத தீவினைகளில் பழகியுள்ளவர்கள் தண்டனைப்படத்தக்கவரென்று அரசன் தானுணரவரின் அவர்களைத் தண்டிக்கக் கடவன்.

శ్లో॥ కులాని జాతీః శ్రేణీశ్చ గణాన్ జానపదానపి।
స్వధర్మాచ్చలితాన్రాజా వినీయ స్థాపయేత్పథి॥

குலாநிஜாதீஸ்ஸ்ரேணீஸ்ச-சணாந்ஜாநபதாநபி
ஸ்வதர்மாச்சலிதாந்ராஜா-விநீயஸ்தாபயேத்பதி:

அந்தணர் முதலிய வருணங்களும் "మూర్ధావసిక్త" (மூர்தாவஸிக்த)=தலைமைபெற்ற மரபுகளும், தச்சர் முதலிய சிரேணியர்களும், ஐதுகர் முதலிய கணங்களும், அல்லது, படைமள்ளர்கூட்டமும், "జానపదాః" ஜாநபதா:=தேயத்துள்ளவர்களும் தத்தம் மரபு ஒழுக்கந்தவறினரேல் அவர்களை பொறுத்து வசஞ்செய்து அவரவர்க்குரிய ஒழுக்கத்து நிறுத்துக. எ-று. சிரேணியர்=ஒரே தொழிலால் ஜீவிப்பவர். ஐதுகர்=ஒரு காரணம் பற்றி வந்தவர். (ஏது பற்றிவந்தவர் - ஐதுகர்) கணம்=கூட்டம். தேயத்துள்ளவர்=யாவர்க்கும் வேண்டும் பொதுத் தொழில் செய்துகொண்டு அவ்வவ்விடங்களிலுள்ள கருமான் முதலியவர்கள். என்றபடியாலும், அது தவறி யொழுகுமவரைத் தண்டிக்கவென விதித்தலாலும், அவர்க்கு அத்துணைச் சுதந்தரந்தொண்டுதொட்டு இன்றுவரையும் இடையருத வொழுக்கநிலைபெற்றுவராதென்றுணர்க.



குழுவார்குடிமக்களான கண்ணாளர்குறும்படக்கி ........*
பெழுவாயமைந்தமநுநீதியாற்பதினெண்மரபு... .........*
முழுவானரித்துக் கிடந்து விடாமலுலகுக்கெல்லாம் ...*
வழுவாதமைக்கவும் வல்லதுநீடொண்டமண்டலமே ...*

## வேளாளர் சூத்திரரோல் அகத்தியர் உழவினை இவர்களுக்கு விதியார்.

அதுவுமன்றிப் பராசரர் கலிதருமத்துள்ளும்,
(இரண்டாவது அத்தியாயம், கஎ-வது பக்கம்.)

శ్లో॥ వికర్మ కుర్వతే శూద్రా ద్విజశుశ్రూషయోజ్ఝితాః
భవంత్యల్పాయుషస్తేవై నిరయంయాంత్యసంశయం॥

விகர்மகுர்வதேஸூத்ரா-த்விஜஸு—ஸ்ருஷயோக்கிதா:
பவந்தியல்பாயுஷஸ்தேவை-நிரயம்யாந்த்யஸம்சயம்.

(இ-ள்) சூத்திரர் இருபிறப்பாளர் பணிவிடை விடுத்துக் கொடுந்தொழிலாகிய உழவு முதலிய தொழில் செய்தால் அற்பாயுளையுடையவராய் நரகத்தையடைவர். இதிலையமில்லை. (ஊதியம்=இலாபம், அதிகமாகக் கிடைப்பதால் எல்லாப் பிழைப்புக்குங் காரணமாயிருத்தலின் சீவக்கொலையே வடிவாகவுடைய உழவினை மாத்திரம் செய்து வந்தால் அது விகருமம், என்றுங் கொடுந்தொழில் என்னப்படும். சூத்திரன் வேதியன்பணிசெய்தால் கிழிந்த ஆடையும் உச்சிட்ட அன்னமுமே கிடைப்பதாம். விசேடித்த வூதியம் ஒன்றும் கிடைப்பதல்லவே யென்றெண்ணி மிகுந்த பொருளிச்சையால் உழவு முதலிய சீவன விருத்தியுள் புகுந்து அவ்ம்றினையே செய்திருந்து வேதியன் பணியை விட்டால் அந்தச் சூத்திரனுக்கு இம்மைப்

பயனும் மறுமைப் பயனும் கெடுகின்றது.) என்று விதித்தலால் அவ்வகைப்பட்ட கேடுண்டாவதனை ஆ! அகத்தியனாரும் வேறு பிரித்து விதியார். இவ்வேளாளரும் அதனுக்குடன் படார். தாஞ் சாவவுடன்படுவாருண்டோ ! அறுதிற்க.

---

## கலியில் க்ஷத்திரிய வைசியரில்லை என்பதனை மறுத்தல்.

இனி ஒரு சாரார் இக்கலியில் நால் வருணத்துள், இடைப்பட்ட அரச வைசிய வருணமிறந்தொழிந்தது, தலையுங் கடையுமான வேதியரும் சூத்திருமே யுள்ளாரெனக் கூறுவர். அது முழுவஞ்சகமாயாவாதக் கூற்றென்று மறுத்தொழிக. என்னை ? கலிதருமமொன்றனை கூறவந்த காரணத்தால் "కలౌపారాశరస్మృతిః" கலௌபாராசரஸ்மிருதி : என்ற சிறப்புற்ற பராசர மிருதியுட்டானே,

(பராசரம். முதல், அத், அக-வது பக்கம்.)

శ్లో॥ సర్వేధర్మాఃకృతేజాతాస్సర్వేనష్టాఃకలౌయుగే।
చాతుర్వర్ణ్యసమాచారంకించిత్సాధారణంవద॥

ஸர்வேதர்ம: கிருதேஜாதாஸ்-ஸர்வேநஷ்டாகலௌயுகே
சாதுர்வர்ண்யஸமாசாரங்-கிஞ்சித்ஸாதாரணம்வத.

(இ-ள்.) எல்லாத்தருமங்களும் "கிருத" யுகத்தில் பிறந்தன. கலியுகத்தில் இறக்கின்றன. ஆதலால், நான்குவருணத்தினுடைய பொதுவாகிய நல்வொழுக்கங்களைச் சிறிது கூறவேண்டும், எனவும்,

(பராசரம் முதல்; அத், அஎ-வது பக்கம்.)

శ్లో॥ చతుర్ణామపివర్ణానాంకర్తవ్యంధర్మకోవిదైః।
బ్రూహిధర్మస్వరూపజ్ఞసూక్ష్మంస్థూలంచవిస్తరాత్॥



சதுர்ணாமபிவர்ணாநாங்-கர்தவ்யந்தர்மகோவிதை :
ப்ரூஹிதர்மஸ்வரூபஜ்ஞ-ஸூக்ஷ்மம்ஸ்தூலஞ்சவிஸ்தராத்.

என்பது தருமவடிவமுணர்ந்த ஐயரே? நான்கு வருணங்களிலுந் தருமங்களை நன்றாக அறிந்தவர்களால் செய்யவேண்டுவனவுஞ் சிறியதும் பெரியதுமாகிய தருமங்களை விரித்துக் கூறவேண்டும். எனவும்,

(பராசரம். முதல்-அத்-கசகூ-வது பக்கம்)

శ్లో॥ అహమద్యైవతత్సర్వ మనుస్మృత్య బ్రవీమివః।
చాతుర్వర్ణ్యసమాచారం శ్రుణ్వంతుమునిపుంగవా॥

அஹமத்யைவதத்ஸர்வ-மநுஸ்ஸ்மிருத்யபிரவீமிவ :
சாதுர்வர்ண்யஸமாசாரம்-சிருண்வந்து முநிபுங்கவா.

எ-து. நான் இப்போதே அவ்வெல்லாவற்றையும் ஞாபகத்திற்றந்து உங்களுக்குக் கூறுகின்றேன், முனிசிரேட்டர்கள் நான்குவருணங்களின் ஒத்த ஒழுக்கங்களைக் கேட்கக் கடவர். எனவும்,

(பராசரம். முதல்-அத், கருகூ.வது பக்கம்.)

శ్లో॥ చతుర్ణామపివర్ణానా మాచారోధర్మపాలకః।
ఆచారభ్రష్టదేహానాం భవేద్ధర్మఃపరాఙ్ముఖః॥

சதுர்ணாமபி வர்ணாநா-மாசாரோதர்மபாலக :
ஆசாரப்ரஷ்டதேஹாநாம்-பவேத்தர்ம ; பராங்முக:

(இ-ள்) நான்கு வருணத்திற்கும் ஒழுக்கம், தருமத்தைக் காக்கத்தக்கதாம். ஒழுக்கந்தவறின உடம்பையுடையவனுக்குத் தருமம் முதுகு காட்டிவிடும். எனவும், நான்கு வருணத்திற்கு மொப்ப விதி கூறுதலின் இல்லாத வருணத்தினைப்பற்றி யாசாரங் கூறவேண்டுவதில்லையாம். ஆகவே, அது வழுவாதமெனக் கடிந்திடுக.

---

## கோத்திரம்.

இனிவேதியரொழியப் பிறர் மூவருக்குப் கோத்திர சூத்திரப் பிரவரமில்லை யென்பாருமுளர், அதுவும் இக்காலத்து மாயாவாதியர் அழுக்காற்று வஞ்சகமொழியெனமறுக்க. என்னை? பீஷ்மதருப்பணம் என்று வியாசர்..

(பராசரம். முதல், அத், சஅரு-வது பக்கம்)

శ్లో॥ శుక్లాష్టమ్యాంతుమాఘస్య దద్యాద్భీష్మాయయోజలం।

సంవత్సరకృతంపాపం తత్క్షణాదేవనశ్యతి।

వైయాఘ్రపాదగోత్రాయ సాంకృతిప్రవరాయచ।

గంగాపుత్రాయభీష్మాయ ప్రదాస్యేహంతిలోదకం।

అపుత్రాయదదామ్యేత జ్జలంభీష్మాయవర్మణే॥

சுக்லாஷ்டமியாந்துமாகஸ்ய-தத்யாத்பீஷ்மாயபோஜலம்

ஸம்வச்சரகிருதம்பாபம்-தக்ஷணாதேவனஸ்யதி

வையாக்ரபாதகோத்ராய-ஸாங்கிருதிபிரவர்ரயச

கங்காபுத்ராயபீஷ்மாய-பிரதாஸ்யேஹந்திலோதகம்

அபுத்ராயததாம்யேதஜ்-ஜலம்பீஷ்மாயவர்மணே.

மாசித்திங்களின் வளர்பிறை அட்டமியில் வீட்டுமன் பொருட்டு யார் தருப்பணநீரைக் கொடுக்கின்றனரோ? அவன் அவ்வருடத்திற் செய்த பாவங்களெல்லாம் அப்பொழுதே அழிந்துவிடுகின்றது. வையாக்கிரபாத கோத்திரன் சாங்கிருதிக இருடிப் பிரவரன், கங்கைமகன், கான்முளையில்லான், பீஷ்மவருமன், அரசகுலத்து அவதரித்திருந்த வீடுமன்பொருட்டு இத்திலோதகத்தைத் தருகின்றேன் என்ற பொருளுடைய, ஆரிடமந்திரத்தைக் கூறித் தருப்பணஞ்செய்யவேண்டும். கான்முளை=புத்திரர். எனவும், அத்திவ்விய பிதிர் தருப்பணத்துள் போதாயனர்.



(பாராசரம் முதல் அத், சஅக-வது பக்கம்.)

శ్లో॥ శర్మాంతంబ్రాహ్మణస్యోక్తం వర్మాంతంక్షత్రియస్యతు।

గుప్తాంతంచైవవైశ్యస్య దాసాంతంశూద్రజన్మనః॥

ஸர்மாந்தம்பிராஹ்மணஸ்யோக்தம்

வர்மாந்தம்க்ஷத்திரியஸ்யது

குப்தாந்தஞ்சைவவைஸ்யஸ்ய

தாஸாந்தம்ஸூத்ரஜந்மந:

அந்தணன், அரசன், வைசியன், சூத்திரனுடைய பெயர்களின் முடிவில் கூறிய முறைப்படி சிரலேசருமன், வருமன், குப்தன், தாசன் என்ற சொற்களைச் சேர்த்துத் தருப்பணம் செய்யவேண்டுவது.

శ్లో॥ చతుర్ణామపివర్ణానాం పితౄణాంపితృగోత్రతః।

పితృగోత్రంకుమారీణా మూఢానాంభర్తృగోత్రతః॥

சதுர்ணமபிவர்ணாநாம்-பித்ரூணாம்பித்ருகோத்ரத:

பித்ருகோத்ரங்குமாரீணா-மூடாநாம்பர்த்ருகோத்ரத:

இந்நான்கு வருணத்துள்ளவர்க்கும் அந்தந்தப் பிதாக்கட்கும் அவ்வவர் கோத்திரத்தோடும், மணம்புரியாத பெண்களுக்குத் தந்தை கோத்திரத்தோடும், மணம் புணர்ந்த பெண்களுக்குக் கணவன் கோத்திரத்தோடும் தருப்பணஞ்செய்க. எனவுங் கூறுதலின் என்றுணர்க.

௰அ-௰கூ-வது பக்கங்களிற் குறித்துள்ள செய்யுட்களாலும் காண்க.

## வேளாளரைச் சூத்திரரொன்ற தப்புவழக்கிற்குக் காரணம்.

ஆனால் சூத்திரரொன்று சில தமிழ்புராணங்களிற் கூறியவாறென்னையெனில்! சில நூற்றாண்டுகளாக இத்தேசத்தில் ஆகம விரோதிகளாகிய மாயாவாதிகள் பிரவேசித்து

வந்து ஆகமங்களை மறுத்துச் சில சிறு குலீனர்களாகிய குறும்பரசர்களுக்குக் குலச்சிறப்பு முதலிய விசேடமாகக் கற்பித்துச் சுவாதீனஞ்செய்துக்கொண்டு, ஆகமவாசிகளாகிய ஆதிசைவ வேதியர்களையும் அவர்களுக்கு விசேடஞ் சார்புசெய்திருந்த வேளாளரையும் பொறாமையால் இழுக்குச் செய்யவாரம்பித்து, முதலில், ஆதிசைவரைப் பூசாரியென்றும், வேளாளரைச் சூத்திரரென்றும், வழங்குவிக்க அதன்வயப்பட்டு அனேகர் முதற்காலத்தில் குறும்பரசர் அதிகாரத்திற்கஞ்சி மறைக்கப், பிற்காலத்துள்ளாருண்மை யுணராது மயங்கி

அதிமதிநுட்பமோ டதிநூல்கற்பினும்
விதியதுவசத்தால் விதிவிலக்கயர்ப்ப
இம்முறைதன்னை யெவர்பகுத்தறியினும்
நூலுரைபோத காசிரியர்மூவரும்
அவத்தைவயத்தால் அலைகுவர் திடனே
முக்குணவிடத்தால் முறைபிறழ்ந்தறைவரே.

என்றிலக்கணக்கொத்துட் கூறியபடி அவத்தைக்குள்ளாய் அப்புராணங்களுட் கூறினர். அன்றியும், ஆதிசைவர்களும் முதற்காலத்தில் குறும்பரசர்க் கஞ்சியும், பின் சிலகாலமாய் மயங்கியும், வேளாளரைச் சூத்திரரென்று கூறிச் சிரார்த்தாதிகருமங்களிலும், எங்கள் கண்காண, மந்திரலோபங்கிரியாலோபஞ் செய்யத் தொடங்கினர். அம்மாயாவாதிகள் ஆதிசைவவேதியரையும் வேளாளரையுஞ் சூத்திரர்களென்றமட்டோ வொழிந்தனர்! சில ஞானிகளாற் செய்யப்பட்ட நூலிலும் அவ்வண்ணமே தங்கள் கருத்துப்போல இன்னும் பலவிடயங்களையும் திருத்துவித்துமிருக்கிறார்கள். இம்மட்டோ! எவ்வகைப்பட்ட வேள்வி முதலிய தேவ காரியங்களி



லும், அக்கிரதாம்பூலச் சிறப்புடைய சுக்கிலயஜுச்சாகையர்களாகிய பிரதமசாகையர்களையுஞ் சூரியனால் மத்தியான்ன சண்டாளத்துவசாபம் பெற்றவரெனப் பொறாமையாற் பொய்க்கதைக் கட்டிப் பழித்துந்தான் திரிகின்றார்கள். அதற்குக் காரணம் பாவமென்பது ஒன்று இல்லை யென்னும் அவர்கள் சித்தாந்த முடிபுதான். என்னை? சீவனென்பதொன்றில்லை எல்லாம் பிரமமேயென்றால், தொழிலெல்லாம் பிரமத்ததாகப் பாவபுண்ணியப் பயன் பெறுவான் யார்? என்ற கொடுந்துணிவுதான். இதை இனி யெழுதும் விரிநூலிற்காணலாம். அதுநிற்க.

இங்ஙனம் இம்மாயாவாதியர் ஒருவர்மட்டோ இம்மாறுபாடு! இவரல்லாப் பல சமயவாதிகளும், பாரதம், இராமாயணம், பதினெண்புராணம், மிருதிகள் அங்கநூல்கள், உபநிடதங்கள் சுருதிமொழிகள் முதலியவெல்லாவற்றையும் தாம் வேண்டியவாறு மிகுத்தும், குறைத்தும், மாறுபடுத்தியும், அக்காலத்து மாத்திரமேயன்றி யிக்காலத்தும் பல செய்து வருதலையாங்கண்ணாரவுங்கண்டுள்ளோம். இடம்பெற்ற வழியெடுத்துங் காட்டுதும். இம்மாறுபாடு எல்லாப் பாஷைகளிலுமுள்ளது. என் செய்வாம்! வினைத்திற மிருந்தவாறு. அது நிற்க, விதித்தபடி இப்போது.

வேதாகமங்களை முறையே வாசியாத குறையால் ஞான சித்திமுதலிய பயனும் இல்லாமற்போனதும், உண்மை ஞானமின்றிப் பசுபந்தயாகமுதலிய அநர்த்தங்கள் நேரிட்டதும், கொலைபுலைமுதலாகிய தீய ஒழுக்கங்கள் விளைந்ததும், பிறவும் ஒன்றல்ல கோடிகோடி!! எண்ணவுமடங்காது மேலோடும். பெண்பால் சூத்திரர் புராணமாத்திரங்கேட்கவேண்டுமென்பது நியாயமே.என்னையெனின்? தேககஷ்டமாகிய புறத்தொழிலால் பாசஞான முணர்த்

தக் கடவுள் வகுத்தாராதலால், அதை விளக்கும் புராணம் பாசநூலாதலின் அதை வாசித்து மேல் அறிவு பெற வேண்டுவது நிச்சயம். இதை விரிக்கிற் பெருகும். இதுபற்றியே நூல்களெல்லாம் அதிகாரி அநாதிகாரிகளைக் கூறியதும். இனி இவர்கள் பேறு முதலியவும் விரி நூலுட் காணலாம்.

## ஜாதி குலம் பொய்யென்ற நூல்களின் கருத்து.

### திருவாசகம்.

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமா...... று
மாதமிலிநாயேனை யல்லலறுத்தாட்கொண்.......... ...டு
பேதைகுணம்பிறருருவம் யானெனதென்னுரைமாய்த்துக்
கோதிலமுதானானைக் குலாவுதில்லைக் கண்டே ... ...னே

### தேவிகாலோத்திரம்.

சமையாசார சங்கற்ப விகற்ப ........................ மு
மமையார்தாங்குலவாசாரமான.......... .......... து
மிமையாதாரும் விடாத வில்வாழ்க்கை.................யு
மமையார் தோளாய் விடுதலாசாரமே................. *

எனவும், வருணச் சிரமமென்பது பொய்யென்றும் அதனை விடுவதே மேலான வீடு அடைதற்கு ஏது வென்றும் சில நூலுள்ளும் வருணச்சிரம பேதமானது தேசவொருமை முதலிய வற்றிற்கு விரோதமென்று சாதாரணமாயுலகவழக்கத்துள்ளும் வழங்கிவருகின்றதாயிருக்க இங்ஙனம் விரிப்பானேனெனில்?

ஆண்டு "சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டு" என்ற திருவாசகமுதலியன பொய்யென்று குறித்த



வாறல்லவென்பது "சாதிகுலம்" என்றதனோடு பிறப்பினையுமுடனெண்ணப்பட்டதனானே உணரப்படுமென்க. என்னை? உயிர்கள் தேகங்கொண்டு பிறந்தது பொய்யல்லவாதலின். பிறவெனின்? அப்பிறப்பினைப் போலவே சாதிகுலமும் மூலவிருளாகிய அறியாமையோடு கூடியிருந்த வுயிர்கள் அறிவிச்சை தொழில் வடிவினவாதலின் இனங்கொண்டுணர்த்தவேண்டி தேகபோக காரணங்களை வகுத்து மெல்லமெல்ல மூடங்கழற்ற மருத்துவன் நோய்க்குப் பத்தியம் வகுத்தாற் போலுஞ் சாதிகுலம் வகுத்தவாறெனவுண்மை யுணர்ந்து, அவ்வழி யொழுகி, அறியாமையை யொழியாது அச்சாதிகுலங் கொண்டு யாமுயர்ந்தோர் பிறர் தாழ்ந்தோர் என்று தருக்கினை யடைந்து, அவ்வழியுமொழுகாது பிறவுயிர்க்குத் துன்பம் விளைத்துத் தாமும் கீழ்ப்பிறவி செல்ல விசைந்துள்ள சீவர்களை நோக்கி யறிவுறுத்தும்படி அங்ஙனங் கூறியவாறு எனவுணர்க.

அதுவுமன்றி, அச்சாதிகுலம்பற்றி விதித்தவாறொழுகி அறிவு முதிர்ந்த பக்குவர்க்கு அதனினு மேம்பட்டநிலைமையுணர்த்தத் தொடங்கிய வழி முன்னர்ப்பழகியிருந்த சாதிகுலப் புறப்பாட்டொழுக்கத் தடை வாதனை நேர்ந்து மேற்சாதகத்தினுக்குக் காலஞ் சாலாது வருத்தும் வழி அதனைப் புறம்பு செய்தற்கு இங்ஙனங் கூறிய வாறுமென்பதொன்று.

அந்தப் பக்கத்துள் தீவினைக் கீடாய் வழுவொழுக்கங்களைச் செய்க வென்பதல்ல அதன் கருத்து, மறந்தும் அச்சாதி குல வொழுக்கத்தால் விலக்கப்பட்ட தீக்குணந் தீயொழுக்கம் வரப்பெறாத வியல்புடையானை நோக்கி அங்கு கருவியா யிருந்த சிறு கரு மஞ்சிலபொருந்தாவாதலின் அவற்றை யொழிக்கக் கூறியவாறென்றுணர்க.

இவ்வொழிப்பு எவ்வகைக் கருமத்துள்ளும் ஒன்றற்கொன்று மறுதலையாக வமைந்துள்ளது; நடத்தலுக் கிருத்தலும் கொடுத்தற் கேற்றலும் போல்வன.

## வருணாச்சிரமங்களின் பயன்.

ஆதலின் எல்லாம் வல்ல விறைவன் படைப்பினுள் அகப்பட்ட அநேகமான வேறுபாட்டு தேகபோகத்தோடுங் கூடியபிறப்பையுடைய ஆன்ம கோடிகளுக்குள் மனிதர் அறிவு தொழில் அனுபவிப்பு முதலிய சிறந்த காரணத்தால் பகுத்துக்கொள்ளுதலோடு அடங்கவும் அடக்கவுமிருத்தலால், மிருக முதலியன அடங்குதலினாலும் அடக்கப்படுதலினாலு முண்டாகும் பயன் காட்சியளவையது. அது போலவே, உயர்ந்ததென்று விசாரிக்கப்பட்ட மனிதப் பிறப்பையுடைய மக்களுள்ளும், அடக்குவாரும் அடங்குவாருமாகவேயிருப்பது எல்லா லௌகிக வைதிககருமங்களுக்கும் அனுக்கூலமும் க்ஷேமமும் பிரயோசனமுமாக விருக்கின்றது என்பதை, அரசு குடி கற்றோர் கல்லார் உபாத்தியாயன் மாணாக்கன் உடையவன் எளியவன் ஏவுவோன் இயற்றுவோன் ஆண்பால் பெண்பால் எனவும், புண்ணிய பாவம்போலத் தொழிலுள்ளும், மேல் கீழ் என இடத்துள்ளும், முன்பின் எனக் காலத்துள்ளும், பிறவற்றுள்ளும் வழங்குவன பலவுள்ளன. அவற்றையுணர்தல் ஒருதலையாக நமது கடனாதலின் இங்ஙனம் விசாரித்தலே நன்றெனவுணர்க.

## வருணாச்சிரமங்கள் சில தேசங்களிலில்லாததற்குக் காரணம்.

சில தேசங்களில் இவ்வருணாச்சிரம பேதங்கள் இல்லாமலிருப்பானேன்? எனில், முன்செய்தவினை மறுபிற



வியுள்ளதென்ற வுடன்பாட் டுணர்ச்சியின்மையே காரணம். அஃதங்ஙனமாக அத்திறத்துடன் பாட்டினரும் உயர்வு தாழ்வு யென்பது தொழிற்றிறனோக்கிக் கடவுளால் ஆக்கப்பட்டதென்றே யுடன்படுகிறார்கள். என்னை? அறிவு-அறியாமை-இளமை-முதுமை - தலைவன் - ஏவலன் - துன்பம் - இன்பம்-பேறு - இழவு-புகழ் - இகழ் முதலிய உண்மையால். இனி அத்தொழிலும் வுலகியற்றொழில் அருளியற்றொழில் என இரண்டு வகை. அவற்றுள், உலகியற்றொழிலும் - துன்ப வின்பமுமாக மக்கட்பிறப்பையுடைய வுயிர்களுக்குச் சிறுகச் சிறுக அஞ்ஞானத்தைப் போக்கும். அஞ்ஞானமென்னும் பாசவறிவு ஒழிந்தக்கணத்திலே கடவுள் அருளாகிய ஆன்மவறிவு வெளிப்படுமாக; அதனால் அருளியற்றொழில் முதிர்ந்து கடவுளையறியு மெய்ஞ்ஞானத்தை யடைந்து நித்திய சுகத்திலிருக்கும் பேறுண்டாம். இக்கருத்து,

(திருவிளையாடற்புராணம், மண்சுமந்தப்படலம்.)

உம்மைநானடுத்த நீராலுலகியல் வேதநீதி........ ......*
செம்மையாலிரண்டுநன்றாய் தெளிந்தது தெளிந்த நீரான்
மெய்ம்மையாஞ்சித்தசுத்தி விளைந்தது விளைந்த நீரால்...*
பொய்ம்மைவானவரினீங்கிப்போந்ததுசிவன்பாற்பத்தி...*

வந்தவிப்பத்தியாலே மாயையின் விருத்தியான... ... ...*
பந்தமாம்பிரபஞ்சவாழ்க்கை விளைவினிற் பட்டதுன்பம்*
வெந்ததுகருணையாகி மெய்யுணர்வின்பந்தன்னைத்... ...*
தந்ததுபாதஞ்சூட்டித் தன்மயமாக்கிற்றன்றே... ... ...*

என்பவற்றாற் காண்க. ஆதலின் ஞானிகள் கூறிய நூல்களின் அநேக விடங்களிலும்.

(சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர் பதிகத்தில்)

கழியாயக்கடலாய்க் கலனாய்நில னாய்க்கலந்தசொல்லாகி
யிழியாக்குலத்திற் பிறந்தோமும்மை யிகழாதேத்துவோம்
பழிதானாவதறி யீரடிகேள் பாடும் பத்தரோ... ... ... ம்
வழிதான் காணாதலம் வந்திருந்தால் வாழ்ந்துபோதிரோ. *

என வருணாச்சிரமங்களை விரித்தும் கடவுளையும் ஆசிரியனையும்— "வேதியனே" என்றும்—" அரசே" என்றுங் கூறுமுகத்தானுங் காணலாம்.

---

## வருணாச்சிரமங்கள் தேயவொருமைக்கு மாறன்றெனல்.

அது நிற்க, இனித் தேயவொருமைக்கு வருணாச்சிரமந் தடையென்பது பொருத்தமாறல்ல. என்னை! வருணமென்பதும் ஆச்சிரம மென்பதும் அறம்பொருள் இன்பம் வீடு பேறு என்னும் உறுதிப் பொருட்பயனை விளைவிக்குங் குணந்தொழில் ஒழுக்க முணர்ச்சியின் விருத்திக்கு ஏதுவாகிய பழக்கத்திற்கு ஏதுவாவதன்றி ஒருவர்க்கொருவரியைபு பெறும் உரிமையைக் கெடுக்கலாற்றாது. என்னை? ஒரு கூட்டம் கட்டுப்பாடு முதலியன பயன் விருத்தி தருமென்பது எத்தேயத்தும் எந்த நாட்டும் உள்ள வழக்கு அதனை விரித்துக் கூறவேண்டுவதன்று; அனுபவத்தாலே யறியலாம். அங்ஙனங் கூடிச் செய்யாவிடத்தும் பழகாவிடத்தும் ஒருவன் ஒரு தொழிலில் சீக்கிரம் ஞானமடைந்து பயன் பெறுதலில்லை.

அன்றியும், இச்சாதிக்குல முதலிய வகுப்பில்லாவிட்டாலும், உலக முழுவதும் ஒருமைப்பாட்டுடன் யிருப்பது யாண்டுமில்லை. அங்ஙனம் அவ்வேற்பாடே இல்லாத பல நாட்டினும், அவ்வொருமைப்பாடு என்பது



தம்முள்ளு மிருப்பதில்லை என்பதுங் கண் கண்டதே. அதுவுமன்றி, பேதமுடைமையே வுலகிய லென்பது எல்லா நூலின் கருத்தும் அனுபவமுமாம். விரிந்த வுலகு எவ்வாறு ஒருமைப்படும் வரம்பின்றி? இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

---

## வருணாச்சிரமங்கள் பரம்பரைப்பற்றி வருவதின்பயன்.

ஆகவே வருணாச்சிரமும் அவ்வாறே பயனுக்குக் காரணமாவதன்றி ஒருமைக் கேட்டுக்குக் காரணமாகாவாம். ஆயின் அது பரம்பரை பற்றி வருவதாற் பயனென்னை எனின்? ஐயந்திரிபு அறியாமையென்னும் முக்குற்றமும் விரைவிலொழிந்து உண்மையுடைய நெறி மரபு தவறாது எளிது பயன் படுவதேயாம். ஒரு பயன் தரு நல்லொழுக்குந் தொழிலும் கைவல்லான் ஒருவன் அதனைத் தன் மக்கள் சுற்றத்தினர்க்கு எளிது விரைவினுணர்த்துவனென்பது பட்டப்பகலே அதற்கு விரித்து வேறு நியாயங் கூறவேண்டா.

தந்தை மகற்காற்று நன்றியவையத்து
முந்தியிருப்பச் செயல். ... ... ... *

என்பது. இனி தேய வொருமைக்குக் காரணமாவது அறிவு ஒழுக்கம் பயன் தயை கொடை உபகாரம் கண்ணோட்டம் முதலியவேயாம்.

அவ்வொருமைக்குப் பகை அறியாமை உலோபம் அழுக்காறு வன்சொல் வன்செய்கை குரோதமுதலிய பலவாம்.

அன்றியும், சிசுவொழுக்கம் பாலியத்திலும், பாலிய

வொழுக்கம் கௌமாரத்திலும், அக்கௌமாரத்தது விருத்ததிசையிலும், ஒவ்வாதிருக்கின்றது. ஆயினும், அவ்வொவ்வாமை ஒருமைக்குத் தடையாவதில்லை. ஆதலால், அவ்வொற்றுமை யுடைய ஒவ்வோர் குடும்பத்துள்ளும், தாய் தந்தை சகோதரர் மனைவி மக்கள்முதலிய சுற்றமும் அன்பிலாமை காரணத்தால் ஒற்றுமை இல்லாமையுங் காண்கின்றோம். ஆயின், இவ்வொழுக்க பேதத்தால் பயன் என்னை? எனில், பருவத்திற்குத் தக்கபடி அறிவையுந் தொழிலையும் விருத்திசெய்துகொண்டு இம்மை மறுமைப்பயனுக்கு யேதுவாகிய அறம்பொருளின்பங்களைப் பெறுதலாம். ஆகவே, வருணாச்சிரம தருமங்களால் அறம் பொருளின்பம் புகழ் முதலியன வுண்டாம் என்பதே துணிவு.

ஆகவே, எத்திற நன்மை தீமைக்கும் ஒத்தகாரணமொன்றிருக்க வேறு சில கூறுவது அறியாமையும் திரிபுணர்ச்சியுமாம். இம்முறைகளை அறிவுடையோர் பலரும் முற்காலத்தும் பிற்காலத்தும் விரித்துரைத்த நூல் பலவுள்ளன, ஆண்டுணர்க. ஈண்டு விரிக்கிற் பெருகும்.

---

## சிதறியவொழுக்கஞ் சீர்பெறச்செயவேண்டுமென்னல்.

ஆதலால் தன்றன் வருணாச்சிரமத் தருமங்களை நன்றுணர்ந்து அறம்பொருளின்பங்களை யதற்குரிய வுபாயத்தாற் றேடி யனுபவித்து அதன்மேல்வற்றிற்குச் சிறந்த பொருளைப் பெற முயல்வது முறைமையாம். அல்லதூஉம், வருணாச்சிரம தருமப்படி யொழுகி முயற்சி செய்யாமையே இப்போது வறுமைக்கு ஏதுவாயிற்று. இதை விரிப்பிற் பெருகும்.



ஆகவே, முற்கூறி வந்ததுபோல, இங்ஙனம் அம்மாயாவாதிகளது மருட்டில் அகப்பட்ட நம்மவர்களிலனேகரும் இன்னுமயங்கி அவத்தைக்குட்பட்டு கருமநிலை கெட்டவர்களாய் பல துன்பத்துள் சிலகாலமாய் அழுந்திக்கிடத்தலினாலும் இன்னுமவ்வாறே மயங்கி அவதிப்படும்படியான ஹேதுக்களே மேன்மேலும் வளர்ந்து வருதலாலும், மேற்சொல்லியபடி முதலிலேயே இம்மாயாவாதிகள் சொல்லை

இளைதாகமுண்மரங் கொலக்களையுநர்
கைகொல்லுங் காழ்த்தவிடத்து *

என்றபடி செய்யாது, அக்காலத்துட் சிறந்த அறிவினையுடைய பெரியோர்களும் அந்நாளிலிருந்த இழிகுலக் குறும்பரசர் முதலியோர் வேதையாலும், மற்றுமதுபோன்ற சில காரணத்தாலும், சோர்வுற்றிருந்தபடியால், இப்போது பெரிய நஷ்டமாயும் அவ்வுண்மை வெளிப்படுத்துவது அதிக கஷ்டமாயு முடிந்திருப்பதுமன்றி, சூத்திராதியரால் புறன்பழிக்கப்பட நேர்ந்தது. ஆதலால்,

“செற்றாரைச் செறுத்தலிற் றற்செய்கை சிறந்தன்று”

என்பது முதுமொழிக்காஞ்சி.

“பெருமையுஞ் சிறுமையுந் தான்றரவருமே”

என்பதுமது.

5927 V
N80
ஆவணக்காப்பக
139960
சென்னை-600 008.